Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°c 28°c

பக்கம் 48 | சுடர்: 28 | கதிர்: 181 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 12, ஞாயிறு 26.05.2013

**செய்திகள்**



பக். 03
நலன்புரி முகாமை விட்டு வெளியேறுமாறு மிரட்டல் இடம்பெயர்ந்த மக்கள் அந்தரிப்பு



பக். 02
சூரியகாந்தி
செப்ரெம்பரில் வடமாகாண சபைத் தேர்தல் சந்தேகமே!

**விளையாட்டு**



பக். 19
ஐ.பி.எல். தொடரில் சென்னைக்கு இறுதி இன்று

# நாட்டை விட்டு ஓடுவதில் முன்னாள் புலிகள் தீவிரம்

## இராணுவத்தினரின் தொடர்ச்சியான கண்காணிப்புகளால் மனமுடைவு

யாழ்ப்பாணம், மே 26

போருக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்த போராளிகளில் பலர் புகலிடம் கோரி வெளிநாட்டுத் தூதரகங்களை நாடுவது கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது என்று 'உதயன்' அறிந்தது.



கடந்த சில மாதங்களில் மட்டும் இவ்வாறான நூற்றுக் கணக்கான வேண்டுகைகள் வெளிநாட்டுத் தூதரங்களுக்கு அனுப்பப்பட்டுள் ளன. போராளிகளின் பிரச்சினைகளை மனிதாபிமான ரீதியாக அணுகக்கூடிய நாடுகள் என்று கருதப்படுபவைக்கே அதிகளவான வேண்டுகைகள் அனுப்பப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு முகாம்கள் என்று இலங்கை அரசு கூறும் தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்டவர்களே இவ்வாறு வெளிநாடு செல்வதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விடுவிக்கப்பட்ட பின்னரும் தாங்கள் கண்காணிக்கப்படுவதும் அடிக்கடி இராணுவ முகாம்களுக்கு அழைக்கப்படுவதும் படையினர் வந்து தம்மைப் பற்றித் தொடர்ச்சியாக தமது வீடுகளில் விசாரிப்பதும் தமது வாழ்க்கையை நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளியுள்ளதால் வெளி

தொடர்ச்சி: பக்கம் 20

## கட்டுநாயக்காவில் தமிழர் கைது

கொழும்பு, மே 26

பிரிட்டன் குடியுரிமையுள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். தவராஜா ரகுநாதன் (வயது-50) என்பவரே கைதானவராவார்.

யாழ்.பிரதம தபாலகத்துக்கு அருகிலுள்ள நட்சத்திர விடுதி உரிமையாளரின் சகோதரரான இவர், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி நீண்ட காலம் பிரிட்டனில் தங்கி இருந்தவர் நேற்று அதிகாலை 12.40 மணியளவில் கட்டுநாயக்காவை வந்தடைந்த போது கைதானார். விசாரணைகளின் பின்னர் நேற்று மாலை அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (த-5)

# வடமாகாண தேர்தலால் புதிய பிரச்சினை வரும்

## எதிர்வு கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, மே 26



வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்தினால் புதிய பிரச்சினைகள் உருவாகும் என்று எதிர்வுகூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

"வடக்கு மாகாண சபையை சிலவேளை தமிழ்க் கூட்டமைப்பு கைப்பற்றினால் நிச்சயமாகக் காணி பொலிஸ் அதிகாரங்களைக் கேட்கும்.

தொடர்ச்சி: பக்கம் 20

# தமிழரை அழிப்பதில் கோத்தபாய மும்முரம்

## மன்னார் ஆயர் சாடல்

கொழும்பு, மே 26



"13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பற்களை அரசு ஏற்கனவே கழற்றிவிட்டது. மிஞ்சியிருப்பது காணி, பொலிஸ் அதிகாரங்கள் தான். அவற்றையும் இல்லாதொழிக்குமாறு சிங்களப் பேரினவாதிகள் சிலர் கூச்சலிடுகின்றனர். அரசு அவ்வாறு செய்யுமானால் தமிழ் மக்கள் இறுதியாக வைத்துள்ள நம்பிக்கையையும் அது இழக்கும்."

- இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மன்னார் ஆயர் நேற்று 'உதயன்'னிடம் தெரிவித்தவை வருமாறு:

தமிழர்களை அடக்கி ஒடுக்கி தமிழ்மொழியைப் புறக்கணிப்பதில் ஹெல உறுமய, பொதுபலசேனா, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட சிங்கள இனவாதக் கட்சிகளும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அமைச்சர் விமல் வீரவன்ஸ உட்பட சிங்கள இனவாத அரசியல்வாதிகள் சிலரும் மும்முரமாகவுள்ளனர்.

இவர்களுடன் சேர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தமிழர்கள் தனிநாடு கேட்கிறார்கள், தமிழீழம் கேட்கிறார்கள் என்று கூறி எமது இனத்தை அழிக்க முற்படுகின்றார்.

ஆனால், தமிழ் மக்கள் தனி நாட்டையோ அல்லது தமிழீழத்தையோ கேட்கவில்லை. வடக்கு, கிழக்கில் சகல உரிமைகளுடன் தம்மைத்தாமே ஆளவே அவர்கள் விரும்புகின்றனர்.

எனவே, சந்தேகத்திற்கு இடமளிக்காமல் வடக்கு மாகாணசபைத் தேர்தலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடன் நடத்தவேண்டும் - என்றார். (த-சி)

# வடக்குத் தேர்தல் சந்தேகம்

## விரைவில் குண்டு போடுவார் மஹிந்த

கொழும்பு, மே 26

"வடக்குத் தேர்தலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிச்சயம் ஒத்திவைப்பார்" என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர அடித்துக் கூறியுள்ளார். அத்துடன், சீனா பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் '13' குறித்த குண்டை ஜனாதிபதி போடுவார் என்றும் எதிர்வு கூறியுள்ளார்.

வடக்குத் தேர்தல் நடைபெறாது என எதிர்க்கட்சிகள் தெரிவித்துவரும் கருத்துக்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, அரசின் முக்கிய அமைச்சரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் கட்சியும் '13' இற்கு எதிராக செயற்படபோவதாக அறிவித்துள்ளது.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில், தான் அன்றும் 13 இற்கு எதிர் என்றும், இன்றும் அதற்கு எதிர் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன கருத்து வெளியிட்டுள்ளதன் மூலம் 13இற்கு எதிரான அவரின் நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

## தீக்குளித்த பிக்கு சாவு

கொழும்பு, மே 26

கண்டிப் புனிதப் பிரதேசத்தில் மாடு வெட்டுவதை எதிர்த்து நேற்றுமுன்தினம் தீக்குளித்த பிக்கு சிகிச்சை பலனின்றி நேற்று மாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் இந்தப் பிக்கு தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீக்குளித்தமை குறிப்பிடத்தக்கது. (த)

SONY make.believe
சிறப்புச் சலுகைகள் ஜூன் 2ஆம் திகதி வரை
BRAVIA
KLV-24EX430 Rs. 39,990 விசேட விலை Rs. 37,990
KLV-32EX330 Rs. 69,990 விசேட விலை Rs. 67,990
DVD Player
DVP-SR320 Rs. 7,499 விசேட விலை Rs. 6,999
HiFi Systems
MHC-GZR777D Rs. 47,990 விசேட விலை Rs. 45,990
MHC-GZR888D Rs. 65,990
Home Theatre Systems
DAV-TZ140 Rs. 25,990
Sony T Shirt
Digital Cameras
DSC-W610 Rs. 16,990 விசேட விலை Rs. 15,990
DSC-W620 Rs. 19,990 விசேட விலை Rs. 18,990
DSC-W630 Rs. 22,990 விசேட விலை Rs. 21,990
DSC-W670 Rs. 26,990 விசேட விலை Rs. 25,990
4GB Card & Case
SONY Warranty
www.facebook/singersl.com www.singersl.com 011 5 400 400 SINGER PLUS யாழ்ப்பாணம் 021 222 5408, சாவகச்சேரி 021 227 0197, சங்கானை 077 2208232, கிளிநொச்சி 0215675677
SINGER Trusted Excellence

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைமுக தீ விபத்துக்கு நாசவேலை காரணமா?

கொழும்பு,மே 26

கொழும்புத் துறைமுகத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட பெரும் தீ விபத்துக்கு நாசவேலை காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முதலாம் இலக்க கொள்கலன் முனையத்தில் ஏற்பட்ட இந்த தீ விபத்தில் 25 கொள்கலன் ஆடைகள் எரிந்து நாசமாகின.

இவற்றின் பெறுமதி பல மில்லியன் ரூபாவாக இருக்கும் என்ற போதிலும் சேதங்கள் இன்னமும் முழுமையாக மதிப்பிடப்படவில்லை.

நேற்று முன்தினம் அதிகாலை 1 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தை அடுத்து, தீயணைப்புப்படையின் எட்டு வாகனங்களும், பொலிஸ், கடற்படை, இராணுவம், விமானப் படை, ஆகியனவும் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன.

இதுவே கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்ட பெரிய தீ விபத்து என்று துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

# அமெரிக்க அதிகாரிகளிடம் விளக்கம் கோருகிறது அரசு

### திருமலை நகர சபையுடனான ஒப்பந்தம் தொடர்பில்

யாழ்ப்பாணம்,மே 26

அமெரிக்கத் தகவல் நிலையத்தை திருகோணமலையில் அமைப்பது தொடர்பில், இலங்கை அரசுக்கும் அமெரிக்க தூதரகத்துக்கும் இடையில் சர்ச்சைகள் தோன்றியுள்ள நிலையில், அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை இதுபற்றி விளக்கம் அளிக்க வருமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட திருகோணமலை நகர சபையுடன், அமெரிக்கத் தூதரகம் கடந்த 22 ஆம் திகதி மேற்கொண்ட ஒப்பந்தம் மூலம் திருகோணமலையில் அமெரிக்கத் தகவல் நிலையத்தைத் திறந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று குறிப்பிடும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம, வெளிநாட்டு தூதரகங்கள் உள்நாட்டில் எத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனாலும் சரி, உள்ளூராட்சிச் சபைகளுடன் உடன்பாடுகளை செய்து கொள்வதானாலும் சரி எமக்குத்தெரியப்படுத்தப்பட வேண்டும்.

எமக்குத் தெரியாமல் திருகோணமலையில் அமைக்கப்படவுள்ள அமெரிக்கத் தகவல் நிலையம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக அமெரிக்க அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கவுள்ளேன் என்று கூறினார்.

இந்த உடன்பாட்டை மேற்கொண்ட அமெரிக்க தூதரக பேச்சாளரும், ஊடக, கலாசார கல்வி விவகாரங்களுக்கான பணிப்பாளருமான கிறிஸ் கோபர்டீல், ஏற்கனவே கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் இவற்றை அமைக்கும்போது வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெறவில்லை. அதனடிப்படையையே திருகோணமலையிலும் பின்பற்றினோம் எனத் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த-5)

> “ தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் ஆளுகைக்கு உட்பட்ட திருகோணமலை நகர சபையு டன், அமெரிக்கத் தூதரகம் கடந்த 22 ஆம் திகதி மேற் கொண்ட ஒப்பந்தம் மூலம் திருகோணமலையில் அமெரிக்கத் தகவல் நிலையத்தைத் திறந்துள்ளது.

## பிரபல பின்னணிப் பாடகர் சௌந்தர்ராஜன் காலமானார்



மதுரை,மே 26

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பிரபல பின்னணி பாடகர் டி.எம்.சௌந்தர்ராஜன் நேற்று சனிக்கிழமை மாலை காலமானார்.

மூச்சுத்திணறல் உள்ளிட்ட பிரச்சினையால் அண்மையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை முடிந்து கடந்த 19 ஆம் திகதி வீடு திரும்பினார்.

இந்நிலையில் வீட்டிலேயே தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று மாலை காலாமானார். இறக்கும்போது அவருக்கு வயது 91.

மதுரையில், 1923ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி மீனாட்சி ஐயங்காரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் சௌந்தரராஜன். 1950ஆம் ஆண்டு கிருஷ்ண விஜயம் படத்தில் ராதே நீ என்னை விட்டுப் போகாதேடி பாடல் மூலமாக சௌந்தரராஜன் தமிழ்த் திரைப் படத்தில் பின்னணிப் பாடகராக அறிமுகமானார்.

அதன் பிறகு தொடர்ந்து இனிய குரலால் பல்வேறு திரைப்படப் பாடல்களைப் பாடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

தமிழில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சினிமா பாடல்களைப் பாடியுள்ளார். இது தவிர, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் பாடல்களைப் பாடியுள்ளார். (த)

## இந்திய - இலங்கை மீனவர்கள் கூட்டாக மீன் பிடிக்கவேண்டும்

### காரைக்கால் மீனவர் கோரிக்கை

சென்னை,மே 26

இலங்கை - இந்திய மீனவர்களும் சந்தித்துப் பேசி, இந்திய-இலங்கைக் கடற்பகுதியில் கூட்டாக மீன்பிடித் தொழில் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் காரைக்கால் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் காரைக்காலிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற காரைக்கால் மீனவர்கள் 26 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

45 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு அவர்கள் அனைவரும் நேற்று முன் தினம் காலை ஊர் திரும்பினார்கள்.

விடுதலையாகி வந்த மீனவர்கள் கூறியதாவது:-

நாங்கள் கடந்த மாதம் 4ஆம் திகதி அதிகாலை காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்றோம். நாங்கள் கோடியக்கரை அருகே இந்திய கடல் பகுதிக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், நாங்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் வந்து மீன்பிடிப்பதாகக் கூறி எங்களைக் கைது செய்தனர். 45 நாள்களின் பின்னர் எங்களை விடுவித்துள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் இம்மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைகிறது. எனவே தடைக் காலம் முடிந்து மீனவர்கள் மீண்டும் மீன்பிடிக்கச் செல்வார்கள். ஆனால் அதற்கு முன்பாக அரசுத்துறை அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டு இரு நாட்டு மீனவர்களும் சந்தித்துப் பேசி, இந்திய - இலங்கை கடற்பகுதியில் கூட்டாக மீன் பிடித் தொழில் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே எதிர் காலத்தில் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவது மற்றும் கைது செய்வது போன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்கும்- என்றனர். (த)

## மன்னார் ஆயருக்கு எதிராக பொது பல சேனா மாநாடு



கொழும்பு,மே 26

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்குச் சவால் விடுக்கும் வகையில் பொது பல சேனா அமைப்பு மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகப் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ தலையீடுகளிலிருந்து மன்னார் மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட உள்ளதாகவும், மன்னார் ஆயரின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் தமிழ் முஸ்லிம் மக்கள் தமது அமைப்புக்கு ஆதரவளிப்பதாகவும் விரைவில் இந்த மாநாடு நடத்தப் படுமெனவும் அவர் கூறியுள்ளார். (த)

# எண்ணெய் விநியோகம் இனிமேல் சவூதியிடம்

### இந்திய நிறுவனத்துக்கு ஆப்பு

கொழும்பு,மே 26

எண்ணெய் விநியோகம் தொடர்பாக இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்துடன் (ஐ.ஓ.சி) செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரத்துச் செய்யவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எண்ணெய் விநியோகம் தொடர்பாக ஐ.ஓ.சி நிறுவனத்துடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்திருந்தது.

இந்த ஒப்பந்தத்தை முறித்து விட்டு, சவூதி அரேபியாவின் அராம்கோ நிறுவனத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளவுள்ளது.

அத்துடன், அராம்கோ நிறுவனத்திடம் சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் செயற்பாடுகளை ஒப்படைப்பதற்கும் இலங்கை அரசு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காகவே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய ஐ.ஓ.சி நிறுவனம் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கையில் நிறுவியுள்ளது.

ஐ.ஓ.சி நிறுவனம் தரம் குறைந்த எரிபொருளை விநியோகிப்பதாக அண்மையில் இலங்கை குற்றம்சாட்டியி ருந்தது.

அதேவேளை, ஐ.ஓ.சிக்கு வழங்கப்பட்ட எண்ணெய் விநியோக ஒப்பந்தத்தை ரத்துச் செய்தால், அதன் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களும் மூடப்படும் நிலை ஏற்படும்.

அதற்குப் பதிலாக அராம்கோ நிறுவனம் 250 எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (த)

> “ ஐ.ஓ.சி நிறுவனம் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கையில் நிறுவியுள்ளது.

## மட்டக்களப்பு நுழைவாயிலில் புத்தர் சிலை வைக்க எதிர்ப்பு

மட்டக்களப்பு,மே 26

மட்டக்களப்பு நகரின் வடக்கு நுழைவாயில் நெடுஞ்சாலையோரத்தில் புத்தர் சிலை நிறுவுவதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி குறித்து நகர மக்கள் பலரும் தமது கவலையை வெளியிட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு நகரிலுள்ள மங்களராமய விகாரையின் விகாராதிபதியினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் புத்தர் சிலை வைப்பதற்கான அனுமதி நெடுஞ்சாலைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பௌத்த மக்கள் வசிக்காத பகுதியில் புத்தர் சிலை வைக்கப்படுவது எந்த வகையிலும் நியாயம் அல்ல என்றும் இது அப்பகுதியில் வாழும் குறிப்பாக, இந்து மக்களைப் புண்படுத்தும் செயலாகவே தாம் கருதுவதாகவும் நகர மக்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு பிரதான நுழைவாயி லில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள வரவேற்பு அலங்கார வளைவுக்கு அருகாமையில் எந்தவொரு மதத்தையும் பிரதிபலிக்கும் அடையாளங்கள் எதுவும் இல்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

குறித்த விவகாரம் தொடர்பாகக் கூடி ஆராய்ந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆட்சேபனையையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

> “ பௌத்த மக்கள் வசிக்காத பகுதியில் புத்தர் சிலை வைக்கப்படுவது எந்த வகையிலும் நியாயம் அல்ல என்றும் இது அப்பகுதியில் வாழும் குறிப்பாக, இந்து மக்களைப் புண்படுத்தும் செயலாகவே தாம் கருதுவதாகவும் நகர மக்கள் பலரும் தெரிவித்துள்ளனர்

நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், மத விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதமர் ரி.எம். ஜயரத்னவுக்கு அனுப்பி அவைத்துள்ள அவசர கடிதமொன்றில் இதனை நிறுத்துமாறு கேட்டுள்ளார். அந்தப் பகுதியிலே கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்திருப்பதையும் அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய செயற்பாடுகள் மக்களிடையே மதங்களுக் [illegible] என்றும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## மரண அறிவித்தல்



### குமரர் நடராசா

வரணி வடக்கு கும்பிட்டான் புலத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரர் நடராசா நேற்று (25.05.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வீரகத்தியார் சின்னம்மா தம்பதியரின் மகனும் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும் கணேசலிங்கம் (ஜேர்மனி), யோகலிங்கம், பிரணவலிங்கம் (ஜேர்மனி), சிவராசலிங்கம் (சுவிஸ்) பஞ்சாட்சரலிங்கம் (சண்டிலிப்பாய், ஆசிரியர் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), சத்தியபாமா (ஜேர்மனி), அகிலேஸ்வரி (சவுதிஅரேபியா) காலஞ்சென்ற துஸ்யந்தன் மற்றும் இராஜேஸ்வரி, துவாரகன்(பிரான்ஸ்) காலஞ்சென்ற துளசிகன் மற்றும் நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தினி, மாலினி, நற்குணராசா (ஜேர்மனி), சற்குணதேவி சுகந்தினி (சுவிஸ்), இரத்தினேந்திரன் (சவுதி), மதனி(ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), லோகறஜனி (லண்டன்), துரேஸ் ஆகியோரின் மாமனாரும் அர்சனா, ஆராதனா, அனுசா, ஓவியா, இந்துஜா, ஆதவன், அபிசன் (ஜேர்மனி), அஸ்வின், ஆருதி (சுவிஸ்), அக்சயா, அருசன் (சவுதி), நாயகன் (லண்டன்), அகராபுதன், அட்சரா (யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை), அஜித்தா, அபிசா (யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.05.2013) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வரணி ஐன்கண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கும்பிட்டான் புலம்,
வரணி.

தகவல்:
பஞ்சாட்சரலிங்கம்
0776557498

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பெண்கள் மீதான வன்செயல்களை தடுக்கத் தேவை விழிப்புணர்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும், போரின் போது தமது கணவர்களை இழந்து விதவைகளானோரின் எண்ணிக்கை 6,170. அவர்களைவிட கணவர்கள் இயற்கை எய்தியதால், விபத்துக்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் 3,902 பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்.

போருக்குப் பின்னர் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அது ஒருபுறமிருக்க, அந்த மாவட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்வதாகவும், கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பல்கிப் பெருகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அவர்களைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணையுமாறும் கிளிநொச்சி அரச அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

கணவர்மாரை இழந்த பெண்கள் தங்கள் குடும்பப் பாரத்தைச் சுமக்க முடியாமலும், அதனால் பிள்ளைகளின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற முடியாமலும் கஷ்டமுறுகிறார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் அன்றி, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லா மாவட்டங்களிலும், பிரதேசங்களிலும், கிராமங்களிலும் இந்த துரதிஷ்டவசமான நிலை தொடரவே செய்கிறது.

இந்தப் பெரும்வகைப் பாதிப்பை, தாக்கத்தைத் தடுப்பதற்கு, தவிர்ப்பதற்கு, தீர்ப்பதற்கு அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தக்க பலன்களை முழு அளவில் தரும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

கணவர்களை இழந்த பெண்களுக்கு, அவர்களின் பிள்ளைகளுக்கு வெறும் நிவாரணங்களும் அற்ப சொற்ப உதவிகளும் நிரந்தரமான, நிலையான வாழ்க்கை மேம்பாட்டைத் தரமாட்டா.

அவர்களின் இயலாமைகளையும் கஷ்டங்களையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் முற்று முழுதாகப் போக்க முடியாது.

அதேபோன்று அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஒரு சேர, விதவைப் பெண்களின் வாழ்வாதாரத் தேவைகளை முழுக்க முழுக்க நிறைவு செய்ய முடியாது.

குறிப்பிட்ட வருடங்களுக்கு இரு தரப்புகளும் இணைந்து செயற்படுவதானாலும், பாதிக்கப்பட்டோரின் நலன்களை மனதில் வைத்து அர்ப்பணிப்புடன் செயற்படும் பண்பும் அதற்கான தகுதியும் தேவை. எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற போக்கில் உதவித் திட்டங்கள் அமைந்தால், பாதிப்புற்றோர் மேலும் கீழே தள்ளிவிடப்படும் நிலையே தேறும்.

இதுவரை மேலே குறிப்பிடப்பட்ட விதவைகளின் பிரச்சினைகளைப் போலவே, அதனைவிடவும் கனத்த பரிமாணம் உள்ளதாக அமைகிறது, அதிகரித்து வருகிறது பெண்களுக்கு எதிரான வன்முறைகள்.

அனைத்துலக மட்டத்தில் கணிக்கப்படும்போது, மூன்று பெண்களில் ஒருவர் ஏதோ ஒரு வகை வன்முறைக்கு உள்ளாகும் நிலை நிலவுவதாக அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவிக்கின்றது.

அதனைவிடவும் பயங்கரமான நிலை என்னவெனில், குடும்பங்களிலும், சமூகத்திலும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளால் ஒரு மில்லியன் பெண்கள் மரணிக்கிறார்கள்.

மலேரியா மற்றும் புதிய புதிய தொற்று நோய்களால் இறக்கும் பெண்களை விட, (குறிப்பாக 15 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்ட பெண்கள்) வன்முறைகளால் இறக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்றும் உலகளாவிய புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் மோசமான நாடு கொங்கோ என்று உலகளாவிய மட்டத்தில் கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு சராசரி ஐந்து சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நாட்டில் வீசும் குற்ற அலைகளில் (Crime Wave) பிரதான இலக்குகளாக பெண்களும் குறிப்பாகச் சிறுமிகளும் இனங்காட்டப்பட்டுள்ளனர்.

சிங்களப் பிரதேசங்கள், தமிழ்ப் பிரதேசங்கள் என்று வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையில், கிராம மட்டத்திலும் சிறுமிகள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்செயல்கள் பல்கிப் பெருகி வருகின்றன.

அவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு மிக அவசர தேவையாகிறது. மக்களிடம் அதற்கான உந்துதல் சமூக மட்டத்தில் பிறந்தாக வேண்டும்.

தொற்று நோய் ஒழிப்புப் பிரசாரம், செயற்றிட்டங்கள் போன்று, பெண்களின் மீதான, சிறுமிகள் மீதான பாலியல் வன்செயல்களை தடுப்பதற்கும், அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அரசும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து செயற்பட வேண்டிய தேவை அவசரம், அவசியம்.



# நலன்புரி முகாமை விட்டு வெளியேறுமாறு மிரட்டல்

## இடம்பெயர்ந்த மக்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், மே 26

உடுப்பிட்டி மத்தியில் அமைந்துள்ள, வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள நலன்புரி நிலையத்தை விட்டு அந்த மக்களை வெளியேறுமாறு காணி உரிமையாளர்கள் கடந்த சில தினங்களாக மிரட்டுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வலி.வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களே குறித்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். தற்போது 16 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேர் தங்கியுள்ளனர்.

உடுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த ஒருவரின் தனியார் காணியிலேயே குறித்த நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் குறித்த மக்களுக்கு அரை நிரந்தர வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் வெளிநாட்டிலிருந்து வந்த குறித்த காணியின் உரிமையாளர்கள், தமது காணியை விட்டு வெளியேறுமாறு மக்களை மிரட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பகுதியிலுள்ள தமது வீட்டைத் திருத்துவதற்கு வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர்கள் முயன்றுள்ளனர். இதனால் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கும் காணி உரிமையாளருக்கும் இடையே முரண்பாடு தோன்றியுள்ளது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் சொந்தக் காணிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அந்த மக்களை வேறிடத்தில் தற்போது தங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# யாழில் உப தபாலகங்களை நவீன மயப்படுத்த வேண்டும்

## பிரதி அஞ்சல் மா அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 26

தபால் திணைக்களத்துக்கென யாழ். மாவட்டத்தில் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுத்தரும் உப தபாலகங்களை நவீன மயப்படுத்தித் தற்கால சூழலுக்கேற்ற சேவையை பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் ஞா. இரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ் உப தபால் அதிபர்கள் தொழிற்சங்கத்தின் 42ஆவது பொதுக்கூட்டம் நேற்று யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையிலேயே அனைத்து பிரதேசங்களுக்கும் மக்களுக்கான சேவையை வழங்கக்கூடிய சேவையாளர்களும் உள்ளனர். உப அஞ்சல் அதிபர்கள் ஒப்பந்த அடிப்படையில் உள்வாங்கப்பட்டபடியால் அரச உத்தியோகத்தர்களாக அங்கீகரிக்க முடியாத நிலைமை இருந்தது.

இலங்கையைப் பொறுத்த வரையில் சம்பளம் ஒருவருடைய கல்வித் தகைமையைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதால் உப தபால் அதிபர்களும் பாதிக்கப்பட்டனர். அஞ்சல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டபோது தனியாகக் கடித விநியோகம் மட்டுமே செய்யப்பட்டது. அதனூடாக இலங்கையிலேயே 'ஏ'தரத் திணைக்களமாக அஞ்சல் திணைக்களம் மாற்றப்பட்டது.

எனினும் தற்போதைய நிகழ்காலத்துக்கு ஏற்றதான மாற்றத்தை தபாலகங்களில் கொண்டு வரவேண்டிய தேவையுள்ளது. முக்கியமாக தொலைத்தொடர்புக்கு ஏற்ற மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

தபால் திணைக்களத்துக்கென யாழ். மாவட்டத்தில் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுத் தருவது உப தபாலகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கையில் 23 ஆயிரத்துக்கும் அதிகமாக தபால் சேவையாளர்கள் கடமையில் உள்ளனர். இவர்களில் 1,800 பேர் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

எனவே 21ஆம் நூற்றாண்டின் நவீனமயப்படுத்தலுக்கேற்ப உப தபாலகங்களை மாற்றி மக்களுக்கான சேவையை வழங்க வேண்டிய தேவையுள்ளது-என்றார்.

சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த உப தபாலதிபர்கள் கலந்து கொண்டனர். (த-14)

# கடும் காற்று காரணமாக நெல்லியடியில் சேதங்கள்



வடமராட்சி, மே 26

சோழகக் காற்று கடந்த சில தினங்களாக மிகக் கடுமையாக வீசி வருவதனால், நெல்லியடி நகரப் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள் என்பவற்றின் விளம்பரப் பலகைகள் முறிந்து விழுந்து சேதமடைந்துள்ளன. நெல்லியடி பஸ் நிலைய பயணிகள் தரிப்பிடத்தின் கூரைத்தகரங்களும் காற்றோடு அள்ளுண்டு சென்றுள்ளன.

இது தவிர வதிரிச் சந்தியில் வீடொன்றின் வேலியோடு நின்றிருந்த பெரிய ஒதிய மரம் ஒன்று அதன் அடிப்பாகத் [illegible] விழுந்துள்ளது.

நெல்லியடி நகரத்தை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளில் நின்றிருந்த வாழை மரங்கள் பலவும் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதேவேளை பலத்த காற்று காரணமாக நெடுந்தீவு- குறிகாட்டுவான் சேவையில் உள்ள தனியார் படகுகள் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாதநிலை உள்ளது.

வடதாரகை மட்டுமே சேவையில் ஈடுபடுகிறது. பலத்த காற்றும் கடல் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளமையால் படகுகளில் பயணிப்பதை பயணிகள் தவிர்த்து வருவதாகவும், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கூட்டுற வுச் சங்கப் படகில் ஐந்து பயணிகள் மட்டுமே பயணத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-8-7)

# திருநெறிக் கழக பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, மே 26

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் திருநெறிக் கழகத்தின் தலைவர் வே.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேலும், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் ந.அருள்சந்திரன், கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் கி.விக்கினராஜா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் சைவசமய பாட ஆசிரிய ஆலோசகர் தா.நிகேதன், மகாதேவா ஆச்சிரமத்தின் குரு முதல்வர் கணேசானந்தசுவாமி ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.விஜயராணி, ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** பணவரவு உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். உத்தியோகத்தில். புதிய சலுகைகள் கிடைக்கும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள்.

**இடபர்:** சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனர்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**கடகர்:** ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**சிங்கர்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கன்னி:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

வைகாசி-13 திங்கட் கிழமை 27.05.2013
திதி: திருதியை பி.இ. 03.17 வரை
நட்சத்திரம்: மூலம் மா. 06.19 வரை
சுபநேரம்: 11.52 - 01.22 வரை
இராகுகாலம்: 07.22 - 08.52 வரை

**துலாமர்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். சிறுசிறு ஏமாற்றம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம்.

**விருச்சிகர்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துப் போகும். தாழ்வு மனப்பான்மை வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் ஏற்படும். அதிகம் உழைக்க வேண்டி வரும்.

**தனுசர்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மகரர்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பர்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள். அயல் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.

**மீனர்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளை கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 7 | 4 | 2 | | 1 | 6 | |
| | | 3 | | 7 | 5 | | | |
| | | | 6 | | 8 | 2 | 3 | 7 |
| 5 | 8 | | | | | | | |
| 2 | | | | | | | | 6 |
| | | | | | | | 4 | 1 |
| 9 | 3 | 8 | 5 | | 6 | | | |
| | | | 2 | 1 | | 3 | | |
| | 1 | 2 | | 8 | 7 | 6 | 5 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 7 | 4 | 2 | 3 | 1 | 6 | 5 |
| 6 | 2 | 3 | 1 | 7 | 5 | 4 | 9 | 8 |
| 1 | 5 | 4 | 6 | 9 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 8 | 1 | 7 | 6 | 4 | 9 | 2 | 3 |
| 2 | 4 | 9 | 8 | 3 | 1 | 5 | 7 | 6 |
| 3 | 7 | 6 | 9 | 5 | 2 | 8 | 4 | 1 |
| 9 | 3 | 8 | 5 | 4 | 6 | 7 | 1 | 2 |
| 7 | 6 | 5 | 2 | 1 | 9 | 3 | 8 | 4 |
| 4 | 1 | 2 | 3 | 8 | 7 | 6 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# அக்ஷதை

## உயர்தர சைவ விருந்து

## வெற்றிடங்கள்

- எமது உயர்தர சைவ உணவகத்துக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்த மானவர்கள் தேவைப்படுகின்றார்கள்.
- இத்துறைகளில் சிறந்த அனுபவமும் தகைமையும் உடையவர்கள் நேரடியாக வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

01. வரவேற்பாளர்கள் **(Receptionist)** - 02
02. காசாளர் **(Cashier)** - 02
03. உணவு பரிமாறுபவர்கள் **(Waiters)** - 15
04. சமையல்காரர்கள் **(Cooks)** - 02
05. சமையல் உதவியாளர்கள் **(Kitchen Helpers)** - 04

உணவு, தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப் படும்.

நிர்வாகம்,
**அக்ஷதை**
**இல. 60, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(ஸ்ரீ நாக விகாரைக்கு முன்பாக)**

(37434) (45.0)


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
21.04.1950

மறைவு
18.04.2013



அமரர்
## பொன்னுத்துரை மங்களேஸ்வரி

கடந்த 18.04.2013 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் (24.05.2013) வெள்ளிக்கிழமை நடைபெற்றன. வீட்டுக் கிரியைகள் இன்று (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரட்ணம் கிறீம் ஹவுஸ்,
டச் வீதி, உடுவில்.

குடும்பத்தினர்.

(C/15068)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








■ புதியவன்

# இலங்கையில் இரண்டாவது அஸ்வமேத யாகம் காரைநகரில்

இராமாயணத்தில் இராவணனைக் கொன்று சீதையை மீட்டு மீண்டும் அயோத்தி மன்னனாகிய இராமன் ஊரார் சொல் கேட்டு கர்ப்பிணியான சீதையை கானகத்துக்குள் கொண்டு சென்று விடுகிறான். அவளுக்கு அங்கு ஒரு முனிவர் தன் ஆச்சிரமத்தில் அடைக்கலம் கொடுக்கிறார். அங்கு அவள் இராமனின் புதல்வர்களான லவனையும் குசனையும் ஈன்றெடுத்து வளர்த்து வருகிறாள். இந்த நிலையில் இராமர் அஸ்வமேத யாகம் ஒன்றை நடத்துகின்றான். அஸ்வமேத யாகத்தின் போது மன்னனின் கொடியுடன் யாகக் குதிரை சுதந்திரமாக நடமாடவிடப்படும். அதன் பின்னே படை வீரர்கள் செல்வார்கள். எங்கெல்லாம் அந்தக் குதிரை போகிறதோ அந்த இடங்கள் யாவும் யாகம் செய்யும் மன்னனின் ஆட்சிக்கு அடிபணிந்து விட்டன என்று அர்த்தம். அதனால் அந்தக் குதிரையோடும் வீரர்களோடும் யாகத்துக்கான அவிசுகளையும் பொருள்களையும் பொன்னையும் அந்தச் சிற்றரசர்கள் கொடுத்து அனுப்புவது வழக்கம். அவ்வாறில்லாம் அந்தக் குதிரையை எந்த மன்னனாவது தடுத்து நிறுத்தினால் அவன் யாகம் செய்யும் மன்னனுடன் போரிட விரும்புகிறான் என்று அர்த்தப்படும்.

இராமனின் யாகக் குதிரை கானகம் வழியாகச் சென்ற போது அதனைச் சிறுவர்களான லவனும் குசனும் பிடித்துக் கட்டிவிடுகிறார்கள். இதனால் வெகுண்டெழுந்த பரதன், இலக்குவனன் முதலான இராமனின் சகோதரர்கள் உள்ளிட்ட படைவீரர்கள் சிறுவர்களோடு போரிடப் போகிறார்கள். ஆனால் வில்வித்தையில் தேர்ந்தவர்களான இராமனின் புதல்வர்கள் அவர்களை புறமுதுகிட்டு ஓடச்செய்கிறார்கள். கடைசியில் இராமனே களத்துக்கு வருகிறான். அவனும் தோற்கும் தறுவாயில் சீதை வெளிப்பட்டு தன் புதல்வர்களிடம் இருந்து குதிரையை விடுக்கிறாள்.

இதேபோன்று மகாபாரதத்திலும் அஸ்வமேத யாகம் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. இந்து மதத்தின் அதி உச்ச நிலை யாகமாக அஸ்வதேம யாகமே கொள்ளப்படுகிறது. இந்தியாவில் பல இடங்களில் அஸ்வமேத யாகம் நடத்தப்பட்டாலும் இலங்கையில் அது நடைபெறுவது மிகக் குறைவே.

''1983 ஆம் ஆண்டு இனக் கலவரங்களால் இலங்கை எரிந்து அடங்கிய காலகட்டத்தில் அமைச்சராக இருந்த இராசதுரையால் பிரேமதாஸாவின் நிதி உதவியுடன் பம்பலப்பிட்டியில் முதன்முறையாக இலங்கையில் அஸ்வமேத யாகம் நடத்தப்பட்டிருந்தது. இப்போது மூன்று தசாப்தங்கள் கழிந்து இலங்கையில் 2 ஆவது அஸ்வமேத யாகம் காரைநகர் மணல்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.'' என்று சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் கூறுகிறார். இவரே அஸ்வமேத யாகம் நடைபெறவுள்ள ஆலயத்தின் பிரதம குரு.

இந்த யாகம் சுமார் 3 கோடி ரூபா செலவில் நடத்தப்படுகிறது. இந்தியாவையும் இலங்கையையும் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட இந்துக்குருமார் ஒன்றிணைந்து இந்த யாகத்தை நடத்தி முடிக்க உள்ளனர். அஸ்வமேத யாகத்தின் பிரதான கூறான குதிரைகள் கண்டியிலிருந்தும் புங்குடுதீவில் இருந்தும் கொண்டு வரப்பட்டு யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உலாச் சென்றன. இறுதியாக நடைபெறவுள்ள வேள்விக்கு என பாகிஸ்தானில் இருந்து உயர் தரக் குதிரைகள் கொண்டு வரப்படவுள்ளன என்றும் கூறப்படுகிறது.

அஸ்வமேத யாகத்தின் முன்னோடியாக குதிரை உலா 3 தினங்களாக யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றது. முதல் நாள் காலை 7.12 மணிக்கு புகலிசிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இருந்து சீறிப்பாய்ந்தபடி புறப்பட்ட புரவிகள் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, அளவெட்டி, சுன்னாகம், புத்தூர், நெல்லியடி, கொடிகாமம் போன்ற இடங்கள் ஊடாகப் பயணித்து அன்றிரவு சிட்டிவேரம் கண்ணகி அம்மன், ஆலயத்தில் தங்கி நின்றன. அடுத்தநாள் அங்கிருந்து புறப்பட்ட குதிரைகளின் ஊர்வலம் கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, செம்மணி, நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, யாழ்நகர், கொக்குவில், ஆனைக்கோட்டை வழியாக காரைநகரைச் சென்றடைந்தது.

இறுதி நாளன்று காரைநகரிலுள்ள ஆலங்கண்டு வீதி, சிவன் கோயிலடி, வலந்தலை சந்தி, கிழக்கு வீதி, துறைமுகம் மேற்கு வீதி வழியாக மீண்டும் ஆலயத்தைச் சென்றடைந்தது. ஏறக்குறைய 57 பிரதேசங்கள் வழியாக யாகக் குதிரைகள் பயணித்திருந்தன. அன்று மாலையே அஸ்வமேத யாகக் கிரியைகளுக்கான ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.


23 ஆம் திகதி வியாழக் கிழமை அஸ்வமேத மகா யாகம் முறைப்படி ஆரம்பமானது. 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள இந்த மகா யாகம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நிறைவு பெறவுள்ளது. யாகத்தின் பிரதம குருவாக சிட்டிவேரம் கண்ணகி ஆலய சிவஸ்ரீ இ.குமாரசுவாமி குருக்கள் தலைமையில் இலங்கை சைவக் குருமணிகளும் இந்திய திருச்செந்தூர் ஆலய வேத பாராயண குருமணிகளும், காயத்திரிபீட குருமணிகளும் பங்கேற்று யாகத்தை திறம்பட நடத்தி முடிக்க உள்ளனர்.

யாகத்துக்கான அவிசுப் பொருள்களாக மா, மூங்கில், கருங்காலி, அரசு, தேக்கு, வில்வம், எருக்கலை, ஆல், நாயுருவி என்பன பெருமளவில் பயன்படுத்தப்பட உள்ளன.


''போரில் மரணித்த வீரர்கள், மக்கள் என்போருக்கான போர் தோஷ நிவாரணியாக இந்த யாகம் நடத்தப்படுகிறது. இந்த யாகத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள இந்துக்கள், வர்த்தகர்கள் மற்றும் நாட்டுப்பற்றாளர்கள் என்போர் பங்கு கொண்டு நாட்டில் சுபீட்சமும் அமைதியும் சாந்தியும் நிலவ பிரார்த்திக்க வேண்டும்.'' என்று வேண்டுகிறார் புகலி சிவசுப்பிரமணியசுவாமி ஆலய பிரதம குரு சோமசுந்தரக் குருக்கள்.



> இந்த யாகம் சுமார் 3 கோடி ரூபா செலவில் நடத்தப்படுகிறது. இந்தியாவையும், இலங்கையையும் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட இந்துக்குருமார் ஒன்றிணைந்து இந்த யாகத்தை நடத்தி முடிக்க உள்ளனர். அஸ்வமேத யாகத்தின் பிரதான கூறான குதிரைகள் கண்டியிலிருந்தும் புங்குடுதீவில் இருந்தும் கொண்டு வரப்பட்டு யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உலாச் சென்றன.



[படங்கள்: தர்சன்-9-253-ரி]







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

**Spoken English With Grammar - Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும்.

**IELTS - British Council**
**B1 - Exam City & Guilds**

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது.

**A1 Exam - Sponsor/Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Young Learners for English (YLE)**

வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch I - 27.05.2013 Batch II - 01.06.2013 Batch III - 03.06.2013 Batch IV - 08.06.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road,
Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

(C/15061)


## சமூக சேவைக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம், மே 26

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரணவாய் மத்தியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை இராஜேஸ்வரி என்பவருக்கு சுய உதவிக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தக் கொடுப்பனவு சமூகசேவைகள்திணைக்களத்தினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பயனாளி தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன்பிரதேசசெயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிர தேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (ந-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மே 26

மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் மண்டைதீவு வேம்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில், ஆலயபரிபாலனசபைத் தலைவர் தலைமையில் நடைபெறும். (ந)


THE HALO TRUST

### கண்ணிவெடி அகற்றுநருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண்,பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது கண்ணிவெடி அகற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதுடன் முற்றாக நீக்க முடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெயபுரம்,வன்னேரி,கிளிநொச்சி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்கள் மற்றும் அனுபவமுள்ளவர்கள் விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதி வைகாசி மாதம் 2013 அன்று வியாழக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஹெலோ ரஸ்ட், 150, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

(35136)(5.6)

### காணி விற்பனைக்கு

கல்வியன்காடு கட்டடப்பிராயில் G.P.S. லேனில் அமைந்துள்ள 2½ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு:077 140 5701

(37421)(5.6)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1990இல் பிறந்த, உத்தர நட்சத்திரம், லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு லண்டனில் PR உள்ள மணமகள் தேவை.

T.P.:077 899 9740

(37420)(5.6)


உ
ஸ்ரீ சுப்பிரமணியம் சகாயம்

# விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விஜய வருஷம், வைகாசி மாதம், 13 ஆம் திகதி (27.05.2013) திங்கட்கிழமை, திருதியை திதி, மூலம் நக்ஷத்திரம், சித்தயோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாளிகை 7.30 இற்குமேல் 8.30 நாளிகைக்குள் காலை 9.00 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் மிதுன லக்கினத்தில்

**சிவஸாயுஜ்ய(லேற்) ஷண்முகநாத குருக்கள் - ஸ்ரீமதி நகுலேஸ்வரி அம்பாளின் பௌத்ரியும்**
**சிவஸாயுஜ்ய (லேற்) சோமாஸ்கந்த ஐயர் - ஸ்ரீமதி நாகேஸ்வரி அம்மாளின் தௌஹித்ரியும்**
**மாவை ஆதீனம் மஹாராஜ ஸ்ரீ ரத்னசபாபதி குருக்கள் - ஸ்ரீ மதி கலாவதி அம்மாள் தம்பதியரின்**
**(Sir lanka) ஜேஷ்ட புத்திரியுமான**

**சௌபாக்கியவதி விஜயா (எ) வேதநாயகி, B.E. யை**

Wedding Wedding

**கேரளா ஸ்ரீமதி சாரதாம்பாள் (Retired High School Teacher) - (லேற்)**
**K.V. வெங்கடேஸ்வரன் அவர்களின் பௌத்ரனும், எனது தமையனார் (லேற்)**
**வெங்கடகிருஷ்ணன் (லேற்) கல்யாணி அவர்களின் சீமந்த புத்திரன்**
**சிரஞ்சீவி V.வெங்கிடேஸ்வரன் M.Sc.,B.Ed.,PGDSIM., விற்கு**

கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய் பகவத் கிருபையால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்கிரகத்தாலும், மாவை ஆதீனம், மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமியாரின் அனுக்கிரஹத்தாலும், மேற்படி முகூர்த்தம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு Chennai - 600061, Nanganallur, No. 08, 11 th Street, SRI RAMANI FUNCTION HALL கல்யாண மண்டபத்தில் (ஆஞ்சனேயர் கோயில் எதிரில்) நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துகளுடன் குடும்ப ஸகிதம் முன்னதாகவே வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதித்து எங்களையும் கௌரவிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கின்றோம்.

**...தங்கள் நல்வரவை நாடும்...**

யானும் அவ்வண்ணமே கோரும்
**ஸ்ரீ-ஸ்ரீமதி V.சிவராமகிருஷ்ணன்.**
கேரளா, தென்னிந்தியா.

ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மாவை ஆதீனம்
மாவிட்டபுரம் தெல்லிப்பழை ஸ்ரீ லங்கா
[illegible]573.

தங்கள் அன்புள்ள
**ஸ்ரீ S.ரத்னசபாபதி குருக்கள்**
**ஸ்ரீமதி R.கலாவதி அம்மாள்**
4/10, பார்திபன் தெரு உள்ளகரம், சென்னை - 91.
044 - 224 20709, 9566160317

அத்துடன் நாளை (27.05.2013) திங்கட்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/15063)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 117

# நடந்து பார்... குருதிக் குளுக்கோஸ் ஓட்டம் பிடிக்கும்....!

■ ஜே.ஆர்.ஷங்கர் லம்பேர்ட்

அதீத தொழில்நுட்பங்களும் நவீன வாழ்க்கை முறைகளும் எம் அன்றாட வாழ்க்கையை இலகுபடுத்தியிருக்கின்ற போதிலும் எம்மிடையே காணப்பட்ட, நாம் அன்றாட வாழ்வில் செய்து வந்த பல இலகுவான உடல் அப்பியாசங்களை இல்லாதொழிக்க காரணமாகியுள்ளன. இதுவே, நாம் தினமும் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டதற்கான அடிப்படைக் காரணியாகும்.

உடற்பயிற்சியில் ஈடுபடுகையில் உடற்தசை இழையங்கள் குளுக்கோசின் முழு வினைத்திறனுடன் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது. அத்தோடு இவ்விளைவானது 1-2 நாள்கள் வரை நீடிக்கிறது. எனவே நாளாந்தம் உடற்பயிற்சியில் ஈடுபடுவதானது குருதியில் குளுக்கோசின் அளவினை சரியான மட்டத்தில் பேணுவதற்கு இன்றியமையாததாகும்.

உடற்பயிற்சியானது பல வடிவங்களில் எம் மத்தியில் காணப்படுகின்றது.

★ வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்தல்.

★ பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் விளையாடுதல்.

★ தோட்டத்தில் அல்லது சுற்றுப்புறத்தில் புற்புதர்களைக் கொத்தி துப்புரவாக்கல்.

★ மேல் மாடிகளில் ஏறும்பொழுது மின் உயர்த்தி (Lift) களில் செல்வதைத் தவிர்த்து படிகளில் ஏறிச் செல்லுதல்.

★ இந்து சமயத்தவராயின் கோயிலை 3,5,7,9 தடவை வலம் வருதல்.

★ வாரம் ஒருமுறை பாத யாத்திரை செய்பவர் எனின் வாரத்திற்கு 2 அல்லது 3 தடவையாக அதிகரித்தல்.

★ சைக்கிலோடுதல், நீந்துதல்.

இவை போன்ற எளிய திட்டங்களை வகுத்துக் கொள்வதன் மூலம் ஆத்ம திருப்தி கிடைப்பதோடு, உடலையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முடியும்.

தினசரி உடற்பயிற்சியில் ஈடுபட்டு சுறுசுறுப்பாக இருப்பதே நீரிழிவினை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் எமது உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும் அடைப்பான ஒன்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இருப்பினும் அந்த உடற்பயிற்சியை சரியான விதத்தில் ஆரம்பித்து அதனைத் தொடர்வதற்கு பல காரணிகள் முட்டுக்கட்டைகளாக அமைந்து விடுகின்றன.

எம்மில் பலர் எப்பொழுதும் சொகுசாக இருப்பதற்கே ஆசைப்படுகின்றோம். இன்றும் சிலர் உடலுக்கு வேலை கொடுப்பதற்கு முயற்சிப்பதும்இல்லை. தயாராகவும் இல்லை. இன்னும் ''என்னைத் தொந்தரவு செய்யாதீர்'' என சொல்பவரும் எம்மிடையே பலர் உண்டு.

நாம் உடற்பயிற்சியின் தாற்பரியத்தை புரிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். நாம் நாளாந்தம் போதுமான உடற்பயிற்சி செய்யாதவிடத்து,

★நீரிழிவின் தாக்கம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு செல்கிறது.

★கட்டுப்பாடாற்ற உணவுப் பழக்க வழக்க முறைகளாலும், போதிய தேக அப்பியாசம் இல்லாததாலும் உடல் நிறையானது மேலும் அதிகரித்து செல்கிறது.

★நீரிழிவினால் உண்டாகக் கூடிய கண், சிறுநீரகம், நரம்புப் பிரச்சினைகள் மற்றும் இதய நோய்களுக்கான ஆபத்துக்களும் அதிகரிக்கின்றது.

★எமது வாழ்க்கை திறனும் குறைவடைகின்றது.

உடற்பயிற்சிகளுக்கு போதுமான நேரத்தை ஒதுக்க முடியாத நிலை, உடற்பயிற்சியை செய்வதற்கு உடல் இடம் கொடுக்காமை மற்றும் உடற்பயிற்சியானது சில வேளைகளில் அதிகுறைந்த குருதியமுக்கத்தை தோற்றுவிக்கலாம் என்ற அச்சமும் உங்களின் உடற்பயிற்சி மீதான நாட்டத்தை குறைத்து நிற்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் உடற்பயிற்சிகளில் ஈடுபடும் பொழுது,

★குருதியில் குளுக்கோசின் அளவை கட்டுப்பாட்டுக்குள் பேண முடியும்.

★ஆரோக்கியமான உடல் எடையை பேண முடியும்.

★மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் புற்றுநோய் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களையும் குறைத்துக்கொள்ள முடியும்.

★அதீத உடல் ஆற்றலை பெறமுடியும்.

★எமது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ள முடியும்.

**முதற்படி எடுத்து வைப்போம்**

உடற்பயிற்சியானது, எமது உடல் ஆரோக்கியமாக இருக்க நாளாந்தம் செய்ய வேண்டிய ஒன்றாகும். நாளாந்தம் உண்ணுதல், உறங்குதல் போன்ற சாதாரண செயற்பாடுகளை போல உடற் பயிற்சியையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை உடற்பயிற்சிக்காக ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஏற்கனவே வீட்டுத் தோட்டம், நடத்தல் போன்ற சில உடல் அப்பியாசங்களை செய்பவராயின் அதன் அளவை சற்று அதிகரித்து மேலும் சிறந்ததோர் பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நீரிழிவு நோய் உடையவராயின் மிதமான அல்லது ஓரளவு தீவிரமான உடற்பயிற்சி வகைகளே பாதுகாப்பான முறைகளாகும். மேலும், நடக்கும் போது உங்கள் கால்களையும் பாதங்களையும் நன்றாக கவனித்துக் கொள்வதோடு குருதியின் குளுக்கோசின் மட்டத்தையும் அவ்வவ்போது சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் உடற்பயிற்சியில் ஈடுபடும்பொழுது உங்கள் இதயத்துடிப்பு வீதம் அதிகரித்தல், சுவாசத்தில் சிறிய சிரமங்கள் ஏற்படல், அதிக வியர்வை, தசைப்பிடிப்பு, சிறுமூட்டு நோவுகள் என்பன ஏற்படலாம். இவை அனைத்தும் சாதாரணமாக நடக்கக் கூடியவையே.

உடற்பயிற்சியை தொடர்ச்சியாக செய்துவரும் பொழுது காலத்துடன் உடல் உறுதி பெறுவதோடு உங்கள் வாழ்க்கை இலகுவானதாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்கும்.

உடற்பயிற்சியை திட்டமிடும் பொழுது எவ்வளவு காலத்துக்கு செய்யப்போகிறேன், எப்பொழுது, எங்கே ஆரம்பிக்கப்போகிறேன், எவ்வகையான உடற்பயிற்சிகளை செய்யப் போகிறேன் என சரியாக திட்டமிட்டுக் கொள்வது அவசியமாகும்.

உடற்பயிற்சியானது அதன் தீவிரத்தை பொறுத்து 10 பிரதான வகுப்புகளில் அடக்கப்படுகிறது.

0-ஓய்வு
1-மிகவும் மிதமானது
2-மிதமானது
3-இடைப்பட்ட மட்டம்
4-ஓரளவு கடினமானது
5-6-கடினமானது (ஆழமான சுவாசம்)
7-9-மிகக்கடினம்
10 - உச்சம்

**மிதமான (1-2) உடற்பயிற்சிகள்**

சுலபமான நடை, தோட்டம் செய்தல், தூசி தட்டுதல், உடைகளை சலவை செய்தல், யோகா, பந்து வீசுதல் போன்றன.



**இடைப்பட்ட மட்ட (3) உடற்பயிற்சிகள்**

வேகமாக நடத்தல், படிகளில் ஏறுதல், நீச்சல், நடனம் என்பன.

**கடினமான (6) உடற்பயிற்சிகள்**

ஓடுதல், சைக்கிளோட்டம், கூடைப்பந்து

நீங்கள் ஒரு தீவிர உடற்பயிற்சிகளில் ஈடுபட விரும்புகின்றீர்கள் எனில், உங்கள் வைத்தியர் அல்லது தேர்ச்சி பெற்ற உடற்பயிற்சி அல்லது போசனையியல் ஆலோசகரிடம் ஆலோசனை பெறுதல் அவசியம்.

**ஓர் எளிய நடை பயிற்சிக்கான திட்டவரைவு**

கீழே தரப்பட்டுள்ள திட்டத்தை பயன்படுத்தி நடக்கும் பயிற்சியில் கிரமமாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

| நிலை | வாரம் | ஒரு வாரத்தில் செய்ய வேண்டிய நாட்களின் எண். | உடற்பயிற்சி மட்டம் | நேரம் (நிமிடம்) |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை | 01 | 02 | மிதமானது | 10 |
| | 02 | 02 | மிதமானது | 10 - 15 |
| | 03 | 02 – 03 | மிதமானது - இடைப்பட்ட மட்டம் | 15 |
| | 04 | 03 | இடைப்பட்ட மட்டம் | 15 |
| முன்னேற்றம் | 05 - 07 | 03 – 04 | இடைப்பட்ட மட்டம் - ஓரளவு கடினம் | 15 - 20 |
| | 08 - 10 | 04 | இடைப்பட்ட மட்டம் - ஓரளவு கடினம் | 20 |
| | 11 - 13 | 04 | இடைப்பட்ட மட்டம் - ஓரளவு கடினம் | 20 - 25 |
| | 14 - 16 | 04 | இடைப்பட்ட மட்டம் - ஓரளவு கடினம் | 25 |
| | 17 - 20 | 04 | இடைப்பட்ட மட்டம் - ஓரளவு கடினம் | 25 - 30 |
| | 21 - 24 | 04 – 05 | கடினம் | 25 - 30 |
| தொடர்தல் | 25+ | 03 - 5+ | கடினம் | 30+ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமீடியாவுடன் இணைந்து ஐரோப்பிய நாகரிகத்தில்

இலங்கையில் ஆண்கள் ஆடைகள் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற முன்னணி நிறுவனமாக திகழும் ஹமீடியா. பெரும் மதிப்பு மற்றும் நேர்த்திமிக்க 'ஐரோப்பிய தொனிப்பொருளிலான ஆடைத் தெரிவுகள் 2013' (European Style themed Collection 2013) இனால் இலங்கையைச் சேர்ந்த மணமகன்களுக்கு மேலும் வெகுமதியளிப்பதன் ஊடாக இவ்வருடம் சர்வதேச மட்டத்திலான அனுபவம் ஒன்றை அவர்களுக்கு வழங்குகின்றது.

'உங்கள் கனவு நாளில் - ஐரோப்பிய நாகரிகப்போக்கு' என்பதே இதனது தொனிப் பொருளாகும். இதன் பிரகாரம் தனது உனதிணிதா மற்றும் FH வர்த்தக குறியீடுகளிலிருந்து பரந்துபட்ட வகைகளிலான ஐரோப்பிய துணிகள். நாகரிகப்போக்கு (ஸ்டைல்) மற்றும் நவீன நாகரிகங்கள் (பெஷன்) போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு ஹமீடியா நிறுவனம் வாக்குறுதி அளிக்கின்றது.



உண்மையிலேயே, அண்மையில் Envoy மற்றும் FH திருமணத் தெரிவுகள் போன்ற வடிவமைப்புக்கள் பங்கேற்றிருந்த மிகவும் பிரமாண்டமான Colombo Fashion Week 2013 நிகழ்வின் போது கொழும்பிலுள்ள பார்வையாளர்கள் இதனது கண்கவர் முன்னோட்டக் காட்சி ஒன்றினை கண்டுகளிக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர்.

'செங்கம்பள டுக்செடோ ஆடைத் தெரிவுகள்' (The Red Carpet Tuxedo Collection) பாரம்பரிய ஆடைகளுக்கு சவால்விடுக்கும் அதேநேரம், கரும் நிறம் மற்றும் சாம்பல் நிறத்தில் தனித்துவமானதொரு நாகரிகப் பாணியை உருவாக்குவதற்காக இடைவிடாது வழிநடாத்திச் செல்லும் வகையில் காணப்படுகின்றது. வசீகர தோற்றத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைப்புச் செய்யப்பட்ட இந்த ஆடைகள், குறிப்பிடத்தக்க நேர்த்தி மற்றும் கண்ணியம் தொடர்பான உணர்வை மீள்வரையறை செய்வதுடன், ஆண்களின் ஆடை அலுமாரியில் நிரந்தர இடமொன்றை பிடிப்பதற்கான வாக்குறுதியையும் வழங்குகின்றன.

அதிசொகுசு திருமண ஆடைத் தெரிவுகள் (Luxury Wedding Collection) மணமக்கள் மற்றும் சிறந்த ஆண்கள் சம்பந்தமானதாகும். கறுப்பு, ஊதா மற்றும் சாம்பல் நிறங்கள் போன்ற மனதை சுண்டியிழுக்கும் கருமையான நிறங்களின் மாறுபட்ட வர்ணக் கலவையை கண்டறியும் முயற்சியில் இது ஈடுபட்டுள்ளது. மென்மையான உள்ளடக்கம் மற்றும் ஒய்யாரமான கைவினையாக்கம் போன்ற சிறப்பம்சங்கள் - சர்வதேச அளவில் மிகப் பிரபல்யம் பெற்ற வர்த்தக குறியீடுகளுக்கு இணையாகும் விதத்திலமைந்த உலகத்தரம் வாய்ந்த முழுமையான திருமண ஆடையாக இவற்றை வடிவமைப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றன.

# அகியுனாஸ் நடைபவனி வெற்றியாளருக்கு புதிய கார்



அகியுனாஸ் (Aquinas) பல்கலைக்கழக கல்லூரியினால் முன்னெடுக்கப்பட்ட 'ஆண்டு நிறைவு நடைபவனி' (Anniversary Walk) நிகழ்வின் முதல் பரிசாக புத்தம் புதிய சுசுக்கி மாருதி 800 சீசீ கார் ஒன்றினை கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது.

கிட்டத்தட்ட 2000 பேர் இந்த நடைபவனியில் பங்கு கொண்டிருந்தனர். அவர்களுள் அகியுனாஸ் பல்கலைக்கழக கல்லூரியின் பழைய மற்றும் தற்போதைய மாணவர்களும் உள்ளடங்கியிருந்தனர். இவர்கள் நாடு முழுவதிலும் இருந்து வருகை தந்திருந்த தமது நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகளுடன் ஒன்றிணைந்து இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இதன்போது, புத்தம்புதிய சுசுக்கி மாருதி 800 சீசீ காரினை கொழும்பு - 15 ஐச் சேர்ந்த செல்வி. ஏ. இந்துமதி வென்றெடுத்தார். கொழும்பு புனித ஜோசப் கல்லூரியின் அதிபரான அதிவணக்கத்திற்குரிய அருட்தந்தை பீற்றர் பிள்ளை ஓ.எம்.ஐ. அவர்களினால் 1953ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட அகியுனாஸ் பல்கலைக்கழக கல்லூரியானது, இலங்கையின் உயர் கல்வித் துறையில் மிக முக்கியமான ஒரு கல்வியகம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இக்கல்லூரி இவ்வருடம் தனது 60ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. அத்துடன் கடந்த ஆறு தசாப்தங்களாக இதனது கல்விசார் நுழைவாயில்களின் ஊடாக முழுமையான ஆற்றல் கொண்ட பட்டதாரிகளாக பெருந்தொகையான மாணவர்கள் கல்விகற்று வெளியேறியுள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற பிரமாண்டமான SLIM வர்த்தக குறியீட்டு சிறப்புத்துவ விருதுகள் 2012' நிகழ்வின் போது ஆண்டின் மிகச் சிறந்த சேவை வர்த்தகக் குறியீடு பிரிவில் எதிர்பார்ப்புமிக்க தங்க விருதையும் ஆண்டின் மிகச் சிறந்த உள்நாட்டு வர்த்தக குறியீடு பிரிவில் வெண்கல விருதையும் பெற்றுக் கொண்டதன் மூலம் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் இரட்டை வெற்றி வாகையை சூடிக்கொண்டது. SLIM விருது வழங்கலின் வரலாற்றிலேயே வர்த்தக குறியீட்டின் சிறப்புத்துவத்திற்காக நிதிக் கம்பனியொன்று தங்க விருது வழங்கி அங்கீகாரம் அளிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

# வணிகத்தின் எதிர்காலம் e குறித்து லீப்செட் ஆய்வு

SLASSCOM மூலம் அண்மையில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த CXO செயலமர்வின் போது, பிரதான கருத்துரையை வழங்கிய லீப்செட் நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஜிம் ஓகொன்னர், e வணிகத்தின் எதிர்காலம் குறித்த பல முக்கிய விடயங்களை முன்வைத்திருந்தார். இந்த செயலமர்வானது,



e வணிகத்துறையில் தற்போது காணப்படும் வாய்ப்புகள், எதிர்காலத்தில் இந்த துறையில் இடம்பெறக்கூடிய அபிவிருத்திகள் மற்றும் நிபுணர்களின் எதிர்வுகூறல்கள் குறித்த பல விடயங்கள் ஆராயப்பட்டிருந்தன. இதன் போது கருத்து தெரிவித்திருந்த லீப்செட் நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஜிம் ஓ கொன்னர் கையடக்க மொபைல் வணிக சந்தை வாய்ப்பு, மொபைல்களில் பார்வையிடக்கூடிய இணையத்தளங்களின் பெருக்கத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கணினிகளின் மூலமான தேவைகளை கையடக்க தொலைபேசிகளின் மூலமாக நிவர்த்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தமை, ஒன்லைன் - ஓஃவ்லைன் சந்தை முறை மற்றும் மொபைல் கொடுப்பனவு முறைகளை ஏற்கும் அப்பிள் மற்றும் கூகுள் வொல்லட் போன்றன பெருமளவு அனுகூலங்களை வழங்கக்கூடியனவாக அமைந்துள்ளன என தெரிவித்திருந்தார்.

ஜிம் ஓ கொன்னர் இணைய பொருட்கள் நிர்வாகத் துறையில் சுமார் 12வருடகாலத்துக்கும் மேற்பட்ட கால அனுபவத்தை கொண்டுள்ளார். லீப்செட் நிறுவனத்தில் இடம்பெறும் அனைத்து புதிய பொருட்களின் வடிவமைப்பு, வாடிக்கையாளர் சேவைகள் மற்றும் நுகர்வோர் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு பொறுப்பானவராக செயலாற்றி வருகிறார். நிதித்துறை சேவைகள் மற்றும் நவணிகம் போன்ற செயற்பாடுகளில் பரந்த அனுபவத்தை கொண்டுள்ள இவர், லீப்செட் நிறுவனத்துடன் இணைந்து கொள்ளும் முன்பாக மொன்வியா எல்எல்சி நிறுவனத்தின் பொருட்கள் பிரிவின் உப தலைவராக செயலாற்றியிருந்தார். Yahoo நிறுவனத்தின் பொருட்கள் நிர்வாக பிரிவின் பணிப்பாளராகவும் செயலாற்றியிருந்த இவர், Yahoo நிதி பொருட்கள் குழுவுக்கும் தலைமை தாங்கியிருந்தார். இந்த பிரிவு 7 ஆண்டு காலப்பகுதியில் பெருமளவு வளர்ச்சியை எய்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் மேலும் பல முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், உதாரணமாக, மிகப்பெரியளவிலான விற்பனை நிலையங்களாக திகழும் டார்கெட் மற்றும் பெஸ்ட் பை போன்றன இணையத்தளங்களின் ஊடாகவே காட்சியறைகளில் காணப்படும் பொருட்களை தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன. அது போன்று ஸ்டார்பக்ஸ் விசேட அன்பளிப்பு அட்டை ஒன்றையும் அறிமுகப்படுத்தியிருந்தது. பாஸ்போர்ட் மற்றும் வொல்லட் சேவைகளான கூகுள் வொல்லட், IOS பாஸ்புக் மற்றும் [illegible] போன்றன இந்த [illegible] வெற்றிகரமாக முன்னெடுக்க பெருமளவு உதவி வருகின்றன என்றார்.

(த)

# ஹேமாஸ் வைத்தியசாலையில் சமூக சுகாதாரத் திட்டங்கள்



சமூகமொன்றின் சுகாதார நலனில் பிரதிபலிப்பை ஏற்படுத்தக்கூடிய சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஹேமாஸ் தலவத்துகொட வைத்தியசாலை ஆரம்பித்துள்ளது. சுகாதார விழிப்புணர்வு தொடர்பாக இலவசமாக அமைந்த விழிப்புணர்வு திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் அண்மையில் தலவத்துகொட ஹேமாஸ் வைத்தியசாலையில் இடம்பெற்றிருந்தது.

மக்களின் பாவனைக்காக இந்த வைத்தியசாலை எதிர்வரும் ஜூன் மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. இந்த திட்டத்தின் தலைப்பு பொதுவான இருதய குறைபாடுகள் மற்றும் அவற்றை தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து விளக்கங்களை பொது மக்களுக்கு வழங்குவதாக அமைந்திருந்தன.

இத் திட்டத்தை இலங்கை தேசிய வைத்தியசாலையின் இருதய சிகிச்சை நிபுணரான வைத்தியர் சம்பிக பொன்னம்பெரும முன்னெடுத்திருந்தார். இந்த திட்டத்தில், இந்த பிரதேசத்தை சேர்ந்த பெருமளவான பொதுமக்கள் பங்குபற்றி அனுகூலங்களை பெற்றிருந்தனர். இவ்வாறு பங்குபற்றிய வர்களுக்கு இலவசமாக குருதியிலுள்ள சர்க்கரையின் அளவு குறித்த பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த செயலமர்வின் போது, பொது விடயங்களான அறிகுறிகள், விளைவுகள், ஆபத்தான நிலைகள், உடனடி சிகிச்சை, தவிர்த்தல் மற்றும் நோய் தவிர்ப்புக்காக மேற்கொள்ளக்கூடிய விசேட நடவடிக்கைகள் குறித்த விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

சமூக நலன் கருதி இது போன்ற திட்டங்களை மாதமொரு தடவை முன்னெடுக்க வைத்தியசாலை திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு செயலமர்விலும் சுமார் 100 - 150 பங்குபற்றுநர்களை உள்வாங்க வைத்தியசாலை திட்டமிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சிப் பலன்கள்

■ மீனா எம்.பி.ராமன்



## கன்னி

குருபகவான் 27.05.2013 முதல் புதனை அதிபதியாக கொண்ட உங்கள் கன்னி ராசிக்கு பத்தாம் இடமாக விளங்கும் மிதுன ராசியில் சஞ்சரிக்கிறார். எதைச் செய்வதாக இருந்தாலும் ஒரு முறைக்கு பல முறை அலசி ஆராய்ந்து தெளிவு பெறாமல் செய்யமாட்டீர்கள். மற்றவர்கள் மத்தியில் மிடுக்குடனும், கம்பீரத்துடனும் இருக்க ஆசைப்படுபவராக இருப்பீர்கள். மற்றவர் உங்களிடம் ஏமாறுவார்களே தவிர, அவ்வளவு எளிதில் யாரிடமும் ஏமாற மாட்டீர்கள். என்றாலும் சிலர் சாதுரியமாகப் பேசி கவிழ்த்து தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்கள்.

தாய்ப்பாசம் மிகுந்து காணப்படும் உங்களிடம் தெய்வ பக்தியும் சிறந்து விளங்கும். ஏழை எளியவர்களுக்கு அதிக நன்கொடை கொடுக்கிறாரோ இல்லையோ ஆலய கட்டுமானங்களுக்கும், பூசை திருவிழா போன்ற நிகழ்ச்சிக்கும் வாரி வழங்குவீர்கள்.

தொழிலில் புதுப்புது யுக்திகளை புகுத்தி, அடுத்தவர்களைக் காட்டிலும் அதிக லாபம் சம்பாதிக்க வழி முறை கண்டுபிடிப்பதோடு சம்பாதித்தும் காட்டுவீர்கள். சொல்புத்தியை விட பட்டறிந்து தெரிந்து கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டுவீர்கள். சில நேரங்களில் சோர்ந்து போய் இருந்தாலும் தொழிலில் இறங்கி விட்டால் சுறுசுறுப்புடன் உழைக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

வம்பு வழக்கில் அதிகம் ஈடுபடாமல் ஒதுங்கியே இருப்பீர்கள். தேவையில்லாமல் எந்த வில்லங்கத்திலும் மாட்டிக் கொள்ளமாட்டீர்கள். அப்படி வீணாக வந்துவிட்டால் லேசில் விடமாட்டீர்கள். பணம், பொருள் செலவானாலும் இரண்டில் ஒன்று பார்த்து விடுவீர்கள். தன் பொருளாதாரம் கொஞ்சம் தாழ்ந்தாலும் மனச் சங்கடப்படுவீர்கள். அதையே நினைத்துக் கொண்டிராமல், சீர் செய்ய நினைப்பீர்கள். எப்போதும் பத்துப் பேர் முன்னிலையில் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என நினைப்பீர்கள்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் எதிர் பார்த்திருந்த இடமாற்றம் தள்ளிப் போகும். இதோ அதோ என்ற ஆசை காட்டினாலும் உயரதிகாரிகளின் சிபாரிசு இல்லாமல் எதுவும் நடக்காது. காரியம் சாதிக்க வேண்டி அது போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டாம். உங்களை பரிசோதிக்கக் கூட அப்படியொரு வலையை விரித்திருக்கலாம். அதனால் முறைப்படி நடக்கும்போது நடக்கட்டும் அதுவரை காத்திருப்பதில் தவறில்லை.

இந்த ராசிக்காரர்கள் சாதித்துக் காட்டும் தருணம். விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், இலக்கியப் போட்டிகளில் பரிசும் வெகுமதியும் பெற்றுச் சாதிப்பார்கள். தேசிய அளவிலான போட்டிகளில் விளையாடி புகழ் சேர்க்கும் வாய்ப்பு வந்து சேரும். இதற்கு ஆசிரியப் பெருமக்களின் ஆலோசனை தேவைப்படும். அரசின் உதவி கிடைக்கும். விளையாட்டுக்குத் தேவையான உபகரணப் பொருள்கள் வாங்க தனியார் நிறுவனங்கள் உதவ முன்வரும். கொடுக்கல் வாங்கலில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. ஏற்கனவே நிலவி வந்த அசாதாரண சூழலும் விலகும். தேவைப்படும் நேரத்தில் உறவினர்கள் நண்பர்கள் நிதி உதவியால் கடன் தொல்லைகளில் இருந்து மீண்டு வருவீர்கள். எந்தக் காரணம் கொண்டு தெரியாத நபர்களுக்கு முன்நின்று பிணைக் கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்கிக் கொடுக்காதீர்கள். அதனால் பிரச்சினைகளால் சிக்கி மனம் உடைந்து போக நேரிடும். பெற்றோர்களின் ஆசீர்வாதம், ஆலோசனை கேட்க மறக்க வேண்டாம். நினைத்திருந்த காரியங்கள் ஒவ்வொன்றாக நடக்கும். உடனே நடக்க வேண்டும் என்று அவசரப்பட வேண்டாம். தானாக நடக்கும் வரை பொறுமை காப்பது நல்லது. குருபகவான் அருளைப் பெற வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து, அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரித்து பக்தியுடன் வணங்கி வரவேண்டும். முதலில் விநாயகப் பெருமானையும், பின் குரு பகவானையும், பிறகு உங்கள் ராசிக்கு அதிபதியான புதன் பகவானையும் வணங்க வேண்டும்.

பிள்ளைகளின் மேற் படிப்புக்கு தாய் வீட்டிலிருந்து பண உதவி வந்து சேரும். சகோதர, சகோதரிகளிடம் நிலவிவந்த அசாதாரண நிலை மாறும். அவர்களின் சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மகிழ்வார்கள். வீடு, நிலம் மற்றும் நகைகள் முக்கிய செலவுகளுக்காக அடமானம் வைக்க நேரிடும். அலுவலகத்தில் ஏற்படும் பணப்பிரச்சினைகளை சமாளிக்க மேலதிகாரிகளின் உதவியை நாடுவார்கள். பொருளாதாரத்தை சீர்ப்படுத்த சிரமப்படுவார்கள்.

மாணவ- மாணவிகளுக்கு மனப்பாடம் செய்வது மறந்து போகும். தேவையில்லாத குழப்பம் ஏற்படும். மனதை ஒருமுகப்படுத்த யோகா, தியானப் பயிற்சி மேற் கொள்ளுங்கள். மேற்படிப்புக்கான படிப்பில் இன்னும் அதிக கவனம் செலுத்துங்கள். பெற்றோர், ஆசிரியர்களின் ஆசீர்வாதத்தையும், பாராட்டையும் பெற்று மேலும் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். ஊர் சுற்றல், தொலைக்காட்சி பார்ப்பது போன்ற காரியங்களை குறைத்துக் கொள்வது நல்லது.

**27.5.2013 முதல் 9.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருகசீரிடம் நட்சத்திரம், மூன்றாம் பாதம், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் உங்களுக்கு ஆதரவாக உறவினர்கள், நண்பர்கள் இருப்பார்கள். புதிய தொழில் தொடங்க நிதி உதவுவார்கள். மனைவி, தாய் வீட்டிலிருந்து நல்ல செய்தி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

விவசாயிகளுக்கு பூ வகைகள், கிழங்கு வகைகள் பயிரிடுவதன் மூலம் விளைச்சல் அதிகரித்து நல்ல லாபம் அடையலாம். விவசாயத்துக்குத் தேவையான உபகரணப் பொருள்களை வாங்குவார்கள். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**10.6.2013 முதல் 24.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருகசீரிட நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் பணம் தருவதாக சொன்னவரை நம்பி பயணமாவது வீண் அலைச்சலைக் கொடுக்கும். கேட்ட இடத்திலிருந்து எந்த உதவியும் உடனே வந்து சேராது. நாள்கள் தள்ளிக் கொண்டே போகும். உடல் நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். மருத்துவரின் பரிந்துரைப் படி மருந்து மாத்திரைகளை சரிவர எடுத்துக் கொள்ளுங்கள்.

**25.6.2013 முதல் 8.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், முதல் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிப்பதால் உங்கள் ராசிக்கு அதிபதியாக புதன் இருப்பதாலும் ஓரளவுக்கு கடன் சுமையிலிருந்தும் விடுபட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும். கவனமாக இருக்கவும்.

பங்காளிகளிடமும், சுற்றத்தாரிடமும் நிலவும் மோதல் போக்கு விலகும். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றம் காணப்படும்.

**9.7.2013 முதல் 23.7.2013 வரை**

இப்போது குரு பகவான் திருவாதிரை நட்சத்திரம், இரண்டாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் குழந்தைப் பாக்கியம் இல்லை என்ற நீண்ட நாளைய கவலை தீரும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் கலகலப்பும் உண்டாகும். மாணவ, மாணவிகள் கெட்ட சகவாசத்தை உடனே விட்டுவிடுவது நல்லது. வழி தவறிப் படிப்பில் ஆர்வம் குறைய வாய்ப்புள்ளது. தேர்வில் நூற்றுக்கு நூறு எடுக்க வேண்டும் என்று மனதில் உறுதி ஏற்கவும்.

தொழிலாளர்கள் போராடிப் பெற வேண்டும் என்று நினைத்திருந்த கோரிக்கை சுலபமாக கிடைக்கும். சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கூடும். அவர்களிடத்தில் மதிப்பு உயரும்.

**24.7.2013 முதல் 8.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், மூன்றாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் நீண்ட காலமாய் இழுத்தடித்துக் கொண்டிருந்த பூர்வீக சொத்து வழக்கு உங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகும். பொருளாதாரம் சிறந்து விளங்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் அலுவலக நண்பர்களின் அரட்டைகளில் கலந்து கொள்ள வேண்டாம். உங்கள் பெயரைக் கெடுப்பதற்கென்றே மேலதிகாரிகளிடம் புகார் செய்து தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**9.8.2013 முதல் 26.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சதிரம், நான்காம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் எண்ணியிருந்த அனைத்தையும் நிறைவேற்றித் தரவிருக்கிறார். பொருளாதாரம் நல்ல முறையில் செழிக்கும். தொழிலில் ஏற்பட்ட முட்டுக்கட்டை விலகி சூடுபிடிக்கும்.

சகோதர சகோதரிகளிடம் பெற்ற கடனுக்காக நெருக்கடி மேலும் அதிகரிக்கும். பேச்சு வார்த்தை முற்றி பிரிந்திருக்கும் நிலை உருவாகும். அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். முன் கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**27.8.2013 முதல் 16.9.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிப்பதாலும் உங்கள் கன்னி ராசிக்கு புதன் அதிபதியாக இருப்பதாலும் ஓரளவுக்கு நன்மையான பயன்களையே எதிர்பார்க்கலாம். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் கையெழுத்தானாலும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்காது. பெண்களின் மதிப்பு உயரும். குடும்பத்திலுள்ள அனைவரும் உங்கள் பேச்சுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள். தன் பெயரில் நிலம் மற்றும் வீடு ஆகிய அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் கிடைக்காது. பிள்ளைகள் காதல் விவகாரங்களை சொல்லும் நிலை ஏற்படும். கோபப்படுவதால் எந்தப் பயனும் இருக்காது. அனுசரணையாகவும், பொறுமையாகவும் பேசிப் பாருங்கள். நல்லது என்று தெரிந்தால் சம்மதம் சொல்லுங்கள்.

**17.9.2013 முதல் 18.10.2013 வரை**

இப்போது குருபவான் புனர்பூச நட்சத்திரம் , இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் பல ஆண்டுகளாய்ப் பிரிந்து , ஒன்று சேராத பங்காளிகள் குடும்பம் ஒன்று சேரும். குடும்பத்துடன் விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். பிள்ளைகள் திருமணத்துக்கு ஆரம்பக்கட்ட பேச்சு வார்த்தை தொடங்குவார்கள்.

தொழிலுக்கு இதுவரை முட்டுக் கட்டை போட்டு வந்த எதிரிகள் கூட உங்களிடம் சமரசம் பேசி சரணடைந்து விடுவார்கள்.

**19.10.2013 முதல் 13.11.2013 வரை**

இப்போது குரு பகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிகிறார். இந்தக் காலகட்டத்தில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காரியமும் ஏதாவது தடங்கல் ஏற்பட்டு பாதியில் நின்று போகும்.

கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றும். அடிக்கடி சண்டை சச்சரவு ஏற்பட்டு மன நிம்மதி கெடும். பெண்கள் எதிர்த்து வாயாடுவதை குறைக்க வேண்டி வரலாம். மாமனார், மாமியார் தூற்றுவதை தாங்கிக் கொள்ளும் அவசியம் ஏற்படும். வெளிநாட்டிலிருந்து வரும் செய்தி மகிழ்ச்சியைக் கொடுக்கும், சகோதரி வீட்டு சுபநிகழ்ச்சிக்காக செலவு வந்து நிற்கும்.

**14.11.2013 முதல் 1.12.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில் வக்கிர நிலையில் சஞ்சரிக்கிறார். வக்கிர நிலையில் சஞ்சரிப்பதால் என்னென்ன தீமைகளை செய்வாரோ என்று கவலைப்படாதீர்கள். ஓரளவுக்கு நல்லதையே செய்யக் காத்திருக்கிறார். பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமைதேடித்தருவார்கள். பொருளாதாரம் வருவதற்கும் போவதற்கும் சரிசமமாக இருக்கும். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். சில தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய உத்தரவிடுவார்கள். கூடவே இருந்து தீமை செய்து வந்த நண்பர்களின் நட்பு முறியும். கடனால் அவமானப்பட்டு வந்த காலம் மறைந்து, மற்றவர்களுக்குக் கடன் உதவி செய்வார்கள். சகோதர சகோதரி வீட்டுப் பிள்ளைகளுக்கு முன் நின்று திருமணம் செய்து வைப்பார்கள். உறவினர்கள் பாராட்டி மகிழ்வார்கள்.

**2.12.2013 முதல் 2.1.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதத்தில் தொடர்ந்து வக்கிர நிலையை விட்டு விலகாமல் சஞ்சரித்து வருகிறார். இந்தக் காலகட்டத்தில் சில தவிர்க்க முடியாத பிரச்சினைகளுக்காக வீடு, நிலம், நகைகளை அடமானம் வைக்க நேரிடும். குடும்பத்தில் மகிழ்ச்சி குறையும். தாய் வழி சொத்தில் வில்லங்கம் ஏற்பட்டு வரவேண்டிய ஆதாயம் தடைப்படும். கேட்பார் பேச்சைக் கேட்டு குடும்பத்தில் குழப்பம் ஏற்படுவதை தடுக்க முயலுங்கள். தியானம், யோகா பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் அடையலாம்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

**3.1.2014 முதல் 26.1.2014 வரை**

இப்போது குருபகவான் தொடர்ந்து வக்கிர கதியில் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதத்தில் சஞ்சரிப்பதால் குறுக்கு வழியில் சம்பாதித்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதை அறவே விட்டுவிடுங்கள். அதனால் உறவினர் மற்றும் நண்பர்கள் மத்தியில் அவமானப்படும் நிலை ஏற்படும்.

கணவன் மனைவி உறவு மேம்படும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மகிழ்வார்கள். பொன்னாபரணம், ஆடை அணிமணிகள் வாங்கி வந்து குடும்பத்தினரை ஆச்சரியத்தில் மூழ்கடிப்பார்கள். அவர்களின் தேவைகள் யாவும் நிறைவேற்றுவீர்கள்.

**27.1.2014 முதல் 11.3.2014 வரை**

இப்போது குருபகவான் வக்கிர கதியிலிருந்து விலகி, நிவர்த்தி அடைந்து, திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் பொருளாதாரம் எப்போதும் போலவே சிறப்பாக இருக்கும். திடீர் வெளியூர் பயணம் பயனைக் கொடுக்கும். முக்கிய நபரின் நட்பின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

மனைவியின் தாய்வழி பூர்வீக சொத்தின் பங்குத் தொகை வந்து சேரும். குடும்பத்துடன் ஆலய வழிபாடு செய்ய குலதெய்வம் கோயிலுக்குச் சென்ற வருவது நல்லது. வெளிநாட்டில் வாழும் பிள்ளைகளிடமிருந்து விரும்பத்தகாத செய்தி வரலாம்.

**12.3.2014 முதல் 6.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம் ஒன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கும் இந்தக் காலகட்டத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள் கையூட்டு பெறுவதன் மூலம் வேலை இழக்கும் அபாயம் ஏற்படலாம். மேலதிகாரிகளின் கவனம் முழுக்க உங்கள் மேல் இருப்பதை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள்.

**7.5.2014 முதல் 25.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம் , இரண்டாம் பாதம் சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் ஏதேதோ காரணங்களால் தள்ளிப் போய்க் கொண்டிருந்த பிள்ளையின் திருமணத்தை ஆடம்பரமாக நடத்திக் காட்டி அனைவரையும் ஆச்சரியப் படுத்துவார்கள். அதற்கான செலவு தொகை எங்கிருந்தாவது புரட்டி விடுவார்கள்.

குடும்பத்தினரின் நீண்ட நாளைய ஆசைகளையெல்லாம் தீர்த்து வைப்பார்கள். எதைத் தொடங்கினாலும் பெற்றோர், மனைவியின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி நடந்து கொள்வதால் நன்மை உண்டாகும்.

**26.5.2014 முதல் 11.6.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதம் தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் உத்தியோகம் பார்ப்பவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான இடமாற்றம் தற்போது கிடைக்கும். அதற்காக சக ஊழியர்களுக்கு விருந்து உபசரிப்பு நிகழ்ச்சிக்காக செலவு செய்ய வேண்டியிருக்கும்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி ஜெயந்திநகரிலுள்ள மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்துக்கு வருகை தந்த தந்தை செல்வா பவுண்டேசன் நிறுவன அதிகாரிகளும் இல்லத் தலைவரும் சிறார்களால் மலர்மாலை அணிவித்து அழைத்து வரப்படுகின்றனர். (ஸ)



கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ஸ-18)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவர்களுக்கு அக்கராயன் மருத்துவமனையின் பற்சிகிச்சை மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொள்கின்றனர். (ஸ-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல-01 பாடசாலையில் நடைபெற்ற பொங்கல் விழா. (ஸ-18)



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது ஆரம்பப்பிரிவு மாணவர்கள் உடற்பயிற்சி நிகழ்வில் ஈடுபடுகின்றனர். (ஸ 402)




இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையின் கரைச்சிப் பிரிவின் ஏற்பாட்டில் நான்கு நாள் அடிப்படை முதலுதவிப் பயிற்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற போது சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் தலைவர் த.குருகுலராசா கரைச்சிப் பிரிவின் செயலாளர் த.சேதுபதி, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்க பிரதிநிதி மஞ்சுள புஸ்பகுமார ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ஸ 405)



கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு என அமைக்கப்பட்ட முதலாவது கட்டடத்தை திறந்து வைப்பது தொடர்பாக பெற்றோர்களுடன் பாடசாலை அதிபர் கலந்துரையாடுகின்றார். (க-18)



வீதியின் மோசமான நிலை காரணமாக அம்பலப்பெருமாள்குளம் வான் பகுதியில் புதையுண்ட நிலையில் காணப்படும் டிப்பர் வாகனம். (க-18)



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்றுவலுவுடையோர்களுக்கு [illegible] பதிவுகளை பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் அதிகாரி ஒருவர் மேற்கொள்வதை [illegible] வெளியில் மக்கள் காத்திருக்கின்றனர். (க-9)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலய வளாகத்தில் துப்பரவுப் பணிகள் இடம்பெறுகின்றன. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அஸ்வமேதயாகத்தை முன்னிட்டு குதிரைகளின் ஊர்வலம் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் குடாநாட்டில் வலம் வந்தது. ஊர்வலம் யாழ். நகர் பகுதிக்கும் வந்தது. அதனைக்கான மக்கள் கூடியதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. உடனடியாக களத்தில் இறங்கிவிட்டார் அர்ச்சகர். போக்குவரத்தை சீர்படுத்துவதற்காக 'சிக்னல்' காட்டி அசத்தி விட்டார் அவர். (ஒ-ரி)



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவின் போது பக்தர்கள் புடைசூழ அம் பாள் தேரில் வலம் வரும் அருட்காட்சி. (ஒ-250)



அண்மையில் நடைபெற்ற வல்வெட்டி இ.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நெல்லியடி ம.ம.வித் தியாலய பகுதித் தலைவர் திருமதி மனோகரி நற்குணலிங்கம் பரிசில் வழங்குகிறார். (ஒ)




கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆசிரியை திருமதி சி.இராஜினிதேவி எழுதிய 'நிலவும் சுடும்' எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவின்போது யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலை தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா வெளியீட்டுரை நிகழ்த்துகிறார். (ஒ)




யாழ். முகாமையாளர் சம்மேளனத்தால் 'மாற்றத்திற்கான குரல்' என்ற சஞ்சிகை வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜி.ஐ.இசற் நிறுவன யாழ். மாவட்ட கிளை இணைப்பாளர் சைக்கிகெனட் உரையாற்றுகிறார். சஞ்சிகையின் சிறப்புப் பிரதியை பேராசிரியர் கலாநிதி ரவிராஜும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் மருத்துவத்துறைத் தலைவர் கலாநிதி சிவபாலனும் பெற்றுக் கொள்கின்றனர். (ஒ-வ)



அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவு கிளையின் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினர் களாகக் கலந்து கொண்ட வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி பிறேமினி சபாரத்தினம், வலி.கிழக்கு பிரதேச சமூக சேவை அதிகாரி திருமதி விஜயகுமாரி முகுந்தன் ஆகியோருக்கு நிதியத்தின் மூத்த உறுப்பினர் மாலை சூட்டி வரவேற்கிறார். (ஒ-11)



வட்டுக்கோட்டை கலைவாணி கல்வி நிலையத்தின் 31 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் மங்கல விளக்கேற்றுகிறார். உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச சந்திரன் உரையாற்றுகிறார். (ஒ-வ)



காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டியில் முதல் இடம் பெற்ற சிவப்பு இல்ல தலைவர்களிடம் விருந்தினர்களாக கலந்து கொண்ட தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகியோர் வெற்றிக் கேடயம் வழங்குகின்றனர். (ஒ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15.06.1933

உதிர்வு
05.06.2012

## திருமதி பொன்னம்பலம் மனோன்மணி



திதி:- 26.05.2013

பாலூட்டி சீராட்டி வளர்த்தாய் அம்மா
பாரினிலே சிறப்பாக வாழவைத்தாய் அம்மா
இடைநடுவில் எங்களைத் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றாயோ எங்கள் அம்மா
ஏங்கித் தவிக்கின்றோம் உமைப்பிரிந்து
இனி எமக்கு ஆறுதல் யார்தான் உளரோ

வன்னியசிங்கம் வீதி.
தாவடி வடக்கு. கொக்குவில்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## இ.சின்னதுரை (பத்தர்)

யாழ். நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைய தம்பி சின்னதுரை 24.05.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பாக்கியம் தம்பதியரின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - இரத்தினசிலோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, கனகம்மா, சரஸ்வதி மற்றும் பொன்னுத்துரை, மோகனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தயாளினி, தயாகரன் மற்றும் ராஜினி, சுபாகரன் (ஜேர்மனி), சதீஸ்கரன், தயந்தினி (லண்டன்), நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாசுகி (ஜேர்மனி), சிவராஜன், பிரபா (ஜேர்மனி), திருமகள், தபேஷ் (லண்டன்), சந்திரகாசன் ஆகியோரின் மாமனும், கஸியோ, துயந்தியா, மகிஷன், நதுர்ஷன், தர்மிதன், தர்ஷன், தனுஷியா, உமாசுதன், அபிராஜ், கரிஷ், கிஷன், மிதுஷா, துஷாரா, தரணியா, சரபின், ரிகேஷ், தாட்சாயினி, பிரியவர்த்தன், பேருஜன், ஜெரூபினி ஆகியோரின் அன்புப் பேரனும், கற்றல்டோவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

05, கலட்டி அம்மன் வீதி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (37430)(45.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### நெடுந்தீவில் வெசாக்

நெடுந்தீவில் வெசாக் பண்டிகையை முன்னிட்டு அலங்கார வெளிச்சக் கூடுகள் பல் வேறு பகுதிகளிலும் காணப்பட்டன. கடற்படையினர் பொலிஸார் வெசாக் பண்டிகையை நல்ல முறையில் கொண்டாடினார்கள். கடற்படையினரால் மக்களுக்கு உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. (ஓ-7)

# இவரைக் காணவில்லை



## கந்தன் ஜயன்

என்பவர் 26.04.2013 அன்று ஊர்காவற்றுறையில் காணாமல் போயுள்ளார். இவரை மருமகன் ஞானசேகரன் தேடுகின்றார். இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முவரிக்கு அறிவிக்கவும்.

ஊர்காவற்றுறை, கரம்பொன் கல்லொழுங்கை.
தொ.பே. 077 768 7149, 077 712 9041.
(தயவுசெய்து அறிவிக்கவும்) (சி/9252)(45.6.7)

### காணவில்லை

மா வெள்ளை நிறமுடைய, ஒரு கொம்பு முறிந்த பசு மாட்டை 19.05.2013 இல் இருந்து காணவில்லை. கண்டவர்கள் 0771884629 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (37440)(10,6)

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஐந்து சந்தியில் சகல வசதிகளுடன் கடை வாடகைக்கு உண்டு. தண்ணீர், பாத்றூம், ரொய்லெட் வசதிகள் உண்டு.

(37418)(5.6) T.P.:077 774 6855

### வீடு வாடகைக்கு

வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
9,மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 075 965 6565/ 077 735 0003 (37419)(5.6)

### வீடு வாடகைக்கு உண்டு

கோயில் வீதி, நல்லூர் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் தளபாட வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 178 9637,
021 222 1095 (37425)(6.11)

### வீடு வாடகைக்கு

யாழ். நகர மத்தியிலிருந்து 1km இற்குள் மேல் மாடி வீடு வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. 10 அறைகள் வாகனத்தரிப்பிடம். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 781 3646 (37429)(6.11)

### விற்பனைக்கு

Ashok Leyland e comet LC-xxxx Aluminium full Body லொறி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776589399 (37437)(10,6)

### ஹைஏஸ் வான் வாடகைக்கு

தொடர்பு:
077 373 4109 (37424)(6.11)

### காணி விற்பனைக்கு

D-5 பரந்தன், பூநகரி வீதியில் ஓவசியர் சந்திக்கு அண்மையில் 10 ஏக்கர் வயல் நிலம் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: (35137)(5.6)
021 228 0055,077 601 7086

### வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, சரசாலையில் 11¾ பரப் புடன் கூடிய வீடு (கிணறு, மலசல கூட வசதிகளுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 362 0789,
077 923 2392 (35046)(6.11)

### விற்பனைக்கு

I PAD -3 (32gb)- 80,000
I PHONE-5 (32gb)-85,000
Note Book- 30,000
Projecter (LED)- 75,000
(HTML)
Blu- Ray (DVD, 3D)-20,000
DVD Player (neevox)-20,000
(For-Van,Car)

அனைத்தும் வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டவை (U.K)

தொடர்பு: 077 400 2780,
075 767 6760 (37428(6.11)

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
01.07.1939

இறப்பு
20.05.2008

அமரர்
## இராசையா முருகேசு



பிறப்பு
19.09.1941

இறப்பு
04.05.2008

திருமதி
## முருகேசு கமலாதேவி

காலத்தில் அழியாத சுடர் விளக்குகளே
என்றும் நினைவில் நீங்காத தெய்வங்களே
எப்படி உங்களை மறப்பது நாம்
உங்கள் நினைவுகள் சுமந்து வரும்
ஆண்டு தோறும் புயலோடு எம் நெஞ்சங்கள்
கண்கண்ட தெய்வங்கள் காற்றாகிப் போனதேனோ?
நீங்கள் மலராக முன்பதற்கு முன்னே மொட்டிலேயே ஆண்டவன்
வாழ்வைநிறுத்தியது ஏனோ?
பஞ்ச ஆண்டுகள் அல்ல தச ஆண்டுகளானாலும்
என்றும் மறவாது உங்கள் நினைவுகள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கச்சாய் றோட், ஆத்தியடி ஒழுங்கை,
கொடிகாமம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(35047)(10,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடகைக்கு

யாழ்நகருக்கு மிக அருகில் விசாலமான மாடிவீடு உடன் வாடகைக்கு விடப்படும். வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு. நிறுவனங்கள், அலுவலகங்கள் விரும்பத்தக்கது.

**தொ.பே. 077 922 9041**

ஐந்தாம் அகவை நிறைந்த நாளில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.



பூமியில் உலாவும் தேவதையாய்
இன்பம் சொரியும்
அன்புக் குடும்பத்தின்
செல்வக் கண்மணியாய்
எம் விழிகளில் நுழைந்து
இதயம் நிறைந்த,
பாஸ்கரன்– ஜீவாஜினி
தம்பதிகளின் ஏகபுத்திரி
செல்வி கோபிஷா வின்
ஐந்தாம் அகவை நாளில்,
இறையாசியுடன் வாழ்வின்
ஏற்றங்கள் சகலமும் தரும்
ஆயகலைகளோடு, அத்துணை
செல்வங்களும் பெற்று நீடூழி
வாழ்கவென்று உள்ளத்துவகை பெருக
வாழ்த்தும்...

26.05.2013

'கோபிஷா மஹால்'
பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தாத்தா, மம்மம்மா,
ஆதா, செந்தூ, அபியா

# தேவை

## அற்லான்ரா வைத்தியசாலை மருதனார்மடம்

மேற்படி வைத்தியசாலைக்குப் பின்வரும் ஆளணியினர் தேவை

01. பதிவுபெற்ற வைத்தியர்
02. M.L.T.
03. மருந்தாளர்
04. தாதியர்
05. வரவேற்பாளர்
06. காவலாளி

**தொடர்பு: 077 371 5670**

## மாற்று ஆற்றல் உடையோருக்கான வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,மே 26

வடமராட்சி தெற்கு–மேற்கு பிர தேச செயலக பிரிவுக்குட்பட்ட உடுப்பிட்டி விறாச்சி வீதியைச் சேர்ந்த தம்புமணி ஜெயகுலேந் திரன் என்பவர் மாற்று ஆற்றல் உடையோருக்கான வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

இவருக்கான முதல் கட்டக் கொடுப்பனவுத் தொகை சமூக சேவைகள் திணைக்களத்தி னால் பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

குறித்த நபர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரி வுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 26

அருட்திரு பாலதாஸ் பிராயன் அடிகளாரின் ''உன்னை விரும்புகின்றேன் இயேசுவே'' என்னும் பாடல் தொகுப்பு இறுவட்டு வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பிரதான வீதி பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட குருக்கள் ஒன் றியத்தின் தலைவர் அருட்திரு. இராஜேந்திரம்ஸ்ராலின் தலைமை யில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்வார்.

வாழ்த்துரையை முல்லைத்தீவு மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு அருளானந்தம் யாவீஸ் அடிகளாரும் நிகழ்த்துவார்கள். (ஒ-8)

## மணமகள் தேவை

அரச திணைக்களம் ஒன்றில் அலுவலக உதவியாளராகப் பணிபுரியும், யாழ். கௌரவ குடும்பம் R.C, 37 வயதுடைய அழகிய மணமகனுக்கு, நற்குணமுள்ள அழகிய மணமகள் தேவை.

**தொடர்பு: 077 657 7356**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ அரச உயர் பதவியிலுள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை.

**தொடர்பு: 077 284 4179**
Suganthant1983@gmail.Com.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கியிருந்து வீடு பராமரிப்பது, சமையல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு பணிப்பெண் தேவை. வயது - 25 - 35

**தொடர்பு: 077 207 8469**

# மரண அறிவித்தல்

## காத்திகேசு சந்திரசேகரம்

*(அச்சுக் கோப்பாளர்-மல்லிகை அச்சகம்)*



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காத்திகேசு சந்திரசேகரம் (23.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காத்திகேசு–பொன்னுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், இராசையா-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், சற்குணசோதிமலரின் பாசமிகு கணவரும், சயந்தினி (கனடா), சந்திரகுமார் (சயந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசோதி (கனடா), சுசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் சொரூபன் (கனடா), சிந்து (கனடா), சகிதா ஆகியோரின் பேரனும், ஞானசேகரம், ரதி, தேவி, புஸ்பமலர், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாகுவன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாகுவன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
077 850 1134

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## விஸ்வநாதி செல்லையா

தோற்றம் 16.10.1926 — மறைவு 18.05.2011

குடும்பத்தின் ஒளி விளக்காய் குவலயத்தில் மிளிர்ந்தீரே
கூறறிவு கொண்டவராய் எமையென்றும் வளர்த்தீரே
பாரினிலே பண்புயர் தெய்வமாய்த் திகழ்ந்தீரே
பல்லாண்டு சென்றிடினும் மறவோம் உம்மை.

அல்லைப்பிட்டி,
3 ஆம் வட்டாரம்.


குடும்பத்தினர்.

# ஏழாம் ஆண்டு பிரிவினிலே...

புவியாகி 22.03.1971 — கவியாகி 26.05.2006

## அமரர் சின்னத்துரை புவிராசா

(உரிமையாளர்-சியான் ரேடர்ஸ், கராத்தே பயிற்சியாளர்-3rd Dane)



ஆயிரம் உறவுகள் இங்கிருக்க
அப்பா என்றழைக்க நீங்களில்லை
அப்பா என்று நாம் அழைத்து
ஆண்டுகள் ஏழு ஆனதப்பா
எத்தனை ஆண்டுகள் தான் கடந்தாலும்
அப்பா உங்கள் உறவு மாறாது
அதுபோல் உங்கள் நினைவும்
எமைவிட்டுப் போகாதப்பா
பிறவிகள் எத்தனை எடுத்தாலும்
நீங்களே தந்தையாக வேண்டி
இறைவனை வேண்டுகின்றோம்
எமக்கருள் புரிவாரென்று

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

சியான் ரேடர்ஸ்,
பிரதான வீதி, அச்சுவேலி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாட்டத்தில் மன்னார் அணி

வலி.வடக்கு, மே 26
இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் மன்னார் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.
பதுளை உதைபந்தாட்ட பொது மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் மாவட்ட இளைஞர் அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. அதில் மன்னார் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற-86)



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இலங்கை மாவட்ட அணிகளுக்கு இடையே தேசியமட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள யாழ்.மாவட்ட அணி. இறுதிப்போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் இடம் பெறவுள்ளது. (ற-86)

## உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் ஜூன் மாதம்

யாழ்ப்பாணம், மே 26
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாணத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே 7 பேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுத் தொடர் நடத்தப்படவுள்ளது.
சுற்றுத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது என்றும், அதில் வடமாகாணத்தில் உள்ள 50 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-23)

## மைலோ கிண்ண வலைபந்தாட்டம் நாளை

மாங்குளம், மே 26
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 'மைலோ கிண்ண' வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.
இந்தச் சுற்றுப்போட்டி 14, 16, 18 ஆகிய மூன்று வயதுப் பிரிவுகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் உரிய நேரத்துக்குக்கு சமூகம் அளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(ற-422)

### ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடர்

# சென்றலைட்ஸ், ஜொலிஸ்ரார் வெற்றி



யாழ்ப்பாணம், மே 26
ஈ.எஸ்.பி. பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடந்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.
நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிமைதானத்தில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன.
காலையில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஓல்கோல்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.
முதலில்துடுப்பெடுத்தாடிய ஓல்கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி 18.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது.
அதில் திலீபன் 30 ஓட்டங்களையும், பிரசாந் 32 ஓட்டங்களையும், டினோசன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்து வீச்சில் சென்ற.லைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் கோகுலன் 2.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும், பிரசாந் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சாள்ஸ் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், வதுசனன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும், சௌமிதரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
103 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 17.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மட்டும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.
அதில் ஜேம்ஸ் 54 ஓட்டங்களையும், வினோத் ஆட்டம் இழக்காமல் 29 ஓட்டங்களையும், எடிசன் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் ஓல்கோல்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரியதர்சன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கை வீழ்த்தினார்.

### ஜொலிஸ்ரார் வெற்றி

நண்பகல் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணி 19.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
இதில் அசோக் 26 ஓட்டங்களையும், லவக்காந், துவாரகன் ஆகியோர் முறையே 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் றுக்ஸ்மன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், வாமனன் 3.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், பகீதரன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 4 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.
அதில் மணிவண்ணன் 38 ஓட்டங்களையும், அருண் 12 ஓட்டங்களையும், பகீதரன் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரதாஸ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார். (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 26
மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழ[illegible] நடந்தும் மன்னார் பிறிமியர் லீக் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
காலை 9மணி
கீறின் பீல்ட் விளையாட்டுக் கழகம் எதிர் இந்து முன்னணி விளையாட்டுக் கழகம்.
பி.ப. 2 மணி
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகம். (ற-23)

* * *

யாழ்ப்பாணம், மே 26
ஈ.எஸ்.பி.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்[illegible] கழகம் நடந்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:
காலை 8.30 மணி (யாழ். இந்துக் கல்லூரி மைதானம்)
யூனியன் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.
பி.ப.1.30 மணி (யாழ். இந்துக் கல்லூரி மைதானம்)
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம்
காலை 8.30 மணி (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்)
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் எதிர் வீக்ரறியன்ஸ் விளையாட்டுக் கழகம்
பி.ப. 1.30 மணி
ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ற-23)

* * *

மாங்குளம், மே 26
குஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று மோதவுள்ள அ[illegible]கள்:
பிற்பகல் 4 மணி
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-422)

## வீரர்கள் தெரிவுக்கு வருகிறார் சனத்

யாழ்ப்பாணம், மே 26
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இளம் கிரிக்கெட் வீரர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படவுள்ள 2 நாள் கிரிக்கெட் தெரிவு போட்டி, இன்றும் நாளையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
மேற்படி போட்டிகளிலிருந்து சிறந்த வீரர்களைத் தெரிவு செய்வதற்காக சனத் ஜெயசூரிய தலைமையிலான தேசிய தேர்வாளர் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர். இவர்களுடன் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையின் செயலாளர் நிசாந்தன் ரணதுங்க மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையின் உப தலைவர் கே.மதிவாணன் ஆகியோரும் வருகை தருவுள்ளனர். (ற-23)



இலங்கை மெய்வன்மை சங்கம் நடந்திய தேசிய கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி ஆர்.தர்சிகா கல்லூரி சமூகத்தால் கௌரவிக்கப்பட்டார். வவுனியா மாவட்ட மெய்வ[illegible]ண்ட தர்சிகா சம்மட்டி எறிதலில் தங்கப் பதக்கத்தையும், தட்டெறிதலில் வெள்ளிப் பதக்கத்தையும், குண்டு போடுதலில் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.பி.எல்.தொடரில்

# சென்னைக்கு இறுதி இன்று?

கடந்த 16 ஆம் திகதி சூதாட்ட விவகாரத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் மூன்று வீரர்கள் கைதாகியதில் இருந்து ஒவ்வொரு நாளும் புத்தம்புது அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அங்கு, இங்கு என்று சுற்றி இப்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் வந்து நிற்கின்றது சூதாட்டக் குற்றச்சாட்டு.

**நடந்தது என்ன?**
சென்னை அணியின் உரிமையாளர்களில் ஒருவரான குருநாத் மெய்யப்பன் நேற்று முன்தினம் இரவு மும்பைப் பொலிஸரால் அதிரடியாகக் கைதானார்.
ஆட்ட நிர்ணயம் மற்றும் சூதாட்டத்தில் இவர் ஈடுபட்டார் என்று மும்பைப் பொலிஸார் கூறுகின்றனர்.
இவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**காப்பாற்ற முயற்சி**
குருநாத் ஒருபக்கம் பொலிஸாரிடம் மாட்டி விழி பிதுங்கிக் கொண்டிருக்க, பல கோடிகளைக் கொட்டி எடுத்த சென்னை அணியையும், தனது பதவியையும் காப்பாற்றும் முயற்சிகளில் மும்முரமாக இறங்கியிருக்கிறார் குருநாத்தின் மாமனும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் (பி.சி.சி.ஐ.) சபைத் தலைவருமான சீனிவாசன்.
மருமகன் போனால் பரவாயில்லை, சென்னை அணியும், பதவியும் போதும் என்று முடிவெடுத்துள்ள சீனிவாசன், மருமகனை மாட்டி விடுவது என்று தீர்மானித்து விட்டார்.

**பின்னணி**
இந்தியன் பிறிமியர் லீக் தொடரில், ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டனர் என்று கடந்த 16 ஆம் திகதி ராஜஸ்தான் அணியின் ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் ஆகியோரை டில்லி சிறப்பு பிரிவு பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் லட்சக் கணக்கில் சூதாட்டக்காரர்களிடம் பணம் பெற்று வேண்டுமென்றே முறையற்ற பந்து வீசியது, ஓட்டங்களை வாரி வழங்கியது போன்ற குற்றங்களில் ஈடுபட்டமை ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டது. இவர்களுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று வரிசையாக பலர் பொலிஸாரிடம் மாட்டி வருகின்றனர்.
அவ்வாறு மாட்டிக் கொண்ட தரகர் ரமேஷ் வியாஸ் என்பவர் கொடுத்த தகவலையடுத்து, நடிகர் தாராசிங்கின் மகன், நடிகர் விண்டூ ரந்வாவை கடந்த 21ஆம் திகதி மும்பையில் பொலிஸார் கைது செய்தனர். இவர் மீது ஏமாற்றுதல், மோசடியான ஆதாரங்களை தயாரித்தல் எனப் பல பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.



**மாட்டியது சென்னை**
விண்டூவிடம் நடந்த விசாரணையில், சென்னை அணியின் தலைமை நிறைவேற்று அதிகாரி குருநாத் மெய்யப்பனும் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற தகவல் பொலிஸாருக்குத் தெரிந்தது. அதையடுத்தே பொலிஸாரின் பார்வை சென்னையின் பக்கம் திரும்பியது.

**பொலிஸ் விசாரணை**
இந்தப் பருவகாலத்தில் சென்னை அணி விளையாடிய மூன்று ஆட்டங்களில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டுள்ளது என்று சந்தேகிப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.
"கடந்த சில நாள்களில் மட்டும் விண்டூவுடன் 30 முறை தொலைபேசியில் குருநாத் பேசியுள்ளார். எமது கணிப்பீட்டின்படி விண்டூ ரூ.34 லட்சம் வரை குருநாத்தால் லாபம் சம்பாதித்துள்ளார்'' என்று பொலிஸார் கூறுகின்றனர்.
அதையடுத்து குருநாத்தை விசாரணைக்கு முன்னிலையாகுமாறு மும்பை பொலிஸார் அழைப்பாணை அனுப்பினர். மும்பையில் உள்ள குற்றத்த தடுப்பு அலுவலகத்துக்குச் சென்ற குருநாத் மெய்யப்பனிடம் பொலிஸார் துருவித் துருவி விசாரித்தனர்.
அணியின் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை தரகர்களிடம் பகிர்ந்து கொண்டாரா என்பதே அவர்களின் முக்கிய சந்தேகமாக இருந்தது.
சுமார் 3 மணி நேர விசாரணைக்கு பின்னர், குரு நாத் மீதான குற்றச் சாட்டுக்கள் உறுதியாகிய நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்கின்றனர் பொலிஸார்.

**சிக்கலில் சீனி**
குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்ட பின்னரே, சென்னை அணிக்கு நெருக்கடிகள் ஆரம்பித்தன.
சென்னை அணியின் உரிமையாளரும், பி.சி.சி.ஐ. தலைவருமான சீனிவாசன் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வலுவான கோரிக்கைகள் எழத் தொடங்கி விட்டன.
இதனால் அதிர்ச்சியடைந்துள்ள சீனிவாசன், அவசர அவசரமாக தனது அணியைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

**'அதெல்லாம் சும்மா'**
தலைக்கு மேல் வெள்ளம் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்த சென்னை அணி, அவசர அவசரமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
"குருநாத் மெய்யப்பன், சென்னை அணியின் உரிமையாளரோ, தலைமை நிறைவேற்று அதிகாரியோ அல்லது நிர்வாகியோ அல்லர். சென்னை அணி நிர்வாகத்தில் அவர் கௌரவ உறுப்பினர்களில் ஒருவர் மட்டுமே'' என்று அம்புலிமாமா கதை விடுகிறது அணி நிர்வாகம்.

**சட்டம் என்ன செய்யும்?**
பி.சி.சி.ஐ. - ஐ.பி.எல். சட்ட திட்டங்களின்படி, ஒரு அணி இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பிலிருந்து நீக்கப்படுவதற்கான அம்சங்கள் குறித்து சட்டவிதி 11.3, பிரிவு 'சி' ன் கீழ் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
அதன்படி, ஒரு அணி அல்லது அணி நிர்வாகம் அல்லது அதன் உரிமையாளரின் நடவடிக்கைகள், இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பு அல்லது கிரிக்கெட்டிற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அந்த அணி, இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பிலிருந்து நீக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிக்கியது சென்னை**
சென்னை அணியின் தலைமை நிர்வாகியாக குருநாத் மெய்யப்பன் காணப்படுவதால், அவர் சூதாட்டத்தில் ஈடுபட்டமை உறுதி செய்யப்பட்டால், இந்தியன் பிரிமியர் லீக் சட்டத்தின் படி, சென்னை அணி போட்டித்தொடரில் இருந்து நீக்கப்படும் சாத்தியமே இப்போதைய பெரும்பிரச்சினை.

**பறிபோகும் தலைமை**
இது ஒருபுறம் இருக்க, இந்த விவகாரத்தைக் காரணம் காட்டி பி.சி.சி.ஐ. தலைவர் பதவியிலிருந்தும் சீனிவாசன் விலக்கப்பட வாய்ப்புகள் அதிகம்.

**உண்மை இதுதான்**
கிரிக்கெட் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டுக்களில் குருநாத் சிக்கும்வரை, குருநாத்தின் 'டுவிட்டர்' வலைத்தளத்தில் அவர் சென்னை அணியின் தலைமை நிர்வாகி என்ற பதிவு இடம் பெற்றிருந்தது. ஆனால் விண்டூசிங் வாக்கு மூலத்திற்குப்பின், அவரது வலைதளத்திலிருந்து சென்னை அணியின் தலைமை நிர்வாகி என்ற பெயரும், சென்னை அணியின் இணையத்தள முகவரியும் அவசர அவசரமாக நீக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

---


**அக்ஷயா**
பேசியல், மேக்கப், ஹேயார் ஸ்டைல், தலைமுடி அயன்பண்ணுதல், சுருட்டுதல், கேளிங், சாறி, வுளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். ★ ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை ★ உடல் எடை கூட்டும் குளிசை ★ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு ★ நாட்பட்ட பருக்கள் அனைத்தையும் மாற்றும் "ஓரியினல் வைற்றிங் கிறீம்'' விற்பனைக்கு உண்டு. தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் விற்பனைக்கு உண்டு. (37710)
பதிவு இல: 16168 அக்ஷயா பிறவுண் றோட் சந்தி,
0772106155 அருகில் (நாவலர் றோட்) யாழ்ப்பாணம்.

உடல், உள ஆரோக்கியம், சமூக இசைவாக்கம் ஆன்மீக விழிப்புணர்வு தரும்
**வாழும் கலைப் பயிற்சி**
சுதர்சனக்கிரியா எனும் அற்புதமான மூச்சுப் பயிற்சியை உள்ளடக்கியது.
(i) இடம்: மகேஸ்வரன் மண்டபம் நல்லூர்.
(ii) வாழும் கலை நிறுவனம் செட்டியார் மடம், அராலி.
அறிமுக உரை 27.05.2013 மாலை 5மணி.
பயிற்சி: 28.05.2013 தொடக்கம் 2.06.2013 வரை மாலையில் நடைபெறும்.
077 6655408, 0777 607008

**பணிப்பெண் தேவை**
திருநெல்வேலியில் அரச தொழில் புரியும் சிறிய குடும்பத்துக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
தொடர்பு:- 077 5487167

**புதிய வீடு வாடகைக்கு**
கச்சேரி நல்லூர் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 7914049, 077 1120195

**அறைகள் வாடகைக்கு**
திருநெல்வேலியில் மருத்துவ பீட மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.
T.P:- 077 6184489

**காணி விற்பனைக்கு**
[illegible] 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.
தொடர்பு: 075 060 9358

**ஓட்டோ விற்பனைக்கு**
இல. AAH xxxx பச்சை நிற 150km ஓடிய புதிய ஓட்டோ விற்பனைக்குண்டு.
T.P:- 0777 632213
077 2537243

**வாகனங்கள் வாடகைக்கு**
பட்டா வாகனங்கள், கன்டர் ரக வாகனங்கள் நாள் வாடகைக்கும் மாதாந்த வாடகைக்கும் வழங்கப்படும்.
தொடர்புக்கு: 0772446994

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
இல. XG- XXXX, வெள்ளையும் சிவப்பும் சேர்ந்த FZS உடனடியாக விற்பனைக்கு.
தொடர்பு: 075 0498192

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
இல.126 XXXX CD 50 கறுப்பு நிற யப்பான் HONDA விற்பனைக்குண்டு.
T.P:- 077 0208049
077 5119965

**ஹையஸ் விற்பனைக்கு**
இல. 250-XXXX வெள்ளைநிற 12 ஏசி ஹையஸ் விற்பனைக்குண்டு.
T.P:- 077 0046943

**வீடு விற்பனைக்கு**
வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு (1½ பரப்பு) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 710 0884

**தேவை**
புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு யாழ் நகர மத்தியில் அலுவலகத் தேவைக்கு ஓர் இடம் தேவை. அத்துடன் கட்டட ஒப்பந்தகாரர்கள் இருப்பினும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 077 7729555

**கார் விற்பனைக்கு**
லான்சர் 14 sri XXXX , நிறம் :- வெள்ளை
new paint , new seat, new tyres
என்ஜின் BODY மிக நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு.
விலை 350 000/=
தொடர்புகளுக்கு: 077 8594798


**மரண அறிவித்தல்**

திருமதி **சின்னம்மா இராசையா**
(சின்னத்தங்கச்சி)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது தமிழ் நாட்டில் வசித்து வந்தவருமான திருமதி சின்னம்மா (சின்னத்தங்கச்சி) இராசையா கடந்த (20.05.2013) திங்கட்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பண்டிதர் இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசா, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் பூமணி, காலஞ்சென்ற பவளரத்தினம், மற்றும் கண்மணி (திரவியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பையாவின் மைத் துனியும், ஞானசம்பந்தன் (கனடா), ஆதிலட்சுமி(சென்னை), தமிழ்ச்செல்வன்(கனடா), கலைச்செல்வன் (இலங்கை), காலஞ்சென்ற அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும், கலாரூபி, சிவகுமார், ஹேமலதா, தாரணி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (குமரகுரு) சிறிய தாயும், ராஜீவ், சாலிகா, கஜந்தன், ஆதிரா, நயனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.06.2013) சனிக்கிழமை சென்னையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அளவெட்டி, யாழ்ப்...
தொடர்புக்கு: 0091 ...
email:cnskajan@gmail...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் கருப்பாடுகள் எவை?

சென்னை அணியின் உரிமையாளர்களில் ஒருவரான குருநாத்தின் வாக்குமூலத்தின் பிரகாரம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மூன்று முக்கிய வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

முரளி விஜய், சுரேஷ் ரெய்னா, ஜடேஜா மூவருமே சூதாட்டத்தில் ஈடுபட்டதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.



**8 பேர் வலையில்**

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைச் சேர்ந்த 8 வீரர்கள் சூதாட்டத்தில் தொடர்புபட்டுள்ளனர் என்று மும்பைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**500 கோடி**

சென்னையில் மட்டும் 500 கோடி ரூபா வரையில் சூதாட்டப் பணம் கைமாறியுள்ளது. இதில் 80 சதவீதமான பணம் கருப்புப் பணம் எனத் தெரியவருகின்றது.

# நாட்டை விட்டு ஓடுவதில் முன்னாள் புலிகள் தீவிரம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளுக்குச் சென்றுவிடவே தாம் அதிகம் விரும்புகின்றனர் என்று முன்னாள் போராளிகளில் பலர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்கள்.

''தடுப்பில் இருக்கும்போது எமது தன்மானத்தை இழக்கும் வகையில் மிகக் கீழ்த்தரமான நிலையை எதிர்கொண்டிருந்தோம். விடுதலையின் பின்னர் நிலைமை மாறும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், எம்மால் எமது உறவினர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். எனவே எங்காவது சென்று விடலாம் என்று தோன்றுகின்றது'' எனத் தெரிவித்தார் போராளி ஒருவர்.

வெளிநாடு ஒன்றுக்குச் செல்வதற்காக தான் வழங்கிய வேண்டுகையை ஏற்றுக் கொண்டு தூதரகம் ஒன்று தன்னை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருந்ததாகவும் அன்றைய தினத்தில் தன்னைப் போன்ற மேலும் 50 முன்னாள் போராளிகளும் அதே தூதரகத்தில் நேர்முகப் பரீட்சைக்காகச் சென்றனர் என்பதைத் தான் தெரிந்து வைத்திருக்கிறார் என்றும் பெண் போராளி ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். (உ-14)

# வடமாகாண தேர்தலால் புதிய பிரச்சினை வரும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வடக்குக்கு மட்டும் அதிகாரங்களைக் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுக்கப்போனால் பெரிதளவில் முரண்பாடுகள் வரும். அது முழு நாட்டுக்கும் பிரச்சினையைத் தரும். இது தேவையற்றது. தமிழர் பிரச்சினைக்கு இது தீர்வாகாது என்பதுதான் எனது நிலைப்பாடு'' என்று தெரிவித்தார் கோத்தபாய.

'உதயன்' பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையான 'சுடர்ஒளி' பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

**கேள்வி:** 13 ஆவது திருத்தம் தொடர்பில் நீங்கள் இப்போது பகிரங்கமாக எதிர்க் கருத்துகளை வெளியிட்டு வருகிறீர்கள். இதைப் பற்றிச் சற்று விளக்குவீர்களா?

**பதில்:** இல்லை! நான் யதார்த்தமான சில விடயங்களைத்தான் கூறிவருகின்றேன். தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கும், 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் என்ன தொடர்பு என்பதுதான் நான் எழுப்பும் சாதாரண கேள்வி. இதற்கு உகந்த பதிலை எவராவது சொல்லட்டும்.

ஒரு பக்கம் நீதித்துறை, சட்டத்துறையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்கின்றனர். மறுபுறம் முதலமைச்சருக்கு பொலிஸ் அதிகாரத்தைக் கொடுங்கள் என்கின்றனர். முதலமைச்சர் என்பவர் ஓர் அரசியல்வாதி. அவரிடம் பொலிஸ் அதிகாரங்கள் செல்லுமாயின் நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டத் தனியாக, சுயாதீனமாக செயற்படும் பொலிஸின் நிலைமை என்ன? அரசியல்வாதியாக இருக்கும் முதலமைச்சரின் கைகளில் பொலிஸ், காணி போன்ற முக்கிய அதிகாரங்கள் சென்றால் அது எம்மைப்போன்ற சிறிய நாடுகளுக்கு நன்மையானதா, தீமையானதா என்பதை மக்கள் சிந்திக்கவேண்டும்.

**கேள்வி:** 13ஆவது திருத்தத்தை ஒழித்தால் அது தமிழர் பிரச்சினைத் தீர்வில் சிறிதளவேனும் தாக்கத்தை ஏற்படுத்தாதா?

**பதில்:** உதாரணத்துக்கு இரத்தினபுரி மாவட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கிளிநொச்சியில் உள்ள தமிழர்களை விடக் கூடுதலான தமிழ் மக்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ளனர். இங்கு இருக்கும் சிங்கள முதலமைச்சர் பொலிஸ் அதிகாரங்களைக் கேட்டால் என்ன செய்வது? இது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இடையேயான பிரச்சினையல்ல.

நாங்கள் எப்போதும் அரசியல் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. 17ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. என்ன நடந்தது? நாடாளுமன்றம் என்பது உயரிய மேன்மைமிகு சபை. 17ஆவது திருத்தம் சுயாதீன குழுக்களை நியமிக்குமாறு கேட்கிறது. மறுபுறம் 13 ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரம் மாகாணசபைகளுக்குச் செல்லவேண்டுமெனச் சொல்லப்படுகிறது. இப்படி எல்லாவற்றையும் சிறிது சிறிதாக உடைத்துவிட முடியாது. இவற்றைத்தான் அமைதியை சீர்குலைக்கும் செயல்கள் என்று கருதவேண்டும்.

**கேள்வி:** நீங்கள் கூறுவதன்படி, 13ஆம் திருத்தத்திற்கமைய வடக்கு மாகாணத் தேர்தல் நடந்தால் புதிய பிரச்சினைகள் உருவாகும். அப்படியா?

**பதில்:** நிச்சயமாகப் பாதிப்பு ஏற்படும். வடக்கு மாகாண சபையை சிலவேளை தமிழ்க் கூட்டமைப்பினர் கைப்பற்றினால் நிச்சயமாகக் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கேட்பர். நாம் வடக்குக்கு மட்டும் அதிகாரங்களைக் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுக்கப்போனால் பெரிதளவில் முரண்பாடுகள் வரும். அது முழு நாட்டுக்கும் பிரச்சினையைத் தரும். இது தேவையற்றது. தமிழர் பிரச்சினைக்கு இது தீர்வாகாது என்பதுதான் எனது நிலைப்பாடு. எல்லா முதலமைச்சர்மாரும் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கேட்கத் தொடங்கினால் நிலைமை என்னவாகும்?

**கேள்வி:** 13ஆவது திருத்தத்தை மாற்றஞ்செய்வது இந்தியாவைக் கோபித்துக்கொள்வதுபோல் அமையாதா?

**பதில்:** இந்தியாவோ அல்லது வேறெந்த நாடுகளோ கோபித்துக்கொள்ளும் என்பதற்காக நாட்டுக்குத் தேவையான நல்லனவற்றை எம்மால் செய்யாது இருக்கமுடியாது. 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது என்ன நடந்தது? ஜே.வி.பி. முழு நாட்டையும் எரித்தது. பிரபாகரன் அதனை நிராகரித்தார். இந்தியாவுக்குச் சில விடயங்கள் தேவையெனில் அவற்றை நாம் எப்படி நடைமுறைப்படுத்துவது? தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல் தலைவர்கள் 13 ஆவது திருத்தத்தை மறந்து நியாயமான முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும்.

**கேள்வி:** நீங்கள் இப்படித் தெரிவித்தாலும் 13ஆவது திருத்தத்தின்படிதான் வடக்குத் தேர்தல் நடைபெறுமென அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பா அறிவித்துள்ளாரே?

**பதில்:** இல்லை. இதுபற்றி நான் ஆராய்ந்து பார்த்தேன். அவர் வடக்குத் தேர்தலைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. இப்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்று நடந்தால் அது 13ஆவது திருத்தப்படி நடக்குமென்றுதான் அவர் குறிப்பிட்டுள்ளார். ''*இப்போதைய சூழ்நிலையில்*'' என்று தான் அவர் கூறியுள்ளார். அது உண்மைதானே. வடக்குத் தேர்தல் பற்றி அவர் குறிப்பிட்டுக் கூறவில்லை. (உ-சி)


**LONDON METROPOLITAN COLLEGE**
சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
LONDON METROPOLITAN COLLEGE
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
•ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
•முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
•IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
•இலவச Tutorial Facilities

**City & Guilds** A1 A2 B1 B2
Duration: 48 hrs Week/ Week ends
•UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
•இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
•காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
•ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

Certificate In **SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
•ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக் கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
•ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
•Speaking, Reading, Listening, Writing
•Advanced Dip. In English
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk



**புதிய சங்கதி------**
கனடாவில் படிக்க - உழைக்க 40 நாள்களில் செல்லலாம்
★ பயணச் சீட்டு (Ticket) இலவசம்
★ உணவு, உறைவிடம் இலவசம்
இதைவிட வேறென்ன வேண்டும்.
அதி வேகமாக,
அதி விரைவாக, அதிக
அவசரமாக வாருங்கள்.
எல்லா நாள்களிலும் காலை 8 முதல் இரவு 8 வரை காத்திருப்போம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
0212219014, 021568990
(36806)(6.11)





**தேவை**
தொடர்பு: 077 445 2572 (37422)(6.11)

**பணியாளர்கள் தேவை**
1) பொது முகாமையாளர்
2) நிர்வாக அலுவலர்
கிளிநொச்சியில் சமூக நல நோக்குடன் இயங்கி வருகின்ற அரிசி மற்றும் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற நிறுவனமொன்று மேற்படி 2 பணி நிலைகளுக்குமான பொருத்தமான திறமை, அறிவு, அனுபவம், மற்றும் அர்ப்பணிப்பு மிக்க இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களை 05. 06. 2013 இற்கு முன்பாக வேண்டி நிற்கின்றது. தகுதியுடைய பெண்கள் முன்னுரிமை பெறுவர்.
விண்ணப்ப முகவரி: அருணன்,
6, ஸ்ரீ குணானந்த மாவத்தை,
தேக்கவத்தை, வவுனியா.
email:arunanecs@gmail.com
விவரங்களுக்கு:077 143 5887
(36723)(6.11)

**வாடகைக்கு**
யாழ்ப்பாணம், நீராவியடியில் 4 அறைகளுடன் கூடிய மாடி வீடு மற்றும் அறைகளும் (சகல வதிகளும் உடைய) வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 3171
(C/15060)(6.11)

**வீடு வாடகைக்கு**
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு முன்பாக Double Hall, 5 Rooms, Attached Bathroom வசதிகளுடன் சுற்று மதிலுடன் கூடிய 4 பரப்பு காணியுள் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் விரும்பத்தக்கது. வாகனத் தரிப்பிட வசதி உண்டு.
தொடர்பு: 021 321 5086

**உடன் விற்பனைக்கு**
12 XXXX தொடரிலக்கமுடைய MITSUBISHI Lancer கார், ஜெனரேற்றர் E 650K (HONDA Kerosene), தையல்மெஷின் (சிங்கர்), அல்சேசன் நாய் (ஒரு வருடம் - ஆண்) (ஜேர்மன் செப்பேட்) என்பன உடன் விற்பனைக்கு.
தொடர்பு:077 401 8598, 077 981 6685 (மாலை)
(37435)(6.11)

**HONDA CBR250 விற்பனைக்குண்டு**
WP-uu xxxx series, 2009 registered Black colour, Original Honda CBR 250 cc for sale.
Contact no: 077 989 1502, 077 220 8048
(37427)(6.11)

**IELTS** A1 B1 B2
Quick Preparation Available Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

**CANADA**
Work Permits
* Male / Female Age 20- 35 Years
* Basic English Knowledge
* 2 Years Work Contract
Closing Date 31-05-2013
தொடர்புகளுக்கு
iCS Integrated Corporate Solutions Pvt Ltd.
No 77, Clock Tower Road, JAFFNA.
021 - 7306000 , 077- 3013060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...றைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2013 இல்

HONDA
POWER PRODUCTS

# ஹொன்டா நீர் பம்புகள்

## எந்த உயரத்திற்கும் அதி வேகமாக நீரை கொடுக்கும் முதல் தர நீர் பம்புகள்



விவசாயிகளுக்கான நிரந்தர நிவாரணம் ஹொன்டா நீர் பம்புகள். நீண்டநாள் பாவிக்கக்கூடிய ஹொன்டா நீர் பம்பு விளைச்சலின் மன்னன்.

✔ நீண்டநாள் பாவனை ✔ இலகுவான உபயோகம் ✔ குறைந்த நிறை

| | | | |
|---|---|---|---|
| WPK - 20(2") | பெற்றோல் / மண்ணெண்ணெய் | குதிரை பலம் 4 நிமிடத்திற்கு லீற்றர் 600 | ரூபா. 48,214* |
| WPK - 30(3") | பெற்றோல் / மண்ணெண்ணெய் | குதிரை பலம் 4 நிமிடத்திற்கு லீற்றர் 1000 | ரூபா. 50,535* |

நாடெங்குமுள்ள அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து (வரி கட்டணமின்றி)

வரையறுக்கப்பட்ட ஸ்டெ.'.பர்ட் மோட்டர் (தனியார்) நிறுவனம்

பிரதான காரியாலயம் : 718/7 மரதானை வீதி, கொழும்பு 10. 011 7607200 மோட்டார் சைக்கிள் நிலையம் 161, கொழும்பு வீதி, இரத்தினபிட்டிய. 011 7607450

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

உ

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



27.04.2013
சனிக்கிழமை
சிவபதப்பேறடைந்த
எமது குடும்பத்
தலைவி

## திருமதி பவளரத்தினம் தேவராஜா
(பவளம்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 24.05.2013 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிரியைகள் இன்று (26.05.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

தேவராஜா
குடும்பத்தினர்.

(36738)(10.6)

TVS Racing

# NEW BEAST
## SAME BLOODLINE






RTR 150cc Rs. 252,590+VAT
RTR 180cc Rs. 298,125+VAT
உடனடி அழைப்பு:
0770 777 888 / 0777 782 739 (யாழ்ப்பாணம்)

விசேட லீசிங் வசதி

Apache SERIES RTR
SCARILY FAST

TVS Lanka (Pvt) Ltd.
Web: www.tvslanka.lk

கொழும்பு 14 காட்சியறை - 0114 605246
கொழும்பு 02 காட்சியறை - 0114 710416
ஜா-எல காட்சியறை - 0114 979189
நுவரேலிய காட்சியறை - 0777 590580
தெஹிவலை காட்சியறை - 0114 376400
மற்றும் நாடெங்கும் விநியோகஸ்தர்களும் விற்பனை முகவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Jaffna College Institute of Technology** **JCIT**

Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College.

## Apply Immediately

Certificate Courses(3 Months Part Time)

**AUTOCAD**

**Fundamental in InformationTechnology** (6 Months)

Introduction,Maths for ICT,English for ICT
Information and CommunicationTechnology (ICT) Application

**FIT**

**University of Colombo**

More Information
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 3213139 021 225 0975
E-Mail ejcit@sltnet.lk www.jcit.lk (c/15053)


MINISTRY OF CONSTRUCTION, ENGINEERING SERVICES, HOUSING & COMMON AMENITIES

## DEPARTMENT OF BUILDINGS

INVITATION FOR BIDS

### Construction of Office Building for Provincial Labour Department, Jaffna (Level - B)

1. **The Chairman, Department Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of Office Building for Provincial Labour Department, Jaffna (Level - B)" as described below and estimated to cost **Rs.24.5 million.** The construction period is **273 Days**.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade **C5** or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be validat the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (North), Departmentof Buildings, Beach Road, Jaffna. ,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.** Contact numbers are: Phone: 021-2222781, Facsimile :021-2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna,** from **27-05-2013** until **07-06-2013** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees one thousand five hundred **(Rs.1,500/-).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla** to reach **on or before 10.30 hrs on 11-06-2013.** Bids will be opened soon after closing at the Contract Branch, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 77 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.450,000.00**
   - valid up to **23-09-2013**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data
9. Bidders are advised to enter "Sethsiripaya" Premises at least 1 hour before the scheduled time for Bidclosing, due to security checking.

**Eng. (Mrs.) G. Bogahawatta**
Director General of Buildings
Department of Buildings,
2nd Floor,"Sethsiripaya", Battaramulla. (c/15039)(6.11)

## பத்தொன்பதாவது ஆண்டு நினைவு தினம்



தோற்றம்
09.06.1934

மறைவு
26.05.1994

### திருமதி திரவியம் திருநாவுக்கரசு

அம்மா காலச்சக்கரத்தில் மீளாத்துயில் மறக்கமுடியாது.
அதிலும் உங்கள் அன்பான முகம் அழகான புன் சிரிப்பு
கனிவான பேச்சு எங்கள் மனதைவிட்டு அகலாது அம்மா!
தாயே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வெல்வில் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்

"மூர்த்திவாசம்"
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

குடும்பத்தினர். (36751)(45.6.7)

# மரண அறிவித்தல்

## பார்வதிப்பிள்ளை கந்தையா



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனடா, டொரன்றோவை வதிவிடமாகவும் கொண்ட பார்வதிப்பிள்ளை கந்தையா (22-05-2013) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகளும், சின்னத்தங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (மந்திரி), கதிரேசம்பிள்ளை(சின்னத்துரை), சின்னத்தம்பி(ராசா), கிருஸ்ணராஜா(தம்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, அன்னலட்சுமி, சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தம்பித்துரை ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கந்தையா (சின்னத்துரை- கனடா) அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராஜா (கனடா), சோதிராஜா (இலங்கை மின்சார சபை - சுன்னாகம்), தவரஞ்சன்(சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கலாரஞ்சன்(கனடா), குலேந்திரன்(கனடா), தவேந்திரன்(கனடா), உமாதேவி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், கமலராணி (கனடா), கலாதேவி, தயாபரதேவி, வதனி (கனடா), ஜெயந்தினி (கனடா), காந்திமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், மயூரன், தர்சன், யரோயினி, சஜீவன், சசிகரன், கயரூபன், பிரியங்கா, அனுஷன், துஷாந்தன், கஸ்தூரி, புருசோத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Gremation Services, Chapel Ridge Funeral Hor, 8911 Woodbine Ave, Markham, Ontario L3R5 G1 இல் நாளை (27.05.2013) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் (கனடா நேரப்படி) இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன்மார்: தவரஞ்சன், சோதிராஜா (இலங்கை மின்சாரசபை - சுன்னாகம்) 021 300 7156, 077 198 581[illegible]
தவேந்திரன் 0014163910973

புன்னாலைக்கட்டுவன் சந்தி. (2.6)(36831)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
08.03.1945

மறைவு
25.04.2013

## திருமதி அருந்தவம் நடராஜா

கடந்த 25.04.2013 இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி அருந்தவம் நடராஜா அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று (25.05.2013) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், இறுதிவரை உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாச்சிமார் வீதி,
தம்பாலை, அச்சுவேலி. (36821) (45.6)


குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய**

GlaxoSmithKline

# பற்களில் ஏற்படுகின்ற கூர்உணர்ச்சிக்கு 60 வினாடிகளில்* விடுதலை




அறிமுகமாகின்றது றப்பிட் றிலீவ், விரைவான பலனைப் பெற்றுக்கொள்வதற்கு சென்சொடைன் வழங்கும் புதிய பற்பசை.

கூர்உணர்ச்சி ஏற்படுகின்ற பற்களில் சிறிதளவு பற்பசையை 60 வினாடிகள் வரை பூசவும். அதன் பின்னர் குளிரான அல்லது சூடான ஏதேனும் ஒன்றை உள்ளெடுக்கவும். எவ்விதமான வலியோ அல்லது அசௌகரியங்களையோ நீங்கள் உணர மாட்டீர்கள்.

**நீண்ட கால பாதுகாப்பிற்கு தினமும் இரு தடவை பல்துலக்கவும்.**

மருத்துவரீதியாக நிவாரணி என நிருபிக்கப்பட்டது. 60 வினாடிகளில் பலனை அளிக்கின்றது.*

SENSODYNE®

*பக்கட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக உபயோகிக்கப்படுதல் வேண்டும். © 2013, GlaxoSmithKline. சென்சொடைன் GlaxoSmithKline கம்பனிகளின் சிறந்த வர்த்தக நாமம் ஆகும்.

(U/8638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தினாலான 'பள்ளிவாசல்'




புருனே நாட்டில் உள்ள பள்ளிவாசல் தங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. ஆசிய பசுபிக்கில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற பள்ளிவாசல்களில் இதுவும் ஒன்று. புருனேயில் உள்ள சுற்றுலா தலங்களில் மிக அற்புதமானதும் இதுதான். புருனே நதி ஓரத்தில் அமைக்கப்பட்ட இந்தப் பள்ளிவாசலின் வாயில் பளிங்குகளால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மாடங்கள் தங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

# வெப்ப மாற்றத்தை துல்லியமாக கண்டறியும் அதிசய பறவை

வெப்பம் ஒரு டிகிரி செல்சியஸ் அதிகரித்தாலும், குறைந்தாலும் அதை சட்டென்று கண்டுபிடித்துவிடும் பறவை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஃபிரெஷ் டர்க்கி வான்கோழி இனத்தைச் சேர்ந்த பறவையாகும். இனப்பெருக்க காலத்தில் தன் முட்டைகளை மிகச் சரியாக 33 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் வைத்துப் பாதுகாக்கும். அதற்காகவே பெண் பறவை ஒரு மண்மேட்டை உருவாக்கி, அதைச் சுற்றிலும் முட்டையிடும். முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளிவர ஆறு மாதங்கள் ஆகும். இந்த ஆறுமாத கால மண்மேட்டின் வெப்ப நிலையை இரவும், பகலும், கோடை மற்றும் குளிர் காலங்களிலும் ஒரே சீராகப் பாதுகாக்கும் கடமை ஆண் பறவையினுடையது.

வெப்பம் அதிகமாகிவிட்டால் அவை மண்மேட்டில் காற்றுத் துளைகளைப் போடும். இன்னும் வெப்பம் அதிகரித்தால் முட்டைகளை குளிர்ந்த மணலால் மூடிப் பாதுகாக்கும். மரங்களிலிருந்து விழும் இலை, பழம் போன்றவற்றை உணவாகக் கொள்ளும் இந்தப் பறவை, தன் தலை, பாதங்கள் அல்லது அலகினால் துட்ப வெப்ப நிலை மாற்றத்தை உணருவதாகச் சொல்லப்படுகிறது.









# உதார சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு



## மிகச்சிறந்த எதிர்காலத்தை வழங்கும் மிகச்சிறந்த சேமிப்புக் கணக்கு

- சாதாரண சேமிப்புக் கணக்கு வட்டி வீதத்தை விட அதிக வட்டி வீதம்
- எமது எந்தவொரு வங்கிக் கிளையிலும் முன்னுரிமை வங்கிச் சேவை
- இலவச செல்லிடத் தொலைபேசி மற்றும் இணையத்தள வங்கிச் சேவை

55 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் ரூபா 5,000/-ஐ வைப்புச் செய்து இன்றே உதார சிரேஷ்ட பிரஜைகள் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

Udara
Senior Citizen's Account

COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் +94 112 353333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

19, வில்வந்தெரு ஒழுங்கை, கொழும்புத்துறையில் அமைந்துள்ள 3பரப்பும் 8½ குழியும் கொண்ட சதுரக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
0773395578
0776909284

## தேவை

சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் உடனடியாக தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (தரகர் வேண்டாம்) (C/8639)

தொடர்பு :
0726 707 405
0776 035 630

## காணி விற்பனைக்கு

உடுவில் றோட், மானிப்பாயில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 068 2311 (C/8646)(6.2)

## கார் விற்பனைக்கு

16xxxx MITSUBISHI LANCER WAGON Petrol Car விற்பனைக்குண்டு.

contact: 077 755 6244 (36830)(6.11)

## விற்பனைக்கு

தரமான கொங்கிரீட் (Ready mix) களுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்
**SANKEN CONSTRUCTION (PVT) LTD,**
**No.31, Wyman Road, Nallur, Jaffna.**
**T.P. 071 864 3686/ 021 222 4840/ 021 224 1185** (சி/9427)(6.2)

## வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம். (35197)(6.11)

## வாடகைக்கு வீடு தேவை

தமிழ் குடும்பம் ஒன்றுக்கு வசதியுள்ள வீடு தேவை. யாழ்ப்பாணம், கொக்குவில், மானிப்பாய் போன்ற இடங்களில் நல்ல சூழலில் அமைந்திருத்தல் வேண்டும். (36725)(6)

தொடர்பு: 077 396 0128

## வீடு காணி விற்பனை

உடுவில் மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் (Love Lane) துன்மலை வீதியில் இல. 44, இல் அமைந்த 5 பரப்புக்காணியும் பாரிய வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
0112725974 / 0773 792 193 / 0770 868 517 (C/8640)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1976 இல் பிறந்த அத்த நட்சத்திரம், 8 இல் செவ்வாய், 48 கிரக பாவம் உள்ள விஞ்ஞான பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு நற்குணமுள்ள குடும்பப் பாங்கான மணமகள் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். (36819)(6)

தொடர்பு: 075 048 9740

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 முதல் O/L வரை English Grammar, Spoken பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் வவுனியா குருமண்காடு, வவுனியா நகர், பண்டாரிக்குளம், தோணிக்கல் ஆகிய பகுதிகளில் வீட்டுக்கு வந்து கற்பிக்கப் படும். O/L துரித மீட்டல் வகுப்புக்களும் எடுக்கப் படும். கடந்த கால வினாத்தாள் கள் மீட்கப்படும். (35194)(6)

தொடர்பு: 077 290 9760

## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். 30 நாட்கள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com Call : 011 4380900 0114344230 (C/8641)

MMW

## வாகனம் தேவை

யாழ். கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டத்தில் கடமையாற்றும் திட்ட ஆலோசகரின் அலுவலக பாவனைக்கு குளிரூட்டி வசதியுடன் கூடிய மோட்டார் கார் ஒன்று வாடகைக்கு தேவைப்படுகிறது. 27.05.2013 முற்பகல் 10 மணி தொடக்கம் 30.05.2013 பிற்பகல் 2 மணிவரை கேள்விப்பத்திரங்களை கீழ்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை,
கண்டி வீதி, கண்டுக்குளி யாழ்ப்பாணம். (36836)(6.45)

தொடர்பு:021222 0256, 075 851 7374

## சிறு நீரகம் தேவை

B+ குருதிப் பிரிவையுடைய ஒருவருக்கு மாற்றுச் சிறு நீரகமொன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது.
B+ குருதிப் பிரிவையுடைய 25 - 40 வயதுக்கிடைப்பட்டவர்கள் தானம் செய்ய விரும்பினால் கீழக்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
(ஆண்களின் சிறுநீரகம் விரும்பத்தக்கது) (C/15055)(6.2)

தொடர்பு: 0775904031

## விற்பனைக்கு

XII XXXX இலக்கமுடைய HONDA CD 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 731 1691 (36837)(6.45)

## பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 3033 803 (36196)(6.11)

## விற்பனைக்கு உண்டு



SUZUKI BANDIT 250 CC
WP-WJ X X X X - 260,000/=
077 446 7850, 077 324 3943, (36834)(6.45)

## வேலை தேவை

கணினி இயக்குநராக, லிகிதராக , காசாளராக, வெளிநாட்டில் கடமையாற்றியவரின் பகுதி நேர, முழு நேர சேவை உண்டு.

தொடர்பு: 075 636 9283 (37395)(6.11)

## தேவை

சங்கென் ஸ்தாபனத்திற்கு கீழ்வரும் தொழில் செய்யக்கூடிய உப கொந்தராத்துக்காரர் தேவை. * ரைல்ஸ் வேலை. * மேசன் வேலை (மாபிள்) * சட்டறிங் வேலை * கம்பிவேலை.

விவரங்களுக்கு:
021 222 4840, 077 378 7343/
021 221 9539, 071 139 3483 (சி/9426)(6.2)

## விற்பனைக்கு உண்டு

ஆங்கில எழுத்துக்களுடன் நான்கு தொடர் இலக்கங்களை உடைய, அரைபொடியுடன் கூடிய, 10 சில்லுகள் கொண்ட, லங்கா அசோக் லேலன்ட் லொறிகள் விற்பனைக்கு உள்ளன. அனைத்தும் ஒரு இலட்சம் கிலோ மீற்றருக்கு உள்ளே பாவிக்கப்பட்டவை.

தொடர்பு: 077 772 2305 (35134)(6)

## தேவை

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC பைப் தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
077252 3241 (35195)(10.8)

## Accountant

Are you looking for a Qualified Accountant to shape your organization. A qualified Accountant (CIMA Finalist) with the experience of over 8 Years looking for suitable opportunity in Jaffna.

Please call 077 081 1149 (36777)(5.11)

## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கையிலுள்ள பிரபல சுத்திகரிப்பு நிறுவனமொன்றுக்கு பெண் சுத்திகரிப்பாளர்கள் (கிளீனர்ஸ்) அவசரமாகத் தேவைப்படுகின்றனர்.

18-45 வயதெல்லையில் நல்ல உடல் ஆரோக்கியம் அவசியம். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் கொழும்பிலுள்ள முன்னணி காப்புறுதி நிறுவனமொன்றில் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

- கவர்ச்சிகரமான சம்பளம்
- தங்குமிட வசதி வழங்கப்படும்
- சீருடை (யூனிபோர்ம்) வழங்கப்படும்

கிராம சேவகரின் சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி அவசியம். (C/8637)

தொடர்புகளுக்கு: முகாமையாளர்.
**குளோபல் டெக் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிடெட**
இல.320 A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 2106044

## மாபெரும் தங்கநகை ஏலவிற்பனை

செலான் வங்கியின் ஒரு வருட, 6 மாத, 3 மாத கால அடிப்படையில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தில் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் யாவும் எதிர்வரும் 01.06.2013 சனிக்கிழமை காலை 9 மணி முதல் அடகு வைக்கப்பட்ட பின்வரும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**(யாழ்ப்பாணம் - (சங்கானை, மானிப்பாய் உள்ளடங்கலாக) மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா)**

SEYLAN BANK PLC

- வட பிராந்திய முகாமையாளர். **செலான் வங்கி.** (C/9471)(2.6)

## ஓராண்டு நினைவில்.....

மலர்வு
04.02.1950
உதிர்வு
26.05.2012

**அமரர் பேணாட் கீதபொன்கலன்**



எமது குடும்பத்தின் குல விளக்கு அமரர் பேணாட் கீதபொன்கலன் அவர்களின் ஓராண்டு நினைவு நிகழ்வு இன்று(26.05.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
இந் நினைவு நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

3 ஆம் யூனிற்.முரசுமோட்டை. (35133)(2.6) **மனைவி, பிள்ளைகள்.**

## பதவி வெற்றிடங்கள்

A9 வீதி, இல.278, நுணாவில், சாவகச்சேரியில் அமையவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் (Fuel Filling Station), வாகன சுத்திகரிப்பு நிலையம் (Service Station), உணவகம் (Restaurant) போன்றவற்றுக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* முகாமையாளர்
* கணக்கு இலிகிதர்
* எரிபொருள் நிரப்புபவர்
* வாகன சுத்திகரிப்பாளர்
* வாகன சுத்திகரிப்பு உதவியாளர்
* சமையல்காரர்
* சமையல் உதவியாளர்
* காசாளர்
* களஞ்சியப்பொறுப்பாளர்
* காவலாளர்



மேலே கூறப்பட்ட ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ற கல்வித்தகைமைகளும், அனுபவமும் இருக்கவேண்டும். விண்ணப்பத்தில் தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். கல்வித்தகைமைச் சான்றிதழ் பிரதிகள், அனுபவத்தை வெளிப்படுத்தும் ஆவணங்கள், வாகன சாரதி பத்திர பிரதி, அடையாள அட்டை பிரதி, பிறப்புச் சான்றிதழ் பிரதி மற்றும் இருப்பிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் பத்திரம் போன்ற வற்றை விண்ணப்பத்துடன் அனுப்பவும்.

**விண்ணப்பங்கள் 03.06.2013 இக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**வை. சிவராசா**
**24, ருத்ரா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு-06.** (36812)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்நாற்றம் வீசுகின்ற வடிகால் வாய்க்கால்கள்

## அசௌகரியத்தில் பயணிப்போர்



யாழ்ப்பாணம்,மே 27

யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட்ட வடிகால்கள்களில் இருந்து வீசும் துர்நாற்றத்தால் பாதசாரிகள் அசௌகரியத்தின் மத்தியில் பயணிக்கின்றனர்.

கே.கே.எஸ். வீதியில் சத்திரச் சந்தியில் இருந்து தபாலகச் சுற்றுவட்ட சந்தி வரையில் வீதியோரம் அமைக்கப்பட்ட வடிகால்கள் இருந்து துர்நாற்றம் வீசுகிறது.

கடந்த வாரத்தில் பெய்த மழை வெள்ளம் வடிகால்களில் தேங்கி நிற்பதால் தான் இவ்வாறு துர்நாற்றம் வீசு வதற்கு முக்கிய காரணம் என்று அந்தப்பகுதியில் பயணிப் போர் தெரி விக்கின்றனர். இந்த வடிகால்கள் வெள்ளம் வழிந்தோடுவதற்குரிய வசதியாக அமைக்கப்படவில்லை.

வடிகால்கள் புனர் நிர்மாணப் பணிகள் அரைகுறையாக மேற்கொள்ளப் பட்டதன் காரணத்தாலும் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (வ-17)

# உடுவில் பிரதேச செயலக நடமாடும் சேவை விரைவில்

வலி.வடக்கு,மே 27

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவையொன்றை நடத்துவதற்காக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களில் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள், திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் மற்றும் இறப்புக்களைப் பதிவுசெய்யாதவர்கள் சம்பந்தமான விவரங்கள் கிராம அலுவலர்களினால் திரட்டப்பட்டு வருவதுடன் தேசிய அடையாள அட்டை பெறாதவர்களின் விவரங்களும் பெறப்பட்டு வருகின்றன. பிறப்புப் பத்திரம் இல்லாதவர்களுக்கு அவர்களுக்கு உரிய இடங்களில் பிறப்புப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்ற விவரங்கள் பெறப்பட்ட பின்னர் பிறப்புகள் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)


**வீடு வளவு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில் நல்லூர் பக்கம் 100 யார் தூரத்தில் 2 ¾ பரப்பில் ஐந்து அறைகள் மற்றும் சகல வசதிகள் கொண்ட வீடு வளவு விற்பனைக்கு.

தொடர்பு: 011 271 5130, 077 977 5017, 075 696 3405 (c/8648)(6.11)

**காணி விற்பனைக்கு**

இயக்கச்சியில் A9 வீதிக்கு அண்மையில் 3 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0778695981

**வீடு வாடகைக்கு**

அரியாலை பூதா கோயிலுக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 938 4809 (37279)(6.2)

**விற்பனைக்கு**

62-xxxx இலக்கமுடைய இசுசு ஜேணி (Lsuzu Journey) LineAC 1992 Model பஸ் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0775123400

**வாகனம் விற்பனைக்கு**

MD 90, HJ-XXXX, 125-Benly
GA-XXXX, HC-XXXX,136-XXXX

தொடர்பு: 077 515 5361, 077 041 1555

E.mail:darwin_charls@yahoo.com (35251)(6.11)

**காணி விற்பனை**

கட்டுடை சந்திக்கு அருகில் உபதபாற் கந்தோருக்கு முன்பாக பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0712242277,0775907500, 0112729571

**காணி விற்பனைக்கு**

19, வில்லூன்றி ஒழுங்கை, கொழும்புத்துறையில் அமைந்துள்ள 5 பரப்பும் 8½ குழியும் கொண்ட சதுரக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0773395578 0776909284

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில்

சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் A9 வீதியில் 45 பேச்சில் அமைந்துள்ள வீடு நீண்ட கால குத்தகைக்கு. வங்கிகள், கம்பனிகள், தொண்டர் நிறுவனங்களுக்கு ஏற்றது. விற்பனைக்கும் பரிசீலிக்கப்படும்.

தொடர்புக்கு- 077 9773252

**வீடு விற்பனைக்கு**

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி (கல்வயல்) 3 Rooms, 2 Halls, Kitchen புதிய நிலையில் உள்ள வீடு 4½ பரப்புக் காணியுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 772 4469

**மணமகள் தேவை**

யாழ். தென்மராட்சி இந்து கௌரவ குடும்பம் 1981, திருவோணம் 4 ஆம் பாதம், தோசமற்ற பாவம் 43, உயரம் 5' 9''.UK work Permit, Bachelor of Accounts (U.K) பட்டதாரி மணமகனுக்கு உள்நாடு/வெளிநாடு அழகிய பட்டதாரி மணமகள் தேவை. மணமகன் தற்போது விடுமுறையில் இலங்கையில் உள்ளார்.

தொடர்பு: 077 405 8915

E.Mail:achchuthan86@gmail.com (36847)(6.11)

**விற்பனைக்கு**

10 ½ அடி அலுமினியப் பெட்டி விற்பனைக்கு.

தொடர்பு:- 85, பிறவுண் றோட், கொக்குவில்.

021 222 0349
0750440666

**காணி விற்பனைக்கு**

வண்ணார்பண்ணை சிவன்கோயில், வைத்தீஸ்வராக் கல்லூரி, ஈழநாடு Press ஆகியவற்றுக்கு அருகில் உள்ள வெள்ளாந்தெருவில் 2பரப்பு 13குளி காணி விற்பனைக்குண்டு.

This property is very close to grand bazar and ideal for business or residential use.

For details **contact (519) 433-3654**

**Contact in Jaffna: +94 21 221 2115 / +94 21 490 7069**


## Palmyrah Industrial Complex Building Construction of Balance work for Palmyrah Development Board at Karainagar - Jaffna

1. The Chairman of the palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for palmyrah Industrial Complex Building Construction of balance work for palmyrah Development Board at Karainagar-Jaffna as described below and estimated to cost Rs.3.10 million.

   The construction period is 84 Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade M7/C8 or above with the Institute for Construction Training and Development -(ICTAD)
4. Interested bidders may obtain further information from the Department of Buildings (Central), Beach Road, Jaffna or The Chairman, palmyrah Development Board (Jaffna) and inspect the bidding Documents at the same address on any working day from 8:30hrs to 16:15 hrs.

   Contact numbers are: Phone: 021-2222034, Facsimile :021-2224154 &Building Department No:021 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 29 th May 2013 until 07th June 2013 from 8.30 hrs to 16.15 hrs upon payment of a non refundable fee of Rupees one thousand (Rs.1,000/=).
6. Bids shall be delivered or sent by registered post to the Chairman, palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna before 10.00 hrs on 11th June 2013. Bids will be opened soon after closing at the Office of The Chairman, palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders' representatives who choose the attend.
7. All Bids shall be accompanied by a Bid Security obtain from a reputed Bank in Srilanka
   - In the form included in the Section 09 of the bidding document
   - In favour The Chairman, Palmyrah Development Board,
   - For an amount of Rupees Forty six thousand Five hundred (Rs.46,500.00)
   - valid up to 23rd September 2013.

**Pasupathy Seevarathnam,**
**Chairman,**
**Palmyrah Development Board.**

(c/15056)(6.11)


**asa** Cleen for U — **வேலையாள்கள் தேவை**

அலுவலகங்கள், வீடுகளில் துப்புரவு செய்தல், பராமரித் தல், அழகுபடுத்தல் போன்ற பணிகளைச் செய்வதற்கு சுத்திகரிப்புப் பணியாளர்கள் தேவை. 29.05.2013 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும் (ஆண், பெண்) இருபாலாரும்.

**asa Cleen For U**

இல.144, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக)

தொ.பே. 021 222 0752. 021 320 2364. (16846)(6.45)


## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அந்தோனிப்பிள்ளை சிங்கராசர்**

மலர்வு 16.01.1917

உதிர்வு 26.05.2012

ஆண்டுகள் ஒன்று ஆனதய்யா! ஆறவில்லை எம் இதயக்காயம்
அன்போடு எம்மைக் காத்து அறிவுரைகள் பல கூறி
கண்ணீரில் நாம் உறைய எங்கு அப்பா போய் மறைந்தீர்
காலமெல்லாம் உங்கள் நினைவை நாம் சுமந்து
கடவுளிடம் வேண்டுகின்றோம் மறுபடியும் உம் திருமுகம் காண
உங்கள் ஆத்மா சாந்தியடைய அந்தோனியாரை பிரார்த்திக்கின்றோம்.


மிருசுவில் — குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் அரசுக்கு எதிராக
☎ 0215671111 advt@uthayan.com




# பாலைவனத்தில் ஓர் சொர்க்காபுரி



சோலையான பூங்காக்கள், நீர் வீழ்ச்சிகள், பசும்புற்தரைகள் இவற்றையெல்லாம் சில தசாப்தங்களுக்கு முன்னர் பாலைவனப் பகுதியில் காணமுடியாது. ஆனால் தற்போது இவையெல்லாம் செயற்கையான முறையில் சாத்தியமாகின்றன. அண்மையில் செயற்கையான முறையில் கடலை அமைத்து அலையையும் உருவாக்கினார்கள். இதேபோல அரிசோனா பாலைவனத்திலும் ஒரு சோலை அமைக்கப்பட்டுள்ளது.

'அமங்கிரி' என்றால் கிரேக்க மொழியில் சுதந்திரமான மலையென்று பொருள். அரிசோனா பாலைவன எல்லையில் அமைந் x ð j utah வில் 600 ஏக்கர் விசாலமான நிலப்பரப்பில் நீர்ப் பூங்காவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதைச்சூழ மரங்கள் நடப்பட்டுள்ளன.

அபுதாபி போன்ற நாடுகள் பாலைவனப் பிரதேசங்களில் புதிய நிர்மாணங்களை மேற்கொள்வதன் மூலம் உல்லாசப் பிரயாணிகளின் வருகையை அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வட்டவடிவில் மிகப்பெரிய பாதசாரிகள் கடவை



கடந்த வருடம் சீனாவின் ஷாங்காயில் உள்ள புதிய பாதசாரிகள் கடவையொன்று திறந்து வைக்கப்பட்டது.

ஐந்து பெரு வீதிகள் சந்திக்கும் இந்த இடத்தில் மக்கள் பாதையை கடக்க பெரிதும் சிரமப்பட்டிருந்தனர். தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதசாரிகள் கடவைகள் மூலம் 15 பேர் சமாந்தரமாகச் செல்ல முடியும்.

உலகின் மிகப்பெரிய பாதசாரிகள் கடவைகளில் இதுவும் ஒன்றாக இடம்பிடித்துள்ளது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ந்துபோராடுவோம் 06-07

காந்தியின் இரத்தத்தை வாங்குவது யார்? 19





செவ்வாயில் குடியேறலாம் 09



நேரம் – திரைவிமர்சனம் 10



உடைந்தது குட்டு 24



சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 26 மே 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# குறிகளின் போர்..

ஓவண்பான்



உடையார்கட்டு

வழமையைவிட அன்றைக்கு அவள் வீட்டிலிருந்து புறப்பட தாமதமாகியிருந்தது. 'பெல்' அடிக்க முன்னர் பாடசாலைக்குள் நுழைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அதிபரிடம் பேச்சு வாங்க வேண்டியிருக்கும். அவளின் காலடி ஓசைக்கு சமாந்தரமாக இன்னொரு காலடி ஓசை . பின்னால் திரும்பிப் பார்த்தாள். அவள் பின்னே இளித்தபடி ஒரு சீருடைக்காரன். வீதியில் யாரும் இல்லை. அவளுக்கு நெஞ்சு 'திக்.திக்' என்று அடிக்கத் தொடங்கியது. இதயத் துடிப்பின் வேகத்தைவிட கால்களின் வேகம் இன்னும் அதிகமாகியது. ஆனால், பின்னால் வந்தவன் அதைவிட வேகமாக அவளை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான். அவள் நடப்பதை விடுத்து ஓட எத்தனிக்கையில் சீருடைக்காரனின் இரும்புக்கரம் அவள் கையைப் பற்றிப் பிடித்தது. ''ஐயோ! அம்...!'' என்று அவள் கத்தி முடிப்பதற்கிடையில் மறு கையால் அவளின் வாயைப் இறுகப் பொத்தினான் அவன். அவன் கண்களில் வேட்டை மிருகம் ஒன்றின் வெறி. அவள் எவ்வளவு திமிறியும் விடுபட முடியவில்லை. வேட்டை மிருகம் அங்கும் இங்கும் நோட்டமிட்டுவிட்டு அருகில் இருந்த பற்றைக்குள் மாணவியை இழுத்துச் சென்றது. நடக்கப்போகும் விபரீதத்தில் இருந்து தப்புவதற்காக வாயைப் பொத்தியிருந்த மிருகத்தின் கையில் பலம்கொண்ட மட்டும் கடித்தாள். வலி பொறுக்க முடியாமல் சீருடை மிருகம் கையை உதறிக்கொண்டஅந்த ஒருநொடி அவளுக்கு போதுமானதாக இருந்தது. '' ஐயோ அம்மா! ஆராவது என்னைக் காப்பத்துங்கோ!'' என்று பலங்கொண்ட மட்டும் கத்தினாள். அவளின் நல்ல காலம். வீதியில் தற்செயலாக வந்துகொண்டிருந்தவர்களின் காதில் அந்த அலறல் ஒலி விழவே, பற்றையை நோக்கி, நாலைந்து பேர் உதவிக்காக ஓடி வந்தனர். சீருடை மிருகத்தின் [illegible] நீங்க முன்னரே. சரமாரியாக விழுந்தது அடி. சம்பவம் பற்றி எப்படியோ அறிந்துகொண்ட படையினர் அங்கு வந்தனர். தம் பங்குக்கு நாலைந்து அடிகளைக் கொடுத்த பின் '' இவர் எங்கடை ஆள்தான். நாங்கள் கொண்டுபோய் விசாரிச்சு தண்டனை கொடுக்கிறோம்'' என்று கூறி அங்கிருந்தோரின் பதிலை எதிர்பார்க்காமல் சீருடை மிருகத்தை அங்கிருந்து இழுத்துச் சென்றனர். இன்னும் நான்கைந்து மாதங்கள் செல்ல அதே மிருகம் வேறு ஒரு ஊரில் சுதந்திரமாக திரியத்தான் போகிறது என்பதை எல்லோரும் நன்கறிவர்.

★★★

## நெடுங்கேணி

உடையார்கட்டில் வேட்டை மிருகத்துக்கு இரையாகாமல் மாணவி தப்பித்த சமயத்தில், நெடுங்கேணியில் ஓர் ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டிருந்தது. அங்கும் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த 7 வயது பாலகி ஒருத்தி, ஒரு வாரத்துக்கு முன்னர் வேறொரு சீருடை மிருகத்தால் குதறப்பட்டிருந்தாள். சின்னத் தளிரை சீரழித்த மிருகத்தைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று கோரியே நெடுங்கேணியில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தால் பயந்துபோன படைத்தரப்பு விசாரணையில் இறங்கி பாலகியைக் குதறிய சீருடை மிருகத்தை கண்டறிந்து இப்போது விசாரணைக்கு உட்படுத்தி வருகிறது.

★★★

எப்போதுமே படையினால் தமிழர்கள் மீது ஆயுத ரீதியான போரோடு பாலியல் ரீதியான போரும் இணைந்தே பிரயோகிக்கப்பட்டன. படைகளின் சுடு கலன்களின் வேட்டுகளில் பிணங்களாக வீழ்த்தப்படக்கூடும் என்ற அச்சத்தை விடவும் தம் மீதான பாலியல் போரே தமிழ்ப் பெண்களுக்கு படைத்தரப்பிடம் பெரும் அச்சத்தை தோற்றுவித்திருந்தது.

அதற்கேற்றால்போல்தான் நிறையச் சம்பவங்கள் நடந்திருந்தன. தனித்திருந்த பெண்களே சீருடை மிருகங்களின் வேட்டைகளில் சிக்கி, கற்பையும், உயிரையும் இழந்திருந்தார்கள். தமது வெறி அடங்கியதும் வெற்றுடல்களை மிருகங்கள் ஆளரவமற்ற வெளிகளிலோ அல்லது மல சல கூடங்களிலோ அல்லது பாழுங் கிணறுகளிலோ மறைத்து வந்தன. ஆனால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அந்த உடல்கள் கண்டறியப்பட வேட்டை மிருகங்களின் கொடூரம் உலகின் முன் அம்பலமானது.

கிருஷாந்தி, ரஜனி, சாராதாம்பாள் என்று இந்தப் பட்டியல் நீண்டு சென்று முள்ளி வாய்க்காலில் இசைப்பிரியா மற்றும் பெயர் தெரியாத நூற்றுக்கணக்கான பெண்கள் வரை விரிந்து செல்கிறது.

ஆயுத ரீதியான போர் முடிவுக்கு வந்த பின்னரும் பாலியல் ரீதியான போரை படைத்தரப்பு முடிப்பதாக இல்லை. அரச உயர் மட்டத்தின் ஆதரவு இந்தப் பாலியல் போருக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இத்தகைய பாலியல் ரீதியான இம்சைகளால் எப்போதும் ஒரு அச்ச சூழலுக்குள் தமிழர்களை வைத்திருக்கவே அதிகாரம் விரும்புகிறது. அப்போதுதானே தாம் நினைத்தபடி தமிழர்களை இருத்தி எழுப்ப முடியும்.

இத்தகைய சூழமைவில் தான் ''பொது மக்களுக்கான உண்மையான பாதுகாப்பு படையினரிடம் இருந்தே கிடைக்கும்'' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான முன்னாள் பொறுப்பாளரும் இப்போதைய அரச விருந்தாளியுமான கே.பி.

ஆயினும், சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் கே.பியைப் போல கண்ணை மூடிக்கொண்டுகருத்துச் சொல்லாமல், ''இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும்'' என்று நீதியின் பக்கம் விடாப்பிடியாக நிற்கின்றன. முதலில் இராணுவத்தினர் நாட்டில் ஏனைய இடங்களில் உள்ளதைப்போன்றே தமிழர் பகுதிகளிலும் இருப்பதாக தனது நிலையில் மாறாதிருந்த அரசு தொடர் அழுத்தம் காரணமாக படைப் பிரசன்னத்தைக் குறைக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. ஆனாலும், இந்த அறிவித்தல் வழமை போன்று உலகை ஏமாற்றும் ஒன்றாகவே இருக்கும் என்பதைத் தமிழர்கள் அறிவார்கள். ஏனெனில் தமிழர்களை அரசு வேற்று வாசிகள் போலவே இன்னமும் நோக்குகிறது. தன்நாட்டு மக்களாக பார்க்க மறுக்கிறது. இத்தகைய நம்பிக்கையீனங்கள் கொண்ட அரசு தமிழர் பகுதிகளில் படைத் தரப்பின் ஊடான பாலியல் போர்கள் மூலம் அந்தச் சமூகத்தை எப்போதும் அடக்கத்தான் நினைக்குமே தவிர, அவர்களுக்கான உரிமைகளை வழங்கி படைப் பிரசன்னத்தை குறைக்க முனையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடப்பது சந்தேகம்

▮ அன்ரன்

வடக்கில் தேர்தல் நடக்குமா இல்லையா என்பது தெளிவற்றே இருந்தாலும் தேர்தலுக்கான சலசலப்புகளை எல்லாக் கட்சிகளிடமும் காண முடிகிறது.

வடக்குத் தேர்தலை அரசு நடத்துமா என்பதில் கொழும்பில் உள்ள ராஜதந்திரிகள் பலருக்கும்கூட சந்தேகம் இருக்கின்றது. அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் சிசன் இதனை நேரடியாகவே கேட்டார்.

"வடக்கில் மாகாண சபைத் தேர்தலை செப்ரெம்பரில் அரசு நடத்தும் என்று நம்புகிறீர்களா?" என்பதாகவே அவரது கேள்வி இருந்தது.

இதே கேள்வியை கொழும்பில் உள்ள பல இராஜதந்திரிகளும் கேட்கிறார்கள். பத்திரிகையாளர்கள் பலரிடமும் அவர்களால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற தூதுவர்கள் இராஜதந்திரிகளும்கூட இங்குள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் இதே கேள்வியை நேரடியாகவும் மறைமுகமாகவும் கேட்டிருக்கிறார்கள். அரசு செப்ரெம்பரில் தேர்தலை நடத்துமா என்பதை நாடிபிடித்தறிய அவர் கள் முயல்கிறார்கள்.

அரசின் பங்காளிக் கட்சிகள் சிலவும் பொதுபல சேனா போன்ற அமைப்புக்களும் வடமாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவதை கடுமையாக எதிர்த்து வருகின்ற போதும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதே இராஜதந்திரிகளின் சந்தேகத்துக்குக் காரணம். ஏதாவது காரணங்களை முன்வைத்து கடைசி நேரத்தில் தேர்தலை அரசு செப்ரெம்பரில் நடத்தாமல் ஒத்தி வைக்கக்கூடும் என்ற எதிர் பார்ப்பும் அதிகமாக நிலவுகின்றது.

### கோத்தபாயவின் கருத்து

ஏனைய மாகாணத் தேர்தல்கள் போன்று இல்லாமல் வடமாகாணத் தேர்தல் அரசுக்குள்ளும் தெளிவற்ற நிலையையே ஏற்படுத்தியுள்ளது. 8 மாகாண சபைகளைத் தன் வசம் கொண்டுள்ள இந்த அரசு, வடமாகாணத்தை மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இழக்க விரும்பவில்லை. அப்படி நடந்தால் தமிழர்கள் இந்த அரசை எதிர்க்கிறார்கள் என்றும் இந்த நாடு இன்னமும் ஒரே நாடு ஒரே தேசமாக இன்றிப் பிரிந்தே கிடக்கிறது என்றும் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு வலுச் சேர்ப்பதாகி விடும் என்றும் அரசு அஞ்சுகின்றது.

அரசின் அச்சம் பாதுகாப்புச் செயலரின் வாய் வழியாக சில தினங்களுக்கு முன்னர் வெளியானது. "வடக்கு மாகாண சபை நிர்வாகம் ஈழத் திட்டத்தை தொடரக் கூடும். வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்த வேண்டிய தேவை உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு நாம் கடுமையான விலைகளைக் கொடுத்துள்ள நிலையில், இது இன்னொரு போர்ச் சூழலை ஏற்படுத்துவதற்கான எமது முட்டாள்தனமான செயலாக அமையும்." என்று கோத்த பாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கா மல் வடக்கு மாகாண சபையை தமிழ்க் கூட்டமைப்புக் கைப்பற்ற விடுவது ஆபத்தானது என்பதே அவரது வாதம். தனியான நிர்வாகம் ஒன்றைக் கோருவதற்கான (அதாவது ஈழத்துக்கு நிகரான நிர்வாகம்) வசதிகள் அனைத்தும் 13ஆவது திருத்தில் நிறைந்திருக்கிறது என்று அவர் கருதுகிறார். புலிகள் இந்த விடயத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர் என்றும் கூறுகின்றார்.

"இந்திய – இலங்கை உடன்படிக்கையைப் புலிகள் ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்களால் ஈழத்தைச் சுலபமாக அடைந்திருக்க முடியும். தனியான நிர்வாகத்தைக் கோருவதற்கு வசதி யான 13ஆவது திருத்தத்தை அவர்கள் அப்போது சரிவரப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்" என்றிருக்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ.

கோத்தபாய ராஜபக்ஷவின் நிலைப்பாடே பொதுபல சேனா மற்றும் சிஹல உறுமய போன்ற அமைப்புக்களின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றன என்று கருதி வந்த ராஜதந்திர வட்டாரங்களுக்கு இப் போது அது உறுதியாகி இருக்கின்றது.

அண்மையில், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தொடர்புகொண்டு பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித், 13ஆவது திருத்தத்தில் கைவைக்க வேண்டாம் என்று எச்சரித்திருந்த நிலையில் கோத்தபாயவின் இந்தக் கருத்து வந்திருக்கிறது. குர்ஷித்துக்கான அரசின் பதிலாகவே இது கொள்ளப்படும் என்று அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை பற்றிய கோத்தபாயவின் இந்தக் கருத்து தேர்தல் நடக்குமா என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும் ஊக்கியாகி இருக்கிறது.

### 2014இல் தேர்தல்

தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரையில் விடுக்கப்படாமல் இருப்பதால் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் குழப்பத்தில் இருக்கிறார்கள். தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு தமக்கு ஒரு மாத கால அவகாசம் போதும் என்று கூறும் அவர்கள், இதுவரைக்கும் தேர்தல் தொடர்பான எந்தப் பணிகளிலும் ஈடுபட ஆரம்பிக்கவில்லை. வடக்குத் தேர்தல் நடக்குமா என்று கேட்டதற்கு தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் அளித்த பதில் இப்படி இருந்தது.

ஜுன் மாத நான்காம் வாரத்தில் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் விடப்படக்கூடும். அந்த அறிவித்தல் வந்ததும் பொது பல சேனா அல்லது வேறொரு சிங்கள அடிப்படைவாதக் கட்சி தேர்தலை எதிர்த்து நீதிமன்றத்தை நாடும். அதனடிப்படையில் வழக்கு இழுபட்டு தேர்தல் 2014ஆம் ஆண்டுக் குச் செல்லும்.

2014ஆம் ஆண்டு தேர்தல் நடந்தால் அந்தத் தேர்தலில் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்த முடியாது. 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலையே பயன்படுத்த வேண்டியிருக்கும்.

2013ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் கணிசமான எண்ணிக்கையில் சிங்கள வாக்காளர்கள் நிச்சயம் உள்ளடக்கப்படுவர். ஏற்கனவே அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. வவுனியாவில் உள்ள கலபோல என்ற இடத் தில் 2,400 வரையான சிங்களக் குடும்பங்கள் 2013 வாக்காளர் பட்டியலில் உள்ளீர்க்கப்படுவர். அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஆயிரக் கணக்கான சிங்கள வாக்காளர்கள் இந்த ஆண்டு வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது உள்வாங்கப்படுவர். எனவே, 2014ஆம் ஆண்டே வட மாகாண சபைத் தேர்தல் நடப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

> "வடக்கு மாகாண சபை நிர்வாகம் ஈழத் திட்டத்தை தொடரக் கூடும். வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்த வேண்டிய தேவை உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு நாம் கடுமையான விலைகளைக் கொடுத்துள்ள நிலையில், இது இன்னொரு போர்ச் சூழலை ஏற்படுத்துவதற்கான எமது முட்டாள்தனமான செயலாக அமையும்
>
> – கோத்தபாய

### முதலமைச்சர் யார்?

தேர்தல் நடக்குமா இல்லையா என்ற குழப்பம் ஒருபுறத்தில் ஓடிக்கொண்டிருந்தாலும் அரச கூட்டின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவிலும் தெளிவற்ற நிலையே தொடர்கின்றது.

அமைச்சர் டக்ளஸ், கே.பி, தயாமாஸ்டர் போன்றவர்களின் பெயர்கள் அரச தரப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் அடிபட்டாலும் தேர்தலில் யாரையும் முதன்மை வேட்பாளராக அறிவிக்காமலே போட்டியிடுவது என்ற தீர்மானத்துக்கு சுதந்திரக் கட்சித் தலைமை வந்திருப்பதாக நம்பகமாக அறிய முடிகிறது.

யாரை முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பது என்பதில் எழுந்த குழப்பங்களே இதற்குக் காரணம். ஜனாதிபதியும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் அரசியல்வாதிகளை நிறுத்த விரும்புகையில். பாதுகாப்புச் செயலர் முன்னாள் புலிகளின் தலைவர்களை நிறுத்த விரும்புகின்றார் என்று தெரிகின்றது.

இதனடிப்படையில் கே.பி. மற்றும் தயா மாஸ்டர் வரிசையில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனின் மனைவியின் பெயரும் தற்போது அடிபடுகின்றது.

இவர்களில் யாரையும் முதன்மை வேட்பாளராக அறிவிக்கா விட்டாலும் கூட, விடுதலைப் புலிகளின் உயர் மட்ட போராளிகளில் சிலரை அரச தரப் புப்பட்டியலில் போட்டியிட வைப்பது நிச்சயம் என்று சுதந்திரக் கட்சி வட்டா ரங்கள் கூறுகின்றன.

அதேசமயத்தில் புலிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய மற்றொரு அணியை சுயேச்சையாகக் களமிறக்கி கூட்டமைப்பின் வாக்குகளைப் பிரிப்பதற்கான திட்டமும் தயார்ப்படுத்தப்படுகின்றது. இதற்கான வேட்பாளர் தேர்விலும் உயர் மட்டம் தீவிரமாக இருக்கிறது. இதற்கு மேலதிகமாக நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே சமூகத்தில் பெயர்பெற்ற, மக்களுக்கு நன்கு அறிமுகமான முகங்களைக் கொண்ட சுயேச்சைக் குழுக்களைப் போட்டியிட வைப்பதற்கான திட்டங்களும் தயார்ப்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரச தரப்பின் வேட்பாளர் பட்டியலை ஆராயும் முகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார். அமைச்சின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகவே அவரது வருகை இருக்கும் என வெளியில் காட்டிக்கொள்ளப்பட்டாலும் அதன் உள்நோக்கம், தேர்தலுக்கு முன்னரான நிலையை நாடிபிடித்தறிவதும் வேட்பாளர்களாகக் கூடியவர்களைச் சந்தித்துப் பேசுவதும் தான் என்கின்றன கட்சி வட்டாரங்கள்.




தேர்தல் காய்ச்சல்களுக்கு இடையே கடந்த வாரம் கொழும்பில் கொண்டாடப்பட்ட நோர்வே நாட்டின் தேசிய தினத்தில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் இடையிலான அளவளாவல்கள் இராஜதந்திரிகள் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன. தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் இந்த உறவின் அர்த்தம் என்ன என்று அவர்கள் கேட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தன்ர இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.



இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனட வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## மனித குலத் தோற்றமும் வளர்ச்சியும்

மனித குலத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை குறித்து மானிடவியல் ஆராய்ச்சியாளர்கள் நீண்ட காலமாக ஆய்வுகள் நடத்திப் பல உண்மைகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். உயர் வளர்ச்சி பெற்ற மனிதக் குரங்குகளின் ஒரு பிரிவிலிருந்து ஆதி மனிதர்கள் உருவானார்கள். இத்தகைய ஆதி மனிதர்களைப் **பித்திக்காந்தி ரோப்பஸ், சீனாந் திரோப்பஸ், ஹைடல்பர்க், அட் லாந்திரோப்பஸ், தெலாந்திரோப்** பஸ் என வகைப்படுத்தியுள்ளனர். முதலாவது ஆதி மனிதர்களான பித்திக்காந்தி ரோப்பஸ்களின் எலும்புக்கூடுகள் இந்தோனேசியாவில் உள்ள ஜாவாத்தீவில் கண்டெடுக்கப்பட்டன.

இவர்களுக்குச் சிறிது காலத்துக்குப் பிறகு வாழ்ந்தவர்கள் சீனாந்தி ரோப்பஸ்கள். இவர்களின் புதை எலும்புப் படிவங்கள் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டன.

இவர்களுக்கு அடுத்து நெருக்கமானவன் ஹைடல்பர்க் மனிதன். 1907 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் உள்ள ஹைடல்பர்க் அருகே தொன்மைக் காலப் படிவத்தில் இந்த மனிதனின் எலும்புகள் கிடைத்தன.

அட்லாந்திரோப்பஸ் மனிதனின் கீழ்த்தாடை எலும்புகள் அட்லஸ் மலைப் பிரதேசத்தில் கிடைத்தன. ஆபிரிக்காவில் உள்ள தன்சானியாவில் உள்ள மலைக் கணவாய் ஒன்றில் தெலாந்திரோப்பஸ் மனிதனின் மண்டையோடு கிடைத்தது.

மேற்கண்டவர்களே பிற்கால நியாண்டர்தாஸ் மனிதனின் மூதாதையர் ஆவர். ஜேர்மனியில் உள்ள நியாண்டர்தாஸ் பள்ளத்தாக்கில் 1856 ஆம் ஆண்டில் மனித எலும்புக் கூட்டின் மிச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்கால மனிதனின் எலும்புக்கூட்டிலிருந்து இவை வெகுவாக வேறுபட்டிருந்தன. இந்தப் பள்ளத்தாக்கின் பெயராலேயே இப்பண்டைய மனிதர்கள் நியாண்டர்தாஸ் மனிதர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

பழைய உலகில் இவர்கள் விரிவாகப் பரவியிருந்தார்கள். ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியாக் கண்டங்களில் இவர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் தற்கால மனிதனுக்கு மிக நெருங்கியவர்களாக இருந்தார்கள். இவர்களே வளர்ச்சி பெற்று தற்கால மனிதர்களின் புதிய மரபினங்களைத் தோற்றுவித்தார்கள் என்பது மானிடவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

மனிதகுலத்தின் தோற்றம் பற்றிய சுருக்கமான வரலாறு இதுதான்.

சோவியத் நாட்டின் உயிரியல் பேராசிரியரான முனைவர் மிஹயில் நெஹதூர்ஹ் இது குறித்து விரிவான, நுட்பமான ஆய்வு நடத்தி 'மனித இனங்கள்' என்னும் நூலில் பல உண்மைகளை வெளிக் கொண்டு வந்துள்ளார்.

மனித குலத்தின் பாகுபாடுகள் குறித்து அவர் கூறியுள்ள கருத்துக்களின் சுருக்கம் இவ்வாறு சொல்கிறது.

''இனங்கள் என்பவை நீண்ட காலப் பரிணாமப் போக்கில் மனித குலத்தில் உண்டான உயிரியல் உட் பிரிவுகள் என்ற கருதுகோள் சோவியத் மானிட இயலின் அடிப்படையாக விளங்குகிறது. உடலமைப்பு இயலையும், உடலியலையும் முளைக்கரு இயலையும் புதைபடிவ இயலையும் முதன்மையான ஆதாரங்களாகக் கொண்டே விஞ்ஞானிகள் இனங்களை ஆராய் கிறார்கள். ஆனால் மானிட வகை வருணனை இயலையும், தொல்பொருள் இயலையும் வரலாற்றையும் மொழி இயலையும் கருத்தில் கொள்வது மானிட இயல் அறிஞனுக்கு முக்கியமானதாகும்''.

### மனித இனப் பிரிவுகள்

தொடக்க காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. மலைகள், கடல்கள் போன்ற நிலவியல் தடைகளினால் அவர்கள் பிரிக்கப்பட்டு தனித்தனிக் கூட்டமாக வாழ்ந்தனர். இதன் விளைவாகக் காலப்போக்கில் இந்த மனிதக் குழுக்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று உடல் அமைப்பில் வேறுபட்டதாக மாறத்தொடங்கியது. பனிஊழிக் காலத்தின் இறுதியில் மத்திய ஆசியாவில் வாழ்ந்த மனிதக் குழுக்கள் அதிக குளிரைத் தாங்கும் உடல் வலிமை பெற்றிருந்தன. தட்பவெப்ப நிலை மாறிப் பனிப்பாளங்கள் உருகத் தொடங்கிய பிறகு இந்த மனிதர்கள் ஆசியாவின் பிற பகுதிகளுக்குப் பரவினார்கள்.

இவர்களின் வழிவந்தவர்களே மனித இனத்தின் நான்கு பிரிவினர் ஆவார்கள்.

1. மங்கோலாய்ட் (MANGOLOIDS)
2. நீக்ரோய்ட் (NEGROIDS)
3. காக்கசாய்ட் (CAUCASOIDS)
4. ஆஸ்திரலாய்ட் (AUSTRALOIDS)

இந்த நான்கு இனப் பிரிவுகளைத் தவிர ஏராளமான சிறு இனக் குழுக்களும் இருந்தன. குறிப்பாகத் தென் இந்தியாவில் வாழ்ந்த வேடாய்டு (VEDDOIDS). இவர்கள் மிகவும் தொன்மையானவர்கள். தென் இந்தியாவின் அடர்ந்த காடுகளிலும், இலங்கையின் அடர்ந்த காடுகளிலும் இன்று வாழும் வேடர்களின் முன்னோர்களே இவர்கள் ஆவார்கள். ஆபிரிக்காவில் பரவி வாழ்ந்த மற்றொரு இனம் கொய்சன் ஆகும். (KHOISANS) வடக்கு ஜப்பானில் எய்னோ (AINU) என்னும் இனம் வாழ்ந்தது. இவர்கள் மங்கோலிய இனத்துக்கும் முந்தியவர்கள்.



### மண்ணியல் பனியூழி (ICE AGE)

மனித இனம் ஆபிரிக்காவில்தான் முதன் முதலாக வாழ்ந்தது. ஏனெனில் 30 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்களின் புதை உயிர்த்தடங்கள் அங்குதான் கிடைத்துள்ளன. இங்கு இருந்துதான் மனித குலம் ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும், தென்கிழக்கு ஆசியாவுக்கும் பரவியிருக்க வேண்டும். மனித குலத்தின் இந்த இடப்பெயர்ச்சி சுமார் 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கியிருக்க வேண்டும். இவ்வாறு இடம்பெயர்ந்த மனிதர்கள் ஹோமோ-எரக்டஸ் (HOMO-ERECTHS) என அழைக்கப்பட்டனர். சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஹோமோ-எரக்டஸ் மனிதர்களில் இருந்து இரு கிளைகள் தோன்றின. நியாண்டர்தாஸ் மனிதர்கள், ஹோமோ சேப்பியன்ஸ் (HOMO-SAPIENS) என்னும் நவீன மனிதர்கள். நவீன கால மனிதர்கள் தோன்றிய பிறகு நியாண்டர்தாஸ் மனிதர்கள் சிறிது சிறிதாக மறைந்து போனார்கள். உலகின் பல்வேறு பகுதிகளுக்கு நவீன மனித குலம் இடம்[illegible] கடல்மட்டம் குறைந்ததன் விளைவாக ஆசியப் பகுதியில் [illegible] இந்தியர்களின் முன்னோர்கள் இடம்பெயர்ந்தார்கள். சுமார் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இது நிகழ்ந்திருக்க வேண்டும்.

01

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு காரம்

# பேரெழுச்சியின் வயது 60

சந்திரசேகரஆஷாத்



கடந்த மே மாதம் 21 ஆம் திகதி மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து இலங்கையில் நாடளாவிய ரீதியில் ஒரு பொதுச் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த அழைப்பை ஏற்றுப்பல தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தன. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பின் செயலர் லால் காந்த இந்த வேலைநிறுத்தம் பெரும் வெற்றி எனவும் அரசுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை எனவும் தெரிவித்திருந்தார். அதேவேளையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திஸ்ஸ அத்தநாயக்காவும் வேலை நிறுத்தம் பெரும் வெற்றிகரமாக இடம்பெற்றதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அரசோ வேலை நிறுத்தம் படுதோல்வியடைந்துவிட்டதாகத் தெரிவித்திருந்தது. வழமையாக 90 வீதமானோரே பணிக்குச் சமுகமளிக்கும் அரச ஊழியர்கள்; 93 வீதமானோர் அன்று வேலைக்கு வந்ததாக பொது நிர்வாக அமைச்சு பெருமையடித்துக் கொண்டது. இப்படியாக வேலை நிறுத்தம் தொடர்பாகப் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களை ஒவ்வொருவரும் தமக்குச் சார்பாக வெளியிட்டபோதிலும் உண்மை நிலைமையை மக்கள் கண்களால் கண்டனர் என்பதைப்பலரும்மறந்துவிட்டனர்.பல்வேறு துறைகளிலும் பணியாளர்களில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர். சில குறிப்பிட்ட துறைகள் முற்றாகவே செயலிழந்தன. பல மாவட்டங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் இடம்பெற்றன. அவ்வகையில் வேலை நிறுத்தம் ஓரளவுக்கு வெற்றிபெற்றதென்றே கூற வேண்டும்.

ஆனால் பொது வேலை நிறுத்தம் என்ற வகையில் பார்த்தால் இதை ஒரு தோல்வியடைந்த போராட்டமாகவே கருத வேண்டும். அரச காரியாலயங்கள், பாடசாலைகள், போக்குவரத்து, தொழில், வர்த்தக நிறுவனங்கள் என்பன முற்றாகவே முடங்கி விடவில்லை. ஒரு பகுதி இயங்கியது.

நாடே ஸ்தம்பிதம் அடையும் வகையிலான ஒரு வெற்றிகரமான பொது வேலை நிறுத்தமாக இது அமையவில்லை என்பதுதான் உண்மை.

1953 ஆம் ஆண்டு அரிசி விலையுயர்வுக்கு எதிராக ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைவிட ஏனைய சகல தொழிற் சங்கங்களும் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இடதுசாரி அமைப்புக்களின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வந்தன. அனைத்துத் தொழிற்சங்கங்களும் இருவேறு சம்மேளனங்களாக அகில இலங்கை ரீதியில் ஒன்றிணைந்து பலம் பெற்றிருந்தன.

1953 ஆம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தில் துறை முகங்கள், தொழிற்சாலைகள், அரச பணியகங்கள், வர்த்தக நிறுவனங்கள் எதுவுமே இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் கூட முற்றாகத் தடைப்பட்டிருந்தன. பாடசாலைகள் கூட இயங்கவில்லை. ஒட்டு மொத்தத்தில் முழு நாடுமே செயலிழந்து போனது. அரச பணியாளர்கள், தொழிலாளர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாமல்திணறியது. அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்தப் பயந்து துறைமுகத்துக்குள் நின்றிருந்த ஒரு பிரிட்டிஷ் கப்பலிலேயே நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அன்று பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்கா பதவியைத் துறந்ததுடன் அரசியலிலிருந்து விலகுவதாகவும் அறிவித்துவிட்டார். பிரதமர் பதவியை முன்னாள் இராணுவ அதிகாரியான சேர்.ஜோன் கொத்தலாவல பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் உடனடியாக அவசர கால நிலைமையைப் பிரகடனம் செய்ததுடன், கண்டவுடன் சுடும் அதிகாரம் கொண்ட 'மார்சல் லோ' சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இராணுவம் வீதியில் இறக்கப்பட்டது. இலங்கை எழுதுவினைஞர் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதில் கந்தசாமி என்ற அரச பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டார். பின்னாள்களில் அமைச்சராகஇருந்த.ரி.பி.இலங்கரத்தினா உட்பட ஏராளமானோர் காயமடைந்தனர்.

இவ்வாறு பெரும் இராணுவ வன்முறை மூலம் அந்தப் போராட்டம் நசுக்கப்பட்டது. எனினும் முழு நாட்டையும் ஸ்தம்பிக்க வைத்த ஓர் அரசையே ஆட்டம் காண வைத்து பிரதமரையே பதவி விலகச் செய்த அந்தப் பொது வேலை நிறுத்தம் இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் ஓர் உச்ச கட்டமாகும். அது மட்டுமன்றி உழைக்கும் மக்களின் சக்தியை அதிகார பீடங்களுக்கு உணர்த்திய மிகப் பெரும் சாதனையுமாகும். 1953 ஆம் ஆண்டு இடம்பெற்ற அந்தப் பேரெழுச்சியே 1956 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை மண்கௌவச் செய்து எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவை ஆட்சி பீடமேற்றியது.

அப்படியான ஒரு பொது வேலை நிறுத்தத்தை இலக்கு வைத்தே 2013 மே 21 ஆம் நாள் அதாவது 60 ஆண்டுகளுக்குப் பின்பு அறைகூவல் விடுக்கப்பட்டது.

ஆனால் இன்று இந்தப் போராட்டம் ஆட்சி பீடத்தை அசைக்கவும் இல்லை. இராணுவத்தை வீதியில் இறக்கவுமில்லை. நாட்டின் இயல்பு நிலையில் பாதிப்பை ஏற்படுத்தவுமில்லை. அரசுக்கு விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கை என்ற அளவில் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

எரிபொருள், மின்சாரம் என்பவற்றின் விலையுயர்வு, அவற்றின் அதிகரிப்பு என்ற எல்லைக்குள் நின்று விடுவதில்லை. தயாரிப்பு, விநியோகம், விற்பனை போன்ற நடவடிக்கைகளில் எரிபொருள், மின்சாரம் என்பவற்றின் தேவை முக்கியமாதலால் சகல பொருள்களின் விலைகளிலும் அது உயர்வை ஏற்படுத்தும். வாழ்க்கைச் செலவைப் புலமடங்காக அதிகரித்து விடும்.

அப்படியிருந்தும் 60 ஆண்டுகளுக்கு முன்பு இடம்பெற்ற பொது வேலை நிறுத்தம் போன்று வெற்றிகரமாக இடம்பெறவில்லை என்பது ஒரு பெரும் கேள்வியாக எழுந்தது. இந்தப் பொது வேலைநிறுத்தம் பெரும் வெற்றி பெறாமைக்கும் பெற முடியாமைக்கும் இரு முக்கிய காரணங்கள் உண்டு. இந்தக் காரணங்களின் மூல வேர்கள் அரசு மட்டுமல்ல எதிர்க்கட்சிகளும்தான் என்பது ஓர் அடிப்படை உண்மை. அப்படி இருக்கும்போது எதிர்க்கட்சிகள் தலைமை தாங்கும் வேலை நிறுத்தம் எப்படி வெற்றி பெற முடியும்.

முதலாவது காரணம் ஏறி வந்த ஏணியைக் காலால் உதைத்த கதை. 1953 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொது வேலை நிறுத்தம் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வர ஒரு முக்கிய அடித்தளத்தை அமைத்தது. ஆனால் அவர் ஆட்சிக்கு வந்ததும் ஏழு பேர் இணைந்தால் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்து அதைப் பதிவு செய்ய முடியும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். அதற்கு முன்பு அங்கத்தினர் எந்தக் கட்சியாக இருந்தபோதும் ஒரே சங்கமாக பலத்துடன் இருந்து தமது உரிமைக்குப் போராடும் நிலை இருந்தது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கென சங்கங்கள் அமைத்துக் கொள்ள தொழிலாளர் பலம் பிளவுபடுத்தப்பட்டுக் குறைக்கப்பட்டது.

தொழிலாளர் சங்கங்கள், கட்சிகளின் சங்கமாக மாறிவிட்டன. அதன் பயன் எதிர்க்கட்சிகள் எந்தவொரு தொழிற் சங்க நடவடிக்கைகளில் இறங்கினாலும் அரச சார்பு தொழிற்சங்கங்கள் அவற்றை எதிர்க்கும்.

நிர்வாகத்துக்கு எதிரான போராட்டம் என்ற நிலை மாறி தொழிற்சங்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் நிலையே ஏற்பட்டு வருகிறது. மே 21 பொது வேலை நிறுத்தத்துக்கு எதிராக அலவி மௌலானா தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியமையை மறந்துவிட முடியாது. இப்படியான ஒரு நிலையில் ஒரு பொது வேலை நிறுத்தம் எப்படிச் சாத்தியமாகும். அடுத்த காரணம் அரசின் பிரசாரம். அதாவது நாட்டின் அமைதியையும் அபிவிருத்தியையும் குழப்புவதற்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் பயங்கரவாதிகளின் ஆதரவாளர்களின் பணத்திலும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஆதரவுடனும் நாட்டுக்கு எதிராகச் செய்யப்படும் சூழ்ச்சியின் ஒரு பகுதியே இந்த வேலை நிறுத்தம் என அரசும் அரச ஊடகங்களும் பிரசாரங்களை மேற்கொண்டன. நாட்டின் ஓர் அங்குல நிலத்தைக் கூட பயங்கரவாதிகளுக்கு விட்டுக் கொடுக்கப் போவதில்லை என ஜனாதிபதி சவால் விட்டார்.

தமிழ் மக்களின் போராட்டம் பயங்கரவாதமல்ல அது ஒடுக்குமுறைக்கு எதிரான அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கான ஒரு போராட்டம் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியோ, ஜே.வி.பியோ என்றுமே ஏற்றதில்லை. தமிழ் மக்களின் போராட்டம் பயங்கரவாதமல்ல என்ற செய்தியை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளும் வரையும் அரசு தன்னைப் பயங்கரவாதத்துக்கு எதிரான போராளியாகக் காட்டி அந்த மக்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளும்.

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நசுக்கப்பட்டதும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதும் அரச பயங்கரவாதம் என்பதை பகிரங்கமாகப் பிரசாரம் செய்யும் நேர்மையோ, துணிவோ ஐக்கிய தேசியக் கட்சியிடமோ ஜே.வி.பியிடமோ இல்லை.

இந்த நிலையில் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டதைச் சொல்லி அரசுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பயங்கரவாததுக்கு ஆதரவானவையாகக் காட்டி அரசு அரசியல் செய்வதை எவராலும் தடுக்க முடியாது. இலங்கை வரலாற்றில் ஒரு சாதனையாகக் கருதப்படும். 1953 ஹர்த்தால் இடம்பெற்று 60 ஆண்டுகளாகும் நிலையில் தொழிலாளி, விவசாயிகள் கட்சிகளாகவும், இனங்களாகவும் பிளவுண்டு போயுள்ளனர். நம் மேல் திணிக்கப்படும் அடக்குமுறைகளுக்குத் நாமே கட்சியின் பேரால் அரசு கொடுக்கும் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். அதேவேளை சிறுபான்மையினர் மீதான ஒழுங்கு முறைக்குத் துணை போகுமளவுக்கு பெரும்பான்மையினத் தொழிலாளர்கள் தங்கள் வர்க்க குணாம்சத்தை இழந்து விட்டனர்.

இந்தநிலை மாறாத வரை இலங்கையில் வெற்றிகரமான பொது வேலை நிறுத்தமோ, உழைக்கும் மக்களுக்கு விமோசனமோ கிடைக்கப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லிக்காய் சுப்பு

புத்தூர் விஸ்வம்




"இன்றைக்குப் பூரணைப் பூசை முடிய அம்மன் கோயில் விஷேஷ கூட்டம். மறந்து போனியளே! வாருங்கோ போவம்" என்று பிரபன் அழைப்பு விடுத்தான். அவன் பொருளாளர். விசுவர் செயலாளர். ஆலயப் புனருத்தாரணம் முடிந்து கும்பாபிஷேகம், மண்டல அபிஷேகங்கள் தொடர்ந்து விமரிசையாக நடந்தேறிக் கொண்டிருந்த காலம்.

சங்காபிஷேகம் பற்றியும் மலர் வெளியீடு பற்றியும் தீர்மானிக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்த அன்பர்களும் விஷேட அழைப்பில் கூட்டத்துக்கு வருகிறார்கள்.

மிதிவண்டியில் உரிய அறிக்கைப் புத்தகங்களுடன் இருவரும் கோயிலை அடைகிறார்கள். கூட்டத்துக்காகவும், தரிசனத்துக்காகவும் பலரும் வந்திருந்தனர். விசுவரைக் கண்டதும் நெல்லிக்காய் சுப்பு "அடே! விசுவா ஆளே மாறிவிட்டாய். கோயில் பணிகள் நல்லாய்தான் செய்திருக்கிறீர்கள்" என்று நட்போடு இருவரையும் கட்டித் தழுவிப் பாராட்டினான். விசுவரின் நினைவுகள் சுழல்கின்றன.

ஐம்பதாம் ஆண்டுகளில் (1950) ஆறாம் ஆண்டிலிருந்து பதினோராம் ஆண்டு வரை புத்தூரின் பிரபல பாடசாலையில் இருவரும் வகுப்பறைச் சகபாடிகள். காற்சட்டைப் பையில் நெல்லிக் காயோடு உலா வருவதால் நெல்லிக்காய் சுப்பு என்பதே அவன் திருநாமம் ஆகியது. குமாரசாமி அதிபர்தான் இந்தப் பேரைத் தனக்குச் சூட்டினார் என்பதில் சுப்புக்கு ஓர் இனம் புரியாத குதூகலம் பெருமையோடு அதை இப்போதும் சொல்லிக் கொண்டான்.

சிறுப்பிட்டியிலிருந்து பொடி நடையில் வியர்க்க விறுவிறுக்க பாடசாலை மணி அடிக்கும் நேரமாக வருவான். சில வேளை 'ஐந்து நிமிஷம் தானே லேற்' எனக் கூறி அதிபரிடம் அடி வாங்குவான். அம்மன் கோயிலுக்கு அருகில் தம்பி முத்து வாத்தியாரின் சூத்திரக் கிணற்றில் சிலபோது மாடுவளைப்பான் வெள்ளிக் கிழமைகளில் பஜனைக்குழுவில் பாடுவான். திருவிழாக்காலங்களில் 'பிள்ளை'களைக் கண்டால் பஜனை பாடுவதில் உருவேறி சுழன்று சுழன்று சப்பளான் கட்டையுடன் நடனம் பயிலுவான். இன்றைக்கு செல்வம் செல்வாக்கு மிக்க வெளிநாட்டுக் களவானாக தோற்றமளிப்பது வியப்பளிக்கின்றது. இதுதான் அம்பிக்கையின் அருள் என்பதா?



விசுவரின் நினைவுகள் கலைய, எங்கிருந்தோ வந்து சேர்ந்தது சித்தியின் கரடிக் கத்தல்கள். "மாடு சாச்சவங்கள் எல்லாம் வெளிநாடு போட்டு வந்து பெரிய துரைமார்கள் போல கழுத்தில் சங்கிலியுடன் நிற்கினை. இவர்கள் இல்லாட்டி இஞ்ச ஒண்டும் நடக்காதே?" என்று எரிச்சலுடன் பேசினான்.

"எடே! சித்தி நீ கத்தாதை" என்றார். அருகில் நின்றவர் "உவங்கள் என்ன கோயில் நடத்துறாங்கள்? சங்காபிஷேகம் மட்டும் எல்லாம் ஒழுங்காய் நடக்கும். அப்பால நேர காலம் தவறித்தான் பூசையும் நடக்கும்" என்று தொடர்ந்தான்.

"தம்பி சித்தி! குருக்கள் ஐயா பெரிய பெரிய கோயில்களுக்கெல்லாம் கொடியேற்றப் போய் விடுவார். வாற உதவியாளர் நேரம் தவறுகிறதுக்கு அவர் என்ன செய்ய முடியும்? நாம் என்ன செய்ய முடியும்?." இது சபையில் உள்ளவரின் நியாயமான ஆதங்கம்.

"கோயில் குருக்கள் ஐயாவுக்கு நீங்கள் கொடுக்கிற ஆறாயிரம் சம்பளம் போதுமே? மேலதிக உழைப்புக்கு அவர் வேறு இடங்களுக்கும் போகத்தானே வேண்டும். இது உண்மை அறிந்த சபை உறுப்பினரின் வாதம்". "தலைவர் கோயில் கூட்டத்தை தொடங்குங்கோ. நாங்கள் வீட்டை போய் இரவுத் திருவிழாவுக்கு திரும்பி வர வேணும்" என்றாள் கமலா அக்கா.

"இவர் என்ன நெடுகத் தலைவர்" என்று சித்தி மன எரிவுடன் கூறினான். மலேரியாக் காய்ச்சல் காரன் போல எரிச்சலில் அவனது கை, கால்கள் நடுங்கின. பொறாமையை விடப் பெரிய நோய் எதுவுமில்லை. எவன் பொறாமை அற்றவனோ, எவன் சுய நலமற்றவனோ அவன் கோயிலுக்குப் போகத் தேவையில்லை. அவன் மகா சமயி ஆகின்றான் எனப் பண்டிதமணி எழுதியது உண்மைதான். அமெரிக்கா அண்மையில் அனுப்பிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ரொக்கெட் போல சித்தியின் மனம் எரிந்து புகை கக்கியது.

சித்தியின் வீறாப்பைப் பார்த்த நெல்லிக்காய் சுப்பு பயந்து போனார். "ஏனப்பா கோயில் காரியங்களில் குழப்பம் பண்ணுகிறாய் பேசாமல் சேர்ந்து நடவடா தம்பி" என்று அறிவுரை வழங்கினார்.

"இவங்களைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும் நேற்று வெளிநாட்டாலை வந்தனியள்" என்று முத்தாய்மிட்டான் சித்தி. "சரி! உன்ரை மனக்கிடக்கையை வெளிப்படையாகச் சொல்" என்றார் இன்னொரு புலம்பெயர் அன்பர்.

"இலங்கைப் போரினால் தமிழனை இந்தியா, சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா எல்லாம் சேர்ந்து அமத்தி அடிச்ச மாதிரித் தான் எங்கட கொமிற்றிக்காரர். போர் முடிய உடனடித் தீர்வு என்று வாக்குறுதி கொடுத்த அரசு மாதிரித்தான் இவங்கட காரியங்கள்" என்றான். கூட்டத்திலிருந்த வெளிநாட்டு அன்பர்கள் திகைத்தனர். "தலைவர் ஐயா! குற்றஞ்சாட்டுகள் பலமாயிருக்கு பதிலைச் சொல்லுங்கோ" என்றனர்.

"கோயில் புனருத்தாரணங்கள் நடந்த சமயத்தில் மேஸ்திரிவிட்ட பிழையை பலரும் எடுத்துச் சொல்லி அவனை மாற்றிய அன் வந்த நாளிலிருந்து இவர்கள் சில பேர் இப்படித்தான். சித்தியைத் தான் மேஸ்திரியை

**தம்பி முத்து வாத்தியாரின் சூத்திரக்கிணற்றில் சில போது மாடுவளைப்பான் வெள்ளிக்கிழமைகளில் பஜனைக்குழுவில் பாடுவான். திருவிழாக் காலங்களில் 'பிள்ளை'களைக் கண்டால் பஜனை பாடுவதில் உருவேறி சுழன்று சுழன்று சப்பளான் கட்டையுடன் நடனம் பயிலுவான்.**

மேற்பார்வை செய்யும் கடமையைக் கொடுத்தனாங்கள். அப்போது பொறுப்பாக தனது கடமையைச் செய்யமால் விட்டுவிட்டு இப்ப கருணாநிதியின் 'டெசோ' தமிழ் ஈழ ஆதரவு மாநாடு போல ஆரவாரங்கள் காட்டிக் கதைப்பதால் என்ன பயன்" என்றார் தலைவர்.

"தம்பி சித்தி! நீ தடியைக் கொடுத்து அடியை வாங்கின மாதிரி எல்லோ கதைக்கிறாய்" என்றார் சுப்பு. "அரசாங்கமும் தமிழர் தரப்பும் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் முடிவு காணாத இனப் பிரச்சினை போல, தெரிவுக்குழுவுக்கு வந்துதான் இறுதி முடிவு காண வேண்டுமென்பது போல விசேட பொதுக் கூட்டத்தில் இறுதி முடிவு காண இன்றைக்கு கூடியிருக்கிறீர்கள்" என்றார் பொன் மாஸ்டர், சற்று நக்கல் நயம் ததும்ப.

"சரி! நிர்வாக சபைக் கூட்டத்தில் நாங்கள் தலையிடவில்லை. எங்கள் பழைய பண்பாடு பாரம்பரியங்களை பேணவேண்டும், தொடரவேண்டும் என்பதற்கர்கத்தான் ஆலய புனருத்தாரணத்துக்கு துன்பத்தோடு புலம்பெயர்ந்த நிலையில் எமது உழைப்பின் ஒரு பகுதியை தாறம். பொறுப்போடு பெருமளவு திருப்திகாரமாகச் செய்ததற்கு எமது நன்றிகள். சங்காபிஷேகத்தை சித்தியே முன்னின்று நடத்துவான் விடுங்கோ!" என்றார் சுப்பு.

"சித்தி முன்னுக்கு நிக்கிறது நல்லதுதான். நாலு வருடத்துக்கு முன்செய்த அன்னப்பட்சி வாகனத்துக்குரிய கொடுப்பனவுகளுக்கு நிர்வாக சபை கொடுத்தாக இருக்கு. எனக்குத்தான் அது வந்து சேர்ந்ததாக இல்லை" என்றான். பாலச்சந்திரன். சாத்துப்படி சோடனைகள் செய்யும் சிவாராசாவும் தனது கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை என்று பயந்து பயந்து தெரிவித்தார். தனது மகளின் பரீட்சைக்காலம் கோயில் பூசைக்காலத்தில் மட்டும் ஒலிபெருக்கியை மட்டாக உபயோகிக்கும்படி தான் கூறியும் அதிகாலையிலும் தேவையில்லாத நேரங்களிலும் சத்தமாகப் போட்டு இடைஞ்சல்படுத்தியதை வில்லிசைச் சத்தியும் எடுத்துக் கூறினார்.

ஆலயத்தின் முன்னால் பக்தர் ஒருவர் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி வழிபாடாற்றினார். "தம்பி சித்தி" உன்னையே நீயறிவாய்! என்பது யோகர் சுவாமியின் மகாவாக்கியம். நீ எதிரியை நோக்கி உனது சுட்டு விரலைக் காட்டும் போது மற்றய மூன்று விரல்களும் உன்னை நோக்கி திரும்புகின்றதே. பார்த்தாயா!" என்றார் ஒரு வெளிநாட்டு அன்பர்.


"தம்பி சித்தி தேங்காய் உடைப்பதன் தத்துவம் தெரியுமா?" என்றார் நெல்லிக்காய் சுப்பு

"உனக்குள் ஆணவம் கன்மம், மாயை மும்மலங்கள் உண்டு. தேங்காயின் பச்சைமட்டை மாயாமலம். உரித்தெடுக்கின்ற நார் கன்மமலம். உடைத்த அகற்றுகின்ற ஓடு ஆணாவ மலம். மும்மலங்களும் அகன்றால் சித்தி சக்தி என்னும் தேங்காயின் வெளிப் பருப்புத் தோன்றும். மும்மலங்களையும் அகற்றி பரமானந்தப் பெருவாழ்வை அடைவதே ஆலயங்களில் தேங்காய் உடைப்பதன் தத்துவம்" என்று விளக்கமாக கூறினார் நெல்லிக்காய் சுப்பு. நெல்லிக்காய் தின்று தண்ணீர் குடித்த போது வாய் இனித்தது. போல சித்தமும் இனித்தது.


நிமிர்ந்து பார்த்த போது சித்தி என்ற பேர் வழி அந்த இடத்தில் இல்லை. அவர் விரைவாக கோயில் முடக்கில் திரும்பிச் சென்று கொண்டிருப்பது தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து போராடுவோம்



உள்நாட்டில் மக்களை அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்ற நேரத்தில்தான் சர்வதேசமும் தனது கவனத்தை எங்கள் மீது குவிக்கும். சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் மீது அழுத்தத்தை கொண்டு வருவதற்கு எமது போராட்டங்கள் முனைப்பானதாக இருக்கும் என்கிறார் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன். அவருடனான உரையாடலின் இறுதிப் பகுதி.....



2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்ததன் பின்னர் தமிழ் மக்கள் தங்களது இருப்பை தக்க வைப்பதற்கு தினம் தினம் போராட வேண்டியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகளால் அரசின் தமிழின அழிப்பு நிகழ்சி நிரலை வெற்றி கொள்ள முடியாவில்லை.

**இனி இதனை எவ்வாறு எதிர்கொள் ளப் போகின்றீர்கள் ?**

### மக்கள் போராட்டங்கள்

ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் திரட்டிய பெரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். கிராமிய, மாவட்ட மட்ட கிளைகளைக் கொண்ட அரசியல் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும் பட்சத்திலேயே மக்களை இலகுவாக அணிதிரட்ட முடியும்.

உள்நாட்டில் மக்களை அணிதிரட்டிய போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லுகின்ற நேரத்தில் தான் சர்வதேசமும் தனது கவனத்தை எங்கள் மீது குவிக்கும். சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் மீது அழுத்தத்தை கொண்டு வருவதற்கு எமது போராட்டங்கள் முனைப்பானதாக இருக்கும்.

### மக்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனஅழிப்பு நடவடிக்கைகளிலிருந்து, எமது மண்ணை, தேசத்தை, கலாசாரத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது. இவற்றை செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செலுத்துகின்ற அக்கறை போதுமானதா என்ற கேள்வி இருக்கின்றது.

எனவே கூட்மைப்பு, தமிழ் மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்ட வேண்டும். மக்கள் மத்தியில் இருக்கின்ற ஆசிரிய சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள், கடற்தொழில் சங்கங்கள், விவசாய சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், என்று அனைத்துத் தரப்பினரையும் கிராம மட்டத்திலிருந்து ஒன்றிணைக்க வேண்டும். அதனூடாக நடத்தும் போராட்டங்கள் மூலமே நாங்கள் நிச்சயமாக இலங்கை அரசுக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்க முடியும்.

**வேறு வழியில்லை தொடர் போராட் டங்களுக்கு மக்கள் அணிதிரள்வார்களா?**

நடைமுறைச் சாத்தியத்தில் தமிழ் மக்கள் போராடா விட்டால் எதையும் செய்ய முடியாது. எங்களுக்காக நாங்கள் போராடா விட்டால் எங்களுக்காக யாரும் போராடப் போவதில்லை. நிலத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தமிழ் மக்களுக்குத்தான் இருக்கின்றது.

மக்கள் இராணுவ அடக்குமுறைக்குள் இருக்கின்றார்கள்; மக்கள் அச்சத்தின் மத்தியில் இருக்கின்றார்கள்; மக்கள் போராட முற்பட்டால் கைது செய்யப்படலாம் போன்ற பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் அதே மக்கள்தான் தங்கள் சொந்த வாழ்விடங்களுக்காக போராட வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். வேறு மாற்று வழிகள் இல்லை.

தமிழ் மக்கள் மத்தியில் ஒவ்வொரு சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்கள் ஊடாகவும் சகல வழிகளிலும் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஒன்று திரட்ட வேண்டும். இதனைச் செய்தாலே நாம் ஒருபடி முன்னே சென்று விடுவோம். அடக்குமுறை என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் சாகடித்து விடமுடியாது.

**நீங்கள் சொல்வது போல் சர்வதேசம் ஏற்கனவே இலங்கை அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தும் அதற்குரிய பயன்கள் எதுவும் கிடைக்கவில்லையே?**

ஜெனீவாவில் இரண்டு தீர்மானங்கள் வந்தது உண்மை. அதை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் உண்மை.

ஆகாயத்திலிருந்து ஆண்டவன் மூலமாக எதுவும் வந்து நடைபெற்று விடும் என்று எதிர்பார்க்க முடியாது. நாங்கள் எங்களிடம் இருக்கக் கூடிய பலம், வளம் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்தினால் வெற்றி பெறலாம்.

சர்வதேச சமூகம் எல்லா விடயத்தையும் ஏற்றுக் கொள்ளும் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் தமிழ் மக்கள் சொந்த நிலத்திலிருந்து விரட்டப்படுவது யாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரியமல்ல. ஐ.நா. சாசனங்களின் பிரகாரம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்தக் காணிகளுக்குச் செல்ல உரித்துடையவர்கள். இவ்வாறானதொரு நிலையில் நாங்கள் சர்வதேசத்திடம் பரப்புக்களை மேற்கொள்வதன் மூலமும் எங்களின் வெற்றியைச் சாத்தியமாக்கிக் கொள்ளலாம்.

### பேச்சுக்கு அவசியமில்லை

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சை ஆரம்பிப்பது சாத்தியமில்லையா ?**

இலங்கை அரசுடனான பேச்சு தனியே இந்த அரசுடன் மாத்திரம் நடத்தப்படும் பேச்சு அல்ல. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனானது, பிரேமதாஸாவுடனாது, சந்திரிக்காவுடனானது என்று மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளில் பல்வேறுபட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

சந்திகாவின் தீர்வுத் திட்டங்கள் என்று இரண்டு தீர்வுத் திட்டம் இருக்கின்றது. மங்கள முனசிங்க அறிக்கை இருக்கின்றது. ஏன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சர்வ கட்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆகாயத்திலிருந்து ஆண்டவன் மூலமாக எதுவும் வந்து நடைபெற்று விடும் என்று எதிர்பார்க்க முடியாது. நாங்கள் எங்களிடம் இருக்கக் கூடிய பலம், வளம் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்தினால் வெற்றி பெறலாம். சர்வதேச சமூகம் எல்லா விடயத்தையும் ஏற்றுக் கொள்ளும் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் தமிழ் மக்கள் சொந்த நிலத்திலிருந்து விரட்டப்படுவது யாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரியமல்ல. ஐ.நா. சாசனங்களின் பிரகாரம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்தக் காணிகளுக்குச் செல்ல உரித்துடையவர்கள். இவ்வாறானதொரு நிலையில் நாங்கள் சர்வ தேசத்திடம் பரப்புகளை மேற்கொள்வதன் மூலமும் எங்களின் வெற்றியைச் சாத்தியமாக்கிக் கொள்ளலாம்.**

குழுவின் அறிக்கை, நிபுணர் குழு அறிக்கை என்று இரண்டு அறிக்கைகள் இருக்கின்றன.

இவையெல்லாம் இருக்கக் கூடியதாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு இடம் பெற்றது. இந்தப் பேச்சு ஒரு வருடகாலமாக இடம்பெற்ற போதும் ஓர் அங்குலம் கூட முன்னேற்றம் இல்லை. இதற்குக் கொழும்பு அரசு ஒத்துழைக்கவில்லை என்பதுதான் நூறு வீதம் உண்மை.

இலங்கை அரசு உண்மையிலேயே தீர்வில் அக்கறை கொண்டிருக்குமாக இருந்தால், ஏற்கனவே தான் நியமித்த குழுக்களின் தீர்வு திட்டம் தொடர்பான இரு அறிக்கைகள் ஊடாகவும் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்க முடியும். எம்முடன் பேச வேண்டும் என்ற அவசியம் கூட இருக்கவில்லை. இருந்தாலும் நாமும் தீர்வுக்கான வரைவு ஒன்றைக் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த தீர்வுத் திட்டம் தொடர்பில் பேச இலங்கை அரசு முன்வரவில்லை. இவ்வாறானதொரு நிலையில்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது.

### தீர்வு திணிக்கப்படும்

நாடாளுமன்றத் தெரிவுக்குழு 31 அங்கத்தவர்களைக் கொண்டது அந்தக் குழுவில் எங்கள் சார்பில் 3 பேர் மாத்திரமே.

அப்படியானால் இதில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசக் கூடியவர்கள் 3 பேர் மாத்திரமே. ஏனையோர் பெரும்பான்மை முடிவுக்கு கட்டுப்படு பவர்களாக இருப்பார்கள். மேலும் அந்தப் பெரும்பான்மை முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று திணிக்கப்படும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் இந்த அரசுதான் தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நடத்திக் கொண்டிருக்கின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்களைப் பறித்துக் கொண்டிருக்கின்றது.

இன்னும் அதிலிருக்கும் அற்ப சொற்ப உரிமைகளைப் பறிப்பதற்குச் சட்டமூலங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றது.

அவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள். தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கத் தயாராக இருப்பவர்கள் என்றால் இருப்பதையும் பறிக்க மாட்டார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவானவர் அல்லர். அவர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தனது சகாக்களான விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன, கருணா, பக்ளஸ் போன்றவர்களை அனுப்பி தங்களது தீர்வைத் திணிப்பார்கள்.

நடைமுறையில் நடக்கின்ற விடயங்கள் இதனையே தெளிவுபடுத்துகின்றன.

### பேசுவதில் பயனேதுமில்லை

இவ்வளவுக்கு பின்னரும் இலங்கை அரசுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்துப் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. இன்னுமொரு பேச்சு என்பது மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தம் அவசியம். சர்வதேச பார்வையாளர்கள் மத்தியில் பேச்சு நடைபெற வேண்டும். தனியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அரசும் மூடிய அறைக்குள் பேசுவதால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

நாம் சர்வதேச மத்தியஸ்தத்தை கேட்டதும் இது, உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்கின்றார்கள். ஆனால் எமது பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. அமெரிக்கா இரண்டு தீர்மானங்களை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றியுள்ளது. அதற்குப் பல நாடுகள் ஆதரவு அளித்துள்ளன. இந்தியா தலையிடுகின்றது. சீனா வேறுவிதமாக இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அப்படியிருக்கையில் இது எவ்வாறு உள்நாட்டுப் பிரச்சினையாகும்?

பிராந்திய, பூகோள அரசியல் நிலைமைகளிலிருந்தான படிப்பினையைக் கொண்டு புதிய முயற்சியாகவே இனிப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும்.

### கோபத்தில் முஸ்லிம்கள்

பொது பலசேனா என்ற சிங்கள - பௌத்த கடும்போக்கு அமைப்பு முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்கின்றது. இதற்கு முஸ்லிம் தலைமைகள் உரிய முறையில் குரல் கொடுக்கவில்லை என்று முஸ்லிம் மக்களே குற்றம்சாட்டுகின்றனர். உங்களது நடவடிக்கைகள் என்ன?

முஸ்லிம் தலைவர்கள் பெரும்பாலும் அரசுடன் இணைந்திருக்கின்றார்கள். பொதுபலசேனா அமைப்பினால் முஸ்லிம் மக்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து வருகிறார்கள் என்பதும் அதனால் அவர்கள் கோபத்தில் இருக்கின்றார்கள் என்பதும் உண்மை.

முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு அவர்களது தலைமைத்துவங்கள் தயாராக இல்லை. அவர்கள் தமது நாடாளுமன்ற ஆசனங்களையும், அமைச்சுப் பதவிகளையும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் அவர்களது பிரச்சினைகளையும் கையாள வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது.

முஸ்லிம் மக்கள் மத்தியிலிருந்தும், தமிழ் முஸ்லிம் உறவுக்கான முன் முயற்சிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம் மக்கள் மத்தியில் புலிகள் ஒழிக்கப்பட்டுவிட்டனர். எல்லாப் பிரச்சினைகளும் முடிந்து விட்டது என்ற நிலைப்பாடு உள்ளது. ஆனால் இன்று தாங்கள் தாக்கப்படுகின்ற சூழ்நிலையில் அச்சங்களும், கோபங்களும் அவர்களுக்கு வருகின்றன.

### மன்னிப்பு கோருகின்றோம்

போராட்ட காலங்களில் தமிழர் தரப்புகளால் முஸ்லிம்களுக்கு சில பல இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை தவறு என்று நாம் பலமுறை பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். கடந்தகால சம்பவங்களுக்காக நாங்கள் மன்னிப்புக் கோரியுள்ளோம்.

இதே போன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும், வேறு முஸ்லிம்களாலும் சம்மாந்துறையிலும், காரைதீவிலும், வீரமுனையிலும் பலர் கொல்லப்பட்டும் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன. எனவே ஒரு தரப்பில் மட்டுமல்ல இரு தரப்பிலும் பிழை நடந்திருக்கின்றது. இரு தரப்பில் நடந்தாலும் பிழை பிழைதான். அதனை நாங்கள் சரி என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

சந்திப்பு: டிலீப் அமுதன்
படங்கள்: தர்சன்




ஜம்புலிங்கம் செடிகொடி வளர்ப்பதில் அதிக பிரியம் கொண்டவர். ஒவ்வொரு நாளும் அவற்றுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு ஒரு பணியாளரை வேலைக்கு அமர்த்தி இருந்தார். ஒரு நாள் அந்தப் பணியாளர் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றாமல் ஜம்புலிங்கத்தின் வீட்டு வாசலில் அமர்ந்திருந்தார். அப்போது வெளியே வந்த ஜம்புலிங்கம் பணியாளர் சும்மா இருப்பதைப் பார்த்து கோபம் கொண்டார். ஆத்திரத்தோடு அவர் ''சும்மா இருக்காமல் போய் செடிகளுக்கு தண்ணீரை ஊற்று'' என்றார். அதற்கு பணியாள் ''வெளியே நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது. அதுதான் தண்ணீர் ஊற்றவில்லை'' என்றான். அதற்கு ஜம்புலிங்கம் புத்திசாலித்தனமாக யோசித்துவிட்டு ''அதனாலென்ன? குடையை பிடித்துக்கொண்டு போய் தண்ணீரை ஊற்று'' என்றார்.

ஜம்புவின் தடாலடி 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வெற்றி பல தோல்விகள்



■ ஜெரா

இது சிங்களவர்களுக்கு வெற்றிவிழாக் காலம். தமிழர்களைப் போரியல் ரீதியாக வெற்றிகொண்டு, இலங்கைத் தீவை தனிச் சிங்கள நாடாக்கிய நாள்களை அவர்கள் கொண்டாடத் தொடங்கியிருக்கின்றனர். இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மையினமான தமிழர்களுக்கு இது கரிக் காலம். அதாவது தமிழர்களின் ஆயுதப் போராட்டப் பலம், அரங்கிலிருந்து இறுதியாக வெளியேற்றப்பட்ட காலம். சாதாரண தமிழ்க் குடிமகனுக்குரிய அனைத்து உரிமைகளும், அதிகாரங்களும் பறிக்கப்பட்ட காலமாகவும் இதனைக் குறிப்பிடலாம். ஆகவே இது தமிழர்களைப் பொறுத்தவரையில் தோல்விகளையும் துயரத்தையும் சுமக்கும் காலம். அதனையும் கதவுகளும், யன்னல்களும் மூடப்பட்ட வீடுகளுக்குள் மௌனமாகவே அனுஷ்டிப்பு மேற்கொள்ளும் நாள்களாகக் கொள்கின்றனர்.

தெற்கில் வாழும் சிங்களவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்க, வடக்கில் வாழும் தமிழர்கள் அவலக் கண்ணீர் வடிக்கும் நிலையை இந்த இரு நிகழ்வுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

## வெற்றி உண்மையானதா?

ஒரே நாட்டுக்குள், ஒரே காலத்தில் நிகழும் இந்த நிகழ்முரண்கள், ஏற்பட்டிருக்கும் பிளவை மேலும் ஆழமாக்கக் கூடியவை. எவ்வாறான வெற்றிகளும் ஒற்றுமையையும், எதிரியையும் மதிக்கும் மனநிலையை உருவாக்குவதற்காகவே பெறப்படுகின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், வெற்றியானது அடிமைத்தனத்தையும், இன வெறியையும் மேலும் அகலிக்கும் கருவியாகவே பயன்படுத்தப்படுகின்றது.

சிங்களவர்கள் கொண்டாடும் இந்த வெற்றி, உண்மையில் அவர்கள் கூறும் தனிச் சிங்கள இலங்கைக்கு கிடைத்த வெற்றியா? அல்லது மாபெரும் தோல்வியா? போர் வெற்றி சாதாரண சிங்களவர்களையும் தெருவில் இழுத்துப் போட்டிருக்கின்றது. பொருளாதார ரீதியில் என்றுமில்லாத பின்னடைவை சிங்கள மக்கள் அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். ஒவ்வொரு நள்ளிரவிலும் ஏதாவது ஒரு பொருள் விலையேற்றப்படும் எனும், தூக்கம் தொலைக்கும் மன உளைச்சலுடனேயே படுக்கைக்கு செல்கின்றனர். நாள்தோறும் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டாலும் சிங்கள மக்களும், எதிர்கட்சிகளும் அதற்கெதிராகப் போராடும் சூழல் ஒரு போதும் உருவாகாத நிலையை போர் வெற்றி உருவாக்கி வைத்திருக்கின்றது. இந்த முறையும் பொருள்களின் விலையை முன்வைத்து மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்கத் தொடங்கவே, போர் வெற்றி முழக்கங்களும், அலங்காரங்களும், அதனை வெற்றிகரமாக மறைத்துவிட்டன. இதுவே கடந்த மூன்று வருடங்களின் அனுபவப் பாடமாகவும் இருந்து வருகின்றது.

## இந்திய அழுத்தம்

இலங்கை என்றுமில்லாத அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்களையும், கடனையும் போருக்குப் பின்னரே அனுபவிக்கின்றது. போர் வெற்றிக்கு முன்னர் இந்தியா மட்டுமே இலங்கை மீது அதிகம் ஆக்கிரமிப்பு செய்யும் நாடாக இருந்து வந்தது. அதுவும் நேரடியான ஆக்கிரமிப்பாக இருந்த சம்பவங்கள் மிகக் குறைவே.

இராஜதந்திர, போரியல் மற்றும் இராணுவ ரீதியான அழுத்தங்களை இந்தியாவிடமிருந்து இலங்கை எதிர்நோக்கியிருந்தாலும், புலிகளைப் பயன்படுத்தி இந்தியாவையும், இந்தியாவைப் பயன்படுத்தி புலிகளையும் வெற்றிக் கொள்ளும் கருவியாகவே அந்த ஆக்கிரமிப்புக்களை இலங்கை திசைப்படுத்திக் கொண்டது. ஆகவேதான் போருக்கு முன்னரான அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்களை இலங்கை இலகுவாக வெற்றி கொள்ள முடிந்தது.

## சீனா ஆக்கிரமிப்பு

ஆனால் போரின் பின்னரான நிலைமைகளோ முற்றிலும் வேறானவை. என்றுமில்லாத அளவுக்கும் சீனாவின் ஆக்கிரமிப்பு இலங்கை மீது ஏற்பட்டிருக்கின்றது. இலங்கையின் கடற்றுறைகள், பெருந்தெருக்கள் என ஒரு நாட்டின் பிரதான பொருளாதார, பாதுகாப்பு விடயங்கள் இன்னொரு நாட்டுக்கு வாரிவழங்கப்பட்டுவிட்டன.

போருக்கு முன்னரான காலத்தில் சீனர்கள் இலங்கைக்கு சுற்றுலாவிகளாகவே வந்தனர். இப்போது பணியாளர்களாகவும், நிறுவனத் தலைவர்களாகவும் வந்துபோகின்றனர்; தங்கியிருக்கின்றனர். மறுபுறத்தில் பாகிஸ்தானும் இலங்கையின் வட பாகத்தில் முகாமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அந்த செய்திகள் பொய்யானவை எனக் கூறப்பட்டாலும், அது நடக்க வாய்ப்பில்லை என்று கூற முடியாது. ஏனெனில் போர் வெற்றிக்கு இந்த நாடு முழுவதுமே சர்வதேசத்தின் முன் அடகு வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளுக்கும் நன்றிக்கடனுக்காகவும், ஒப்பந்தங்களுக்காகவும் பங்குகொடுக்க வேண்டியது அவசியம்.

இதுவரை காலமும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளைத் தேசமாக இலங்கை இருந்து வந்திருக்கின்றது. போர் வெற்றியின் விளைவான சீனாவின் நேரடி ஆக்கிரமிப்பு அமெரிக்காவை, தனக்கு எதிரான நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் சேர்க்க வைத்திருக்கின்றது. அந்த நாட்டிலிருந்து கிடைத்து வந்த இலவசங்கள், கடன்கள், அபிவிருத்தி மூலாதாரங்கள், ஆயுத வழங்கல்கள், வரி குறைப்பு சலுகைகள், மனித உரிமை மீறல்களின்போது காப்பாற்றி விடும் நிலைமைகள் எனப் பலவற்றை இலங்கை இழந்திருக்கின்றது.

இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு அரசியல் மாற்றத்தையும், அபிவிருத்தி நடவடிக்கையையும் அமெரிக்கா ஆழ்ந்து கவனிக்கும் நிலையை போர் வெற்றி உருவாக்கி கொடுத்திருக்கின்றது.

## அவமானம்

இந்த வெற்றிக்காக நடந்த இறுதிப் போரின்போது இராணுவத் தரப்பினர் செய்த சாகசங்கள் இலங்கைக்குப் பெரும் அபகீர்த்தியையும், அவமானத்தையும் சர்வதேச மக்களிடமிருந்து வாரியடித்திருக்கின்றது. இலங்கை என்றால் சொர்க்கபுரி, தேவதைகளின் தேசம் என்ற எண்ணத்தோடு சுற்றுலா வரும் பயணிகளின் முன் அருவருப்பான, பிண நாற்றம் வீசும் இலங்கையை போர் வெற்றி அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றது.

இலங்கையர் என்ற அடையாளத்தை, வெளிநாட்டவர் ஒருவருக்கு முன்னால் அறிமுகப்படுத்தும் போதே, சனல்-4 ஆவணப் படத்தில் வருகின்ற இலங்கை இராணுவத்தின் கொடுமைகள் தான் முதலில் நினைவுக்கு வரும் மனநிலையை இந்தப் போர் வெற்றி உண்டுபண்ணியிருக்கின்றது.

## எதிர்ப்பு தீவிரம்

வருடா வருடம் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் இறுதிப் போர் போர்க்குற்ற ஆவணங்கள் இலங்கை மீது மாறாத கறையை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த அவமானங்கள் போர்க் குற்றம் புரிந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் இணைக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் பரவலடையக் காரணமாக இருக்கின்றன. அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட ஜனநாயக வல்லரசுகளின் தொடர் கண்டனங்களுக்கும், கவனிப்புக்கும் இலங்கை உள்ளாகிவருகின்றமைக்கு இது மிகப்பிரதான காரணமாக இருக்கின்றது.

ஒரு பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கே எத்தனை பிரச்சினைகளை இலங்கை சந்திக்க வேண்டியிருக்கின்றது! இலங்கை அரசின் ஓர் உயர் மட்டப் பிரதிநிதி ஏதாவது ஒரு நாட்டுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்வதாயின் எவ்வளவு போராட்டங்களையும், அவமானங்களையும் முகம்கொள்ள நேரிடுகின்றது! இந்த நிலைமைகளைப் போர் வெற்றி, வெற்றிகரமாக உருவாக்கியளித்திருக்கின்றது.

போர் வெற்றியின் மூலம் இந்தியாவை மட்டுமே இராஜதந்திர ரீதியில் இலங்கை தோற்கடித்திருக்கின்றது. இலங்கையைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் இந்தியாவைக் கையாலாகாத நண்பனாகப் போர் வெற்றி மாற்றிக் கொடுத்திருக்கின்றது. இது இலங்கைக்கு நல்லதே என்றாலும், இந்தியாவை விட ஆபத்துமிக்க நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு இலங்கையை மாற்றிக் கொடுத்தது போர் வெற்றிதான். ஆபத்துக்கு உதவும் அயல் நண்பனை எதிரியாக்கி வைத்திருப்பது ஒரு நாட்டின் அரசியல் இருப்புக்கும், அதன் எதிர்காலத்துக்கும் நல்ல அறிகுறியல்ல. இதனால்தான் இது ஒரு வெற்றியும் பல தோல்விகளுமாக மாற்றம்பெற்று வருகின்றது.

நாள்தோறும் பொருள்களின் விலை அதிகரிக்கப் பட்டாலும் சிங்கள மக்களும், எதிர் கட்சிகளும் அதற்கெதிராகப் போராடும் சூழல் ஒரு போதும் உருவாகாத நிலையை போர் வெற்றி உருவாக்கி வைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் குடியேறலாம்

ரம்பான்

80 அசை போட ஒரு விடயம்

நீங்கள் இறந்தபின் எங்கே செல்ல விரும்புகிறீர்கள் என்று எவரிடமாவது கேட்டுப் பார்த்தால், அவர் உண்மையில் சமய நம்பிக்கை உள்ளவராக இருப்பவரானால் என்னதான் மனதார பாவம் இழைத்தவராக இருந்தாலும் நிச்சயமாக மோட்சத்துக்கு போகத்தான் விரும்புவதாகக் கூறுவார்.

மோட்சமோ நரகமோ இறந்தபின் ஏதோ ஒரு வடிவத்தில் தான் மனித ஆவி உடலில் இருந்து வெளிப்பட்டு புறப்படுவதாக நம்பிக்கை. இதுவரை காலமும் இந்த நம்பிக்கையானது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

எதுவானாலும் ஒருவர் இறந்துவிட்டால் அவர் இருக்கும் காலத்தில் என்னவிதமாக வாழ்ந்தார் என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவருடைய உறவினர்கள் சகல விதமான சமய சடங்குகளையும் பூர்த்தி செய்து அவரை எப்படியும் மோட்சத்துக்கு அனுப்பிட பிரயத்தனம் செய்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான நம் உறவுகள் முள்ளிவாய்க்காலிலும் வேறு இடங்களிலும் கேள்வி முறையின்றி கொன்று குவிக்கப்பட்டார்கள். அவலமாக அகாலத்தில் இறந்து போன இந்த மக்களின் உயிர்களுக்கெல்லாம் என்ன நேர்ந்திருக்கும் என்பது தெரியவில்லை. உரிய காலம் வரை வாழாமல் அகாலத்தில் மடிகின்றவர்களின் உயிர்கள் போக்கிடமின்றி காலம் வரும் வரை பூமியில் தங்கியிருக்கும் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு.

அவ்வாறான உயிர்களுக்கு விமோசனமும் நற்கதியும் கிடைக்க வேண்டும் என்பதற்காக உறவினர்கள் அதற்கான சடங்குகளையாவது செய்து மன அமைதி பெற விரும்புகிறார்கள். அதைத்தான் கடந்த வாரம் குடாநாட்டில் பல இடங்களிலும் நிகழ்த்தி இருந்தார்கள். அதைக்கூட நிம்மதியாக இடையூறு இன்றி செய்ய முடியவில்லை என்றால் இதை யாரிடம் சொல்லி அழுவது என்கிறார்கள் போரில் உறவுகளை இழந்து நிற்கும் பல தமிழ்க் குடும்பத்தவர்கள்.

### வேற்றுலகம் செல்ல விருப்பம்

இறந்தவர்கள் மோட்சத்துக்குப் போகிறார்களோ இல்லையோ இப்பொழுது அநேகர் இறக்காமல் வேற்று உலகம் சென்று வாழ விரும்புகிறார்கள் என்று செய்தி வந்துள்ளது.

பூமியில் கிடந்து உழன்றது போதும் என்பதற்காகவல்ல வேற்று உலகில் சென்று குடியேறி நிரந்தரமாக அங்கேயே வாழ்ந்து மடிய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஏராளமானவர்கள் இப்பொழுது செவ்வாய்க் கிரகத்தில் போய் குடியேற விண்ணப்பங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அந்தச் செய்தி.

மார்ஸ் வன் (mars one) என்ற நிறுவனம் இப்போது செவ்வாயில் உயிருடன் சென்று இறங்கி வாழ விரும்புகிறவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று வருகிறது. இந்த செயற்பாட்டை ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி இலாப நோக்கமற்ற அந்த நிறுவனம் ஆரம்பித்தது. மே மாதம் 7 ஆம் திகதி வரை சுமார் 78 ஆயிரம் பேரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் அறிவித்தார்கள்.

2023 ஆம் ஆண்டில் இரண்டு பேரை செவ்வாய்க் கிரகத்தில் குடியேற்றுவதற்கு அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதன் பிறகு ஒவ்வொரு இரண்டு வருடங்களிலும் மேலும் அதிகமான விண்ணப்பதாரிகள் செவ்வாயில் போய் குடியேறுவார்களாம்.

2023 ஆம் ஆண்டு இரண்டு நபர்களை செவ்வாயில் குடியமர்த்துவதற்கு மட்டும் 6 பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என்று மார்ஸ் வன் நிறுவனம் கணக்கிட்டுள்ளது. நெதர்லாந்தை தலைமையிடமாக கொண்டுள்ள இந்த நிறுவனம் உலகம் முழுவதும் செவ்வாய்ப் பயணம் தொடர்பான தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் செலவுகளுக்கான பணத்தை சேகரிக்கவிருக்கிறது. செவ்வாய்க் குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்தல் முதல் அவர்களின் செவ்வாய்க்கிரக முதலாண்டு வாழ்க்கையையும் ஆவணப்படுத்தி நிகழ்ச்சிகளில் காட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிக்கவிருக்கிறது. குறைந்தது 18 வயதான எவரும் விண்ணப்பிக்கலாம். மார்ஸ் வன் இணையத் தளத்தில் ஒரு நிமிட தொலைக் காட்சி விளக்கத்தின் மூலம் விண்ணப்பத்தை தாக்கல் செய்யலாம். செவ்வாயில் குடியேற விரும்புவதற்கான நோக்கத்தை அவர் தெரிவிக்க வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகளின் தொலைக் காட்சிகளையும் அதில் நீங்கள் பார்வையிடலாம்.

விண்ணப்பதாரிகளிடம் அவர்களின் சொந்த நாட்டின் சொத்து பெறுமதிக்கேற்ப ஒருவரிடம் 5 தொடக்கம் 75 அமெரிக்க டொலர் வரை கட்டணமாக அறவிடப்படும். அமெரிக்கர்கள் 38 டொலர்களை செலுத்துகிறார்கள் என்று நிறுவனத்தின் முக்கியஸ்தர் லேண்ட்ஸ் டோர்ப் கூறினார்.

## புதிருக்கு விடை என்ன?

1. கறுப்பு மனிதன் கறுப்பு மாளிகையிலும் சிவப்பு மனிதன் சிவப்பு மாளிகையிலும் வாழ்கிறார்கள் என்றால்- வெள்ளை மாளிகையில் யார் வாழ்கிறார்?

2. படகில் ஏறி ஆற்றில் படகு சவாரி போகையில் படகு கவிழ்ந்தது. உயிர் தப்பி கரை சேர்ந்த மூவரில் இருவரின் தலைமுடி நனைந்திருந்தது- மூன்றாமவருக்கு என்ன நடந்தது?

3. உங்களிடம் மட்டும் இருக்கும்போது யாருக்காவது கொடுக்க விரும்புவீர்கள். கொடுத்துவிட்டாலோ உங்களுக்கு சொந்தமில்லாமல் போய் விடும்- அது என்ன?

4. என்னை நசுக்கினால் எனக்கு வலிக்காது நீங்கள்தான் அழுவீர்கள்- நான் யார்?

5. ஒன்றை முன் பக்கமாக எடுக்கும் போது பலதை பின்பக்கமாக விட்டுவிடுகிறீர்கள்- அது என்ன?

6. கொஞ்சமாய் இருக்கும்போது அதிகமாகத் தெரியும். அதிகமாக இருக்கும்போது கொஞ்சமாகத்தான் தெரியும்- அது என்ன?

7. இந்த வங்கியில் பணம் கிடைக்காது- எந்த வங்கி?

8. சிஸ்டர் என்றால் சகோதரி. வளவளவென்று பேசுவார்கள். ஆனால் இந்த சிஸ்டரை திருகினால் தான் பேசுவாள்- யார் அந்த சிஸ்டர்?

9. ஆதிகாலத்தில் நம் முன்னோர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அதனை வைத்து இன்றும் கூட சுவரின் ஊடாக வெளியில் பார்க்க முடிகிறது- என்ன அது?

[விடைகள் 00 ஆம் பக்கம் பார்க்க]

மார்ஸ் வன் (mars one) என்ற நிறுவனம் இப்போது செவ்வாயில் உயிருடன் சென்று இறங்கி வாழ விரும்புகிறவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்

## திரைவிமர்சனம்



தொகுப்பு: ஆதங்கன்

*ஆவீன மழைபொழிய இல்லம் வீழ*
*அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ*
*மாவீரம் போகுதென்று விதைகொண் டோட*
*வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்*
*சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்*
*தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்*
*கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்*
*குருக்கேளா தட்சணைகள் கொடுவென்றாரே..*

கி.பி. 1800-களில் இராமச்சந்திரக் கவிராயர் எழுதிய இந்த பாடலின் விளக்கம் இதுதான் : வீட்டில் பசு மாடு கன்று போட்டிருக்கிறது. கடும் மழையால் வீடு இடிந்து விழுந்திருக்கிறது.. வீட்டில் மனைவி நோய்வாய்ப்பட்டு படுத்திருக்கிறாள். வேலைக்காரன் திடீரென்று இறந்து விட்டான். வயலில் ஈரம் காய்ந்துவிடும் என்று பயந்து நெல் விதை போட வயலுக்கு ஓடுகிறான். வழியிலேயே அந்த விதை வாங்க கடன் கொடுத்தவன் கொடுத்த கடனுக்கு பதில் சொல்லு என அவன் வேட்டியை பிடித்திழுக்கிறான். அவனது நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்து விட்டதாக சாவு செய்தி வருகிறது. சம்பந்தி வீட்டில் இருந்து வீட்டுக்கு திடீரென்று ஆட்கள் வந்திருக்கிறார்கள். கடன்காரர்களை மல்லுக்கட்டி அகற்றிவிட்டு வயலுக்குள் ஓடியவனை பாம்பு கொத்துகிறது. பாம்புக் கடிக்கு முதலுதவியைச் செய்துவிட்டு வயலுக்குள் ஓடியவனை அரசு அதிகாரிகள் வரி எங்கே என்று கேட்டு மடக்குகிறார்கள். அதே நேரம் ஊர்க் கோவிலின் அன்றைய கொடை அவனது குடும்பம் என்பதால் அதைக் கேட்டு குருக்கள் வீட்டுக்கு வந்து நிற்கிறார். - இத்தனை பிரச்சினைகளும் ஒருவனுக்கு ஒரே நாளில் அடுத்தடுத்து தொடர்ந்து நடந்தால் அவன் என்ன ஆவான்.? செத்து சுண்ணாம்பாகிவிட மாட்டானா. என்கிறார் கவிராயர். இதற்கெல்லாம் அடிப்படையான விஷயம் நேரம்தான். நல்ல விஷயங்கள் தொடர்ந்து நடந்தால் அது நல்ல நேரம். கெட்ட விஷயங்களே தொடர்ந்து நடந்தால் அது கெட்ட நேரம். ஒவ்வொரு நல்ல நேரம் முடிந்து கெட்ட நேரமும், கெட்ட நேரம் முடிவுக்கு வந்து நல்ல நேரமும் தொடங்கும் என்பது நமது வாழ்க்கையின் நியதி. இதைப் புரிந்து கொண்டால் நமக்கு எப்போதுமே நல்ல நேரம்தான் என்கிறார் இந்தப் படத்தின் இயக்குநர். கதையும் அதுதான்..!காலத்தோடு இயைந்து, சூது கவ்வும் என்றே திரைப்படத்திற்கு பெயர் வைக்கும் அளவு தமிழ்த் திரையுலகம் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், தர்மம் வெல்லும் என்ற காலாவதியான ஆதி நம்பிக்கையை தூசி தட்டி இப்படத்தின் கருவாக வைத்துள்ளார் இயக்குநர்.வேலையை இழந்த வெற்றிக்கு, தங்கைகல்யாணத்திற்கு வாங்கிய கடனை திருப்பி அடைக்க வேண்டிய நெருக்கடி.நண்பன் அளிக்கும் பணமும் களவாடப்படுகிறது. போதாக்குறைக்கு தங்கையின்கணவன்வேறுமீதமுள்ள வரதட்சனை தொகையைக் கேட்கிறான். மும்முனை தாக்குதலில் சிக்குண்ட வெற்றியின்நிலையென்ன என்பதற்கு பதிலுடன் படம் நிறைவுறுகிறது.இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று நினைக்க வைக்கும் அளவிற்கு அசட்டுத்தனம்வழியும் முகத்துடன், ''சூது கவ்வும்' படத்தில் நடித்திருப்பார் சிம்ஹா.இந்தப் படத்தின்முரட்டு முதுகெலும்பே வட்டிராஜாவாக வரும் அவர் தான். முகபாவம், உடல்மொழி, மிரட்டலானகுரலொலியில் அலட்சியமாக வசனம் பேசுவது என படத்துடன் ஒன்ற வேணியாக நஸ்ரியா நாசிம். பொலிவாய், அழகாய், பாந்தமாய் திரையில் தோன்றுகிறார். நாயகனைகாதலிப்பது, அவருக்கு ஊக்கம் அளிப்பது, வில்லனால் கடத்தப்படுவது என இலக்கணம் பிறழாப் பாத்திரத்தில் கச்சிதமாகப் பொருந்துகிறார். சின்னச் சின்ன முகபாவங்களில் ஆங்காங்கே ஈர்க்கிறார். கதாநாயகன் வெற்றியாக நிவின். ஸ்டண்ட் ரவிஅமைத்திருக்கும் சண்டைக் காட்சிகளில்வில்லன்களை நிவின் அடி பின்னினாலும், அதிக நாயகத்துவம் இல்லாத பாத்திரம் தான். கண்டதும்காதல் என்ற வழக்கம் மெல்ல மாறி, உடன் படிக்கும் தோழியைக் காதலிக்கும் கலாசாரம் மெல்லதமிழ்ப்படங்களில் உருவாகிவருகிறது. நாயகி அழகாக இருப்பதால் தான் காதலிக்கிறேன் என்றஅபத்தமான ஒப்புதல் வாக்கு மூலத்தையும் தவறாமல் பதிந்து விடுகின்றனர்.தண்டாயுதபாணியாக நாசர். அவர் திரையில் தோன்றிய நொடி முதல் படம் முடியும் வரை படம் கலகலப்பாகச் செல்கிறது. தாலாட்டு பாட ஆயத்தமாகும் பொழுதும், பேச்சினிடையில் ஆவ்சம் சொல்லும் பொழுதும், தவறாக ஆங்கில வார்த்தைகளை உச்சரிக்கும் பொழுதும் கலக்குகிறார்.நாசரின் இளம் வயது தம்பியாக வருபவரும் நன்றாக நடித்துள்ளார். செம்மையாகச்செய்துள்ளார். ஸ்டைலாக ஆங்கிலம் பேசுவதும், கடனை திருப்பிக் கேட்கும் வட்டி ராஜாவிடமே 500 ரூபாய் வாங்குவதும், மருத்துவமனையில் படுத்துக்கொண்டிருப்பவர்நர்ஸின் குரல்கேட்டதும், 'ஐ.. கேர்ள் வாய்ஸ்' என விழித்துப் பார்ப்பதும் ரசிக்க வைக்கிறது.முக சேஷ்டைகள் செய்யும் இசை பிரியராகவும், காவல்துறைஅதிகாரியாகவும் நடித்துள்ளார் ஜான் விஜய். நாயகியின் தந்தையாக வரும் தம்பி ராமையா தனது வழமையான நடிப்பால்ஒப் பேற்றியுள்ளார். துண்டுபாத்திரத்திலாவது எல்லாப்படங்களிலும் தலையைக் காட்டிவிடும்பழக்கத்தை மாற்றிக் கொள்ளாமல் வந்து போகிறார் மனோபாலா. சிற்சில காட்சிகளிலே வந்தாலும் ராஜ் திலக் படத்தின் போக்கையே மாற்றுபவராக வந்து போகிறார்.கதை, திரைக்கதை, இயக்கம், படத்தொகுப்பு என முதல் படத்திலேயே கலக்கியுள்ளார் அல்ஃபோன்ஸ்புத்திரன். முதற்பாதியில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டாலும், படம்நல்லபடியாக முடிந்து ஒருமுழுமையுணர்வையும் நிறைவையும் தருகிறது. வன்முறையை ஊக்குவிக்காத படம் என்பது கூடுதல்சிறப்பு. பட முடிவில், நேரத்தைப் பற்றிய கதாகாலட்சேபத்தைத் தவிர்த்திருக்கலாம்.

> “ கெட்ட விஷயங்களே தொடர்ந்து நடந்தால் அது கெட்ட நேரம். ஒவ்வொரு நல்ல நேரம் முடிந்து கெட்ட நேரமும், கெட்ட நேரம் முடிவுக்கு வந்து நல்ல நேரமும் தொடங்கும் என்பது நமது வாழ்க்கையின் நியதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிவிடாப் பழசுகள்



எஸ்.எம்.கோபாலரத்தினம்

முழங்காவில் உள்ள ஆஸ்பத்திரிக்கும் இடையிடையே வேரவில் வைத்திய சாலை வைத்தியர் ''சேவைக்காக'' போய் வருவதுண்டாம். அயலிலுள்ள சிறிய கிராமங்களிலுள்ள மக்கள் இந்த வேரவில் ஆஸ்பத்திரியையும் அதற்குப் பொறுப்பாக இருக்கும் அந்த வைத்தியரையும்தான் ''கடவுளுக்கு'' அடுத்ததாக நம்பியிருக்கிறார்கள். இந்த ஆஸ்பத்திரியும் இந்த ''வைத்தியரும்'' இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் வலைப்பாட்டுக்கு நான் வரவில்லை. இங்கு வந்த சமயத்தில் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறலாமென்ற நம்பிக்கையில்தான் வீட்டுக்காரரும் என்னைக் கூட்டி வந்தார்.

இரண்டு தாதிகள் ஒருவருக்குகொருவர் உதவியாக இருந்தார்கள்.

எனது இடது கால் சின்னி விரலில் ஏதோ குத்தியதால் அங்கு போனேன். என்ன நடந்ததென்று தெரியவில்லை. ஒரு துளி இரத்தம் விரலின் மேல் வந்து உட்கார்ந்திருக்கிறது. ''வைத்தியர் எங்கே?'' என்று கேட்டேன்.

''வைத்தியர் வீட்டுக்குப் போயிற்று இப்ப பின்னேரம்தான் வந்தவர் . களைத்துப் போயிருக்கிறார். இப்ப யாரையும் பார்க்க மாட்டார்'' என்று ஒரு தாதி சொன்னார்.



அந்த நாள் ஞாபகம்..

''ஆபத்தான நோயாளிகள் வந்தால்என்னசெய்வீர்கள்?'' என்று கேட்டேன்.

''வைத்தியர் லீவில் போய் வந்தவர். இனி நாளைக்குக் காலையில்தான் பாப்பார். நீங்களும் நாளைக்குக் காலையில் வாருங்கோ'' தாதியும் உதவியாளரும் சொன்னார்கள்.

முன்பொருதடவை இந்த வைத்தியரைச் சந்தித்துப் பேசிய போது போர்க் காலத்தில் அவரின் சேவை பற்றிச் சொல்லியிருந்தார். இப்போதும் மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் பணியிலிருப்பதாகச் சொல்லியிருந்தார். அந்தச் சமயம் எனக்கு வயிற்றுக்கோளாறுக்கு மருந்து தந்தவர். ஆஸ்பத்திரியில் வேலைநேரம் முடிந்த பின் தனியார் வைத்தியசாலையாகப் பாவித்து வைத்தியம் செய்வார் என்றும் அங்கேயே கேள்விப்பட்டுமிருக்கிறேன். முன்பு அவருடன் நீண்ட நேரம் பேசிப் பழகியதால் என்பெயரைச் சொல்லி அனுப்பினேன். வீட்டுக்குப் போய் வந்ததால் நன்றாகக் களைத்துவிட்டிருந்தாராம்.

ஆஸ்பத்திரி விடுதியை நோட்டம் விட்டேன். ஐந்தாறு கட்டில்கள். நேர் சீராக சுத்தமானவையாகக் கண்ணில்படவில்லை. உங்களை இரவுக்கு விடுதியில் தங்கி நிற்கச் சொன்னார். காலையில் வந்து பார்ப்பாராம்''

இரவு அந்த விடுதிக்குக் காவலாளியாக நிற்க விருப்பமில்லை என்றேன். தாதிகள் இருவரும் யோசித்த பின் சிறிது இரத்தம் எடுத்து ஏதோ ஒரு தண்ணீர்க் கலவையில் பரிசோதித்துப் பார்த்துவிட்டு இது பாம்புக் கடியல்ல. பயப்படவேண்டாமென்று சொல்லி விட்டு காலையில் வந்து வைத்தியரைப் பாருங்கள் என்றனர். ''உயிருடன் இருந்தால் யோசிப்போம்'' என்று வீடுதிரும்பினோம்.

இன்றும் இதே வைத்தியர்தான் அந்த ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பாக இருக்கிறார்.

இளம் சந்ததி முன்னேறத் துடிக்கிறது. முன்னேறிய பழைய பரம்பரைவழிவிட்டுக்கொடுக்கவோ புதிய பரம் பரைக்கு வழிகாட்டவோ தயாராக இல்லை. இதே பன்னிரெண்டாம் கட்டைப் பாதையில் ஜெயபுரம் என்ற முன்னேறிவரும் கிராமத்தில் சந்தைக்குச் சமீபத்தில் கிராமத்தின் உள்ளே செல்லும் புதிய சிறிய வீதிக்கு மகிந்த ராஜபக்ஷ வீதியென்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. துரித அபிவிருத்திக்கு வழியா?

(வளரும்)

இளம் சந்ததி முன்னேறத் துடிக்கிறது. முன்னேறிய பழைய பரம்பரை வழிவிட்டுக்கொடுக்கவோ புதிய பரம்பரைக்கு வழி காட்டவோ தயாராக இல்லை. இதே பன்னிரெண்டாம் கட்டைப்பாதையில் ஜெயபுரம் என்ற முன்னேறி வரும் கிராமத்தில், சந்தைக்குச் சமீபத்தில், கிராமத்தின் உள்ளே செல்லும் புதிய சிறிய வீதிக்கு மகிந்த ராஜபக்ஷ வீதியென்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. துரித அபிவிருத்திக்கு வழியா?

---



# பனம்பாத்தி

பரவலாக காணப்படும்
பழுதடைந்த பனம்பழங்கள்-அதிலே
பரத நடனமாடும்
பல்லின புழுவகைகள்-இதற்காக
அப்பாவினால் ஆக்கப்படும்
மண்ணாலான மணிமேடை -இதைச்சூழ
அம்மாவுடன் கூடவே
இன்னும் நாலைந்துபேர்..
பரத நாட்டியத்துக்காக அல்ல
பனம் விதைகளை
பதப்படுத்துவதற்காக..
இவ்வாறே
ஒரு பனம்பாத்தி
பூரணத்துவம் எய்தி
சில மாதங்களின் பின்
அமரத்துவம் எய்தும்

பனம் பாத்தியின் அமரத்துவ காலம்
எனக்கு
விடுமுறைக்கான சுற்றுலாக் காலமாகும்...
பனம்பாத்தியை சூழ
நானும் அண்ணனும்
கூடவே அம்மாவும்...
பனம்பாத்தியை கிளறும் அப்பா
பனங்கிழங்கை
அம்மாவின் பக்கம் குவிப்பார்..
பனம் விதை 'பூரான்கள்'
எனக்கும் அண்ணனுக்கும் பங்கிடப்படும்..
இவ்வாறே ஒருநாள் ஓய்ந்துவிடும்
மறுநாள் காலை-நாங்கள்
அம்மாவின் பக்கம்
கிழங்கினை யே காணப்படும்
[illegible]
பனம்பாத்தி காலத்தில்தான்- நான்
'பூரான்'.....
'பீலி'..........
'கிழங்கு'..........
'கிழங்கு துவையல்'.....
'புளுக்கொடியல்'...
'புளுக்கொடியல் மா'...
'ஒடியற்பிட்டு'...... என
அறுசுவையில் அடங்காத -அரிய
சுவையை உணர்ந்துள்ளேன்...
உண்மையிலேயே
எந்த நாட்டுக்கும் கிடைக்காத
விடுமுறைக்காலம்- எங்களூர்
பனம்பாத்தி காலம்தான்.

இட்டு வெளியூர்
ந.விநோதுபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



52

# வெற்றி பெறலாம் வாங்க!

## வயதாகும் பெற்றோர்களுக்கு உதவும் 10 வழிகள்

**முக்கிய வயது :** முதிய வயதில் அவர்களது உடல் உறுப்புகள் தேய்மானம் அடைவதால், முதிய வயது என்பது சோர்வு மிக்கதாக இருக்கும். உங்களுக்கு வயதாகும் போது நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். அது அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ள உதவும்.

**உற்சாகப்படுத்துங்கள் :** முதுமையின் காரணமாகத் தங்களால் எந்தச் செயலையும் செய்ய முடியாது என்று நம்பிக்கையற்றவர்களாக இருப்பார்கள். அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களிடம் சாத்தியமான புதிய விடயங்களைச் செய்யும்படி ஊக்குவிக்க வேண்டும்.

**பேசுவதற்கான நேரம் :** உங்கள் வயதான பெற்றோர், ஒவ்வொரு மாலையும் உங்களுக்கு தொலைபேசியில் பேசுவதை நீங்கள் விரும்பாவிட்டால், இருவரும் ஓய்வாக இருக்கும் நேரம் எது என்று பார்த்து அந்த நேரத்தில் பேசுங்கள்.

**பரிசுகளை ஏற்றுக் கொள்ளுங்கள் :** வயதான காலத்தில் பொருள்களைப் பிறருக்குக் கொடுக்கவே அவர்கள் விரும்புவார்கள். அதுபோன்று அவர்கள் தரும் பரிசுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அதே பொருள் பின்பொரு சமயம் தேவைப்பட்டால் அதை அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள்.

**நடக்க உதவுங்கள் :** அவர்களது மூட்டு தேய்ந்து போயிருக்கும். இருந்தபோதிலும் அவர்களைக் கொஞ்சமாவது நடக்க வையுங்கள். அவர்கள் அசைந்து கொடுப்பது நல்லது. அதனால் தினமும் கொஞ்சத் தூரமாவது அவர்கள் நடக்க வேண்டும்.

**பெரிய வீடு :** உங்கள் பெற்றோர்களுடன் மொத்தக் குடும்பமும் சேர்ந்து வசிக்கப் பெரிய வீடு கட்டலாம் என்ற பெற்றோர்களின் யோசனையை நீங்கள் விரும்பலாம். நீங்களும் அது போன்றே செய்ய முயற்சி செய்யலாம்.

**உணர்வு ரீதியான அச்சுறுத்தல் :** இது சிரமமானதுதான். நீங்கள் குழந்தையாக இருக்கும்போது உங்களைப் பேணி வளர்த்ததால், நீங்கள் பதிலுக்கு வயதான காலத்தில் அவர்களுக்குப் பணிவிடைகளைச் செய்ய வேண்டும்.

**மீண்டும் கதை கேளுங்கள் :** வயதானவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களையும், தங்கள் கதைகளையும் பிறருடன் பகிர்ந்துகொள்ள விரும்புவதால், சில சமயங்களில் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வார்கள். அதனால் நீங்கள் அவர்கள் சொல்லுவதைப் பொறுமையுடன் கேட்க வேண்டும்.

**பதில் சொல்லுதல் :** வயதான காலத்தில் உங்கள் பெற்றோர் அவர்களின் இறப்பு பற்றி அதிகமாக யோசிப்பார்கள். இறப்பு என்பது அச்சுறுத்தும் விடயமாக இருக்கும். உண்மையில் இறப்பு என்றும் அச்சுறுத்தும் விடயமில்லை. வாழும் ஒவ்வொரு நாளையும் நன்றாக வாழ்ந்தால், இறப்பு என்பது இயல்பானதாகும் என அவர்களுக்குச் சொல்லுங்கள்.

**அதிக தேவை :** வயதான காலத்தில் அவர்களது மூளையின் செயல்பாடுகள் தொய்வடைய ஆரம்பித்துவிடும். அதனால் அவர்களுக்கு அதிகக் கவனிப்புத் தேவைப்படும். சமயத்தில் இது அவர்களுக்கே தெரியாது.

**தாத்தா, பாட்டி**


உங்களுக்குப் பெற்றோர் மற்றும் குழந்தைகள் இருந்தால், குழந்தைகளுக்குத் தாத்தா, பாட்டி கிடைப்பார்கள். ஆனால் வயதான பெற்றோர்களைக் கவனிப்பது என்பது சிரமமானது.

அதனால் பெற்றோர்களை ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்புடனும் இருக்கச் சொல்ல வேண்டும். உங்கள் பெற்றோர்களுடன் பிள்ளைகள் இருப்பது, மூன்று தலைமுறையிடமிருந்து பல விடயங்களைக் கற்றுக்கொள்ள உதவும்.

இது வாழ்க்கையை வளமானதாக்கும். குழந்தைகளை உங்கள் பெற்றோர் பார்த்துக்கொள்வதாக இருந்தால், அந்த நேரங்களில் உங்கள் சொந்த வேலையைப் பார்க்கலாம்.

ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....



உதயனின் ''சூரியகாந்தியில்'' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:
சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எங்களூர் பொங்கல்கள்'

## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்




பொ பொங்கலோ, திருவிழாவோ லவுட்ஸ் ஸ்பீக்கர் இல்லாமல் நடப்பதில்லை. எங்களது சிறுவயதில் ஒலிபெருக்கி எம்மை கவர்ந்த சாதனமாக இருந்து வந்திருக்கின் றது.

சின்னக் கோயிலாக இருந்தாலும் ஸ்பீக்கர் கட்டி விடுவார்கள். தரமான பக்திப் பாடல்களை ஒலி பரப்புவார்கள்.

இப்பொழுது மாதிரி கிராமம் முழுவதும் ஒலி பெருக்கியை கட்டிப் படிப்பையும் தூக்கத்தையும் கெடுப்பதில்லை.

அறத்தியம்மனுக்கு பங்குனித் திங்களுக்கோ அல்லது பொங்கலுக்கோ ஒலி பெருக்கியை வழங்குவதற்குப் பல உரிமையாளர்கள் இருந்தனர்.

சின்ன வயதில் இருந்த ஆசைகளில் ஒன்று ஒலி பெருக்கியை சொந்தமாக வைத்திருந்து கோயில்களுக்கோ, கல்யாண வீட்டுக்கோ கட்டப் போவது பற்றிய கற்பனை.

அறத்தியம்மனுக்கு நீண்ட நாளாக ஸ்பீக்கர் ஒன்று கட்டி வந்தார்கள். அதில் ஒவ்வொரு பாட்டுக் கஸெற்றும் முடியும்போது..

''கோமதி சவுண்ஸ் சேவிஸ், கண்டி வீதி, பளை...பளை....பளை என்று மூன்று நான்கு தடவை திரும்ப திரும்ப 'எக்கோ' பண்ணி வரும்.

எனது கற்பனை இவ்வாறு வரும் ''கோகுலன் சவுண்ஸ் சேவிஸ்... புலோப்பளை மேற்கு, பளை, பளை, பளை.....''

கொஞ்சம் வயதேற இந்த ஆசை எந்தப் பக்கத்தாலோ போய்விட்டது. கோமதி சவுண்ஸ் சேவிஸ் நடத்தியவர் திருவாளர் சந்திரனாகவோ அவரது சகோதரர்களாகவோ இருக்க வேண்டும்.

இவர்கள் ஆர்மோனிய வித்துவானும் அண்ணாவியரும் ஆகிய செல்லையாவின் பிள்ளைகள் ஆவார்கள். இவர்களிடம் கூத்துக்காக 'சீன் செற்' எல்லாம் உரிமையாக இருந்தது. இவரது ஒரு மகன் சிறந்த கூத்துக் கலைஞராக இருந்து கலைத் தென்றல் விருது பெற்ற திருவாளர் சந்திரகுமார். அரிச்சந்திரன் வேடத்தை மிகவும் அற்புதமாக நடிப்பவர்.

''எனக்குத் தம்பி! நாடகம் என்றால் உயிர்'' என்று அவர் சொல்வதை கேட்டிருக்கின்றேன். நான் பளை மத்திய கல்லூரிக்குப் படிக்கப் போனபோது ''கோமதி சவுண்ஸ் சேவிஸ்'' என்ற பெயர் வைக்க காரணமாக இருந்த கோமதி, அங்கே அண்ணனின் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். பின்னாலே போய் ''கோமதி சவுண்ஸ் சேவிஸ்'' என்று கத்த ஆசையாக இருக்கும் அடக்கிக் கொள்வேன்.

அறத்தியம்மன் பொங்கலில் விசேடம் என்னவென்றால் அறிவிப்புக்களை வழங்குவது. அறிவிப்பாளராக இருந்தவர் நல்ல குரல் வளம் கொண்ட செல்வர் ஆனந்தம் சித்தப்பா என்ற அம்மாவின் மைத்துனர்.

''அம்பாள் அடியார்களே......'' என்று பெண்மை கலந்த குரலில் தொடங்குவார்.

சரி! ஸ்பீக்கர் சொந்தமாக வைத்திருக்கும் ஆசை போய் அறிவிப்பு ஆசை மனதில் பிறந்தது. இடையில் பளையில் விதானையாராக இருந்த நாகேந்திரம் அண்ணாவும் ஆனந்தம் சித்தப்பாவிடம் மைக்கை பறித்து விடுவார்.

சும்மா சொல்லக் கூடாது திரவியம் மாமாவும் நல்ல அறிவிப்பாளர்தான். அவருக்கும் கனிவான குரல்தான். எனக்கு அறிவிப்பு ஆசை வளர்ந்து கொண்டே வந்தது. இது 2006 இல் மிகவும் துரதிர்ஸ்டமாக, வேதனையாக, துன்பமாக நிகழ்ந்தது.

தொடர்ந்து மூன்று நாள்கள் அறிவிப்பு பணி செய்தேன். பளை மத்திய கல்லூரியில் 2004 சுனாமியின் போது குடும்ப உறவினர்களை தேடி வரும் குடும்பஸ்தர்களது விவரங்களை அறிவிக்க அப்போது பளை டி.எஸ். ஆக இருந்த நண்பர் சிவசிறி கேட்டார். நானும் திரவியம் மாமாவும் இதனைச் செய்தோம். இதன் பின்னர் நான் எந்த அறிவிப்பு பணிக்கும் போனதில்லை. நிற்கட்டும்.

ஒலி பெருக்கி சேவையை பளையில் நிறையப்பேர் வைத்திருந்தார்கள். தம்பகாமம் தம்பியண்ணா, சோரன்பற்று கணேசண்ணா,



இத்தாவில் ஒருவர் வைத்திருந்தார். பெயர் ஞாபகம் இல்லை. மாசாரில் இயக்கச்சியில் எல்லாம் வைத்திருந்தார்கள்.

இது ஒரு வருமானம் தரும் தொழிலாக இருந்து வந்தது. எங்களுக்கும் ஸ்பீக்கரில் பாடல் கேட்பது மனதிற்கு ஆனந்தமாக இருந்தது.

சீர்காழி கோவிந்தராஜனின் ''முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே'' என்ற மோகனராகப் பாடல் என்றைக்கும் மனதை விட்டு அகலாது இருந்தது. ஒரு எட்டு வயதில் இந்தப் பாடலை நான் கேட்டிருப்பேன்.

என்னைப் போல ஒருவர் அறிவிப்பு செய்ய ஆசையாக இருந்தார். சந்தர்ப்பம் கிடைக்காது தவித்துக் கொண்டிருந்தார்.

ஒருமுறை கூத்து மேடை ஒன்றில் அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு நடிகரை உடன் மேடைக்கு வரச்சொல்ல வேண்டும்.

''நடுக்காத்தானாக நடிக்கும் பொன்னையா உடன் மேடைக்கு வரவும்.'' இதுதான் அவர் சொல்ல வேண்டியது.

இவர் கையில் மைக்கை இறுக்கி பிடித்துக் கொண்டார். சொல்லத் தொடங்கினார். ''நடுக் காத்தானாக நடிக்கும் சிப்பிலி பொன்னையா உடன் மேடைக்கு வரவும்''

கெட்டது குடி. பொன்னையா என்பவரது பட்டப் பெயர் 'சிப்பிலி' என்பதாகும். பொன்னையா என்பவர் சிறு சச்சரவு ஏற்பட்டாலும் ''உன்னை சிப்பிலி ஆட்டாமல் விடமாட்டேன்'' என்பார். அடிக்கடி 'சிப்பிலி' என்ற சொல்லை துன்பம் தரும் சொல்லாக பயன்படுத்துவார். இதனால் ''சிப்பிலி பொன்னையா'' ஆக்கி விட்டார்கள்.

பிறகு, பொன்னையா மேடைக்கு ஓடி வந்தார். அறிவிப்பு செய்தவரை தள்ளி விழுத்தி சடார் புடார் என்று இரண்டு கொடுத்து தள்ளி விட்டார்.

''மடையா பட்டத்தை ஸ்பீக்கரிலயா சொல்லுறது'' மேடையை விட்டுக் கலைத்தே விட்டார்கள். அதன் பின்னர் எங்கும் அறிவிப்புக்காக அவர் போனதாக நான் அறியவில்லை.

---




ஒருமுறை ஜம்புலிங்கம் தனது மனைவியுடன் கொழும்புக்குச் சென்றார்.

ஓர் இடத்தில் கொழும்பை ஹெலிகொப்டரில் சுற்றிப் பார்க்க ஒரு நபருக்கு இருநூறு ரூபாய் என்று எழுதப்பட்டிருந்தது.

நிறையப் பேர் பணம் கொடுத்து ஹெலியில் கொழும்பைச் சுற்றி வந்தனர். ஜம்புலிங்கத்துக்கும் அவர் மனைவிக்கும் ஹெலிகொப்டரில் சுற்ற ஆசை. அதே சமயம் செலவாகுமே என்று நினைத்து வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் தயக்கத்தைப் பார்த்த ஹெலிகொப்டர் இயக்குபவர் அவர்களை அழைத்தார். ஜம்புலிங்கமும் மனைவியும் ''வேண்டாம்'' என்றனர்.

அவரும் விடாமல்,'' நீங்கள் ஹெலிகொப்டரில் ஏறுங்கள். நீங்கள் பணம் கொடுக்க வேண்டாம். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் ஹெலிகொப்டரில் பயணம் செய்யும்போது சிறிது கூட சத்தம்போடக் கூடாது.

சத்தம் போடாதிருந்தால் பணம் வேண்டாம். சத்தம் போட்டால் கட்டணம் செலுத்த வேண்டும்'' என்றார்.

உடனே மகிழ்ச்சியுடன் அவர்கள் இருவரும் ஹெலிகொப்டரில் ஏறினர். ஹெலிகொப்டர் இயக்குநர் அவர்கள் இருவரையும் பயத்தால் சத்தமிட்டுக் கத்த வைப்பதற்காக வானில் என்னென்னவோ வித்தைகள் செய்ய ஆரம்பித்தார்.

குட்டிக் கரணம் போட்டார். வேகமாக இயக்கினார். ஆனாலும் சிறு சப்தம் கூட வரவில்லை. கீழே இறக்கியதும் விமானி ஜம்புலிங்கத்திடம், ''நான் இவ்வளவு செய்தும் நீங்கள் சிறு சத்தம்கூட போடவில்லையே, எப்படி?'' என்று வியப்புடன் கேட்டார்.

அதற்கு ஜம்புலிங்கம் பெருமையாக, ''எனக்கே ஒரு சமயம் கத்த வேண்டும் போல இருந்தது. ஆனாலும் சமாளித்து விட்டேன்'' என்றார்.

''எந்தத் தருணத்தில்...?'' என்று விமானி கேட்க, ஜம்புலிங்கம் சொன்னார்,

''என் மனைவி ஹெலிகொப்டரில் இருந்து தவறிக் கீழே விழுந்தபோது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 267

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| ■ | 11 | | | ■ | 12 | | 13 |
| 14 | | | ■ | 15 | | ■ | |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. அம்பிகாவதி மனம் கவர்ந்தவள்
5. வேளிர்த்தலைவருள் ஒருவன்
7. குதிரை நடை
8. எரிச்சல்படல்
9. பரிகாரம்
11. வழங்கும்
12. அரைசிலை
14. ஓர் இனிப்புப் பண்டம்
15. பணி/ கடமை/ ஆற்றும் காரியம்
16. பகிரங்கமாக போட்டிக்கு அழைப்பு விடுப்பது
18. ஒளிவுமறைவாக திட்டமிடுவது
19. பதற்றமடைதல்
21. அசைந்து செல்ல
22. திடீரென
23. கண்ணகியின் கணவன்

### மேலிருந்து கீழ்

1. வயது
2. கணித்தல்
3. வசப்படுத்துகை
4. திருநாள்
5. சொத்து
6. இதில் அம்பை வைத்து குறி பார்ப்பது
10. மாணிக்கவாசகர் அருளியது
12. இது ஓயாது
13. நண்பன்
14. தலைவர்
15. முருகக் கடவுளின் கையிலுள்ள ஆயுதம்
17. கிணற்றில் தண்ணீர் அள்ளப் பயன்படுத்துவது
18. எல்லா/ அனைத்து
20. மறி
21. புதிய

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 265 இற்கான சரியான விடைகள் வருமாறு:

#### இடமிருந்து வலம்

(1) உசாவல் (4) உதவி (7) பத்தி (8) உரைகல் (09) வாதி (10) நடு (11) வலை (12) சரிதல் (14) இல் (15) கல்வன் (18) கல (19) தறுதலை (21) குடும்பம் (23) கவி (24) கைமை (25)விடுதி

#### மேலிருந்து கீழ்

(1) உபவாசம் (2) சாத்திரி (3) வதி (4) உரை (5) தகவல் (6) வில்லை (8) உடு (10) நல்ல (13) தகனம் (14) இன்று (16) வதம் (17) தலைவிதி (18) கடுமை (20) தகடு (21) குகை (22)பரி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 267**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (05.06.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.267 இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 09.06.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 265இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**சூ.அமுதா ரோசலீன்,**
அளம்பில், முல்லைத்தீவு

**2 ஆம் பரிசு**
**ஜீ.தபாபரன்,**
'ஜீவகிரி' சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

**3 ஆம் பரிசு**
**எஸ்.திருப்பரங்கிரிநாதன்,**
இமையாணன், உடுப்பிட்டி.

**4 ஆம் பரிசு**
**அ.ரிரோசி,**
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
**என்.பாலகுமார்,**
சிவன் வீதி, காரைநகர்.

**பாராட்டுப் பெறுவோர்**

**க.தையல்நாயகி,**
வதிரி, கரவெட்டி.

**க.அம்பலம்,**
நாவற்குழி கிழக்கு, கைதடி

**சே.நவரட்ணராசா,**
இல.192 ஆம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.*
*யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# எங்காவது போய்விடுங்கள்

கனத்த இரவுகளில்
கண் விழிக்கும் பொழுதுகளில்
நினைவில் இருப்பதென்னவோ
இருள் நிறைந்த மனித
முகங்களே...!
மூடியற்ற மனதில்
முழுவதையும் வெளிக்காட்டி
உண்மைக்காய் சிரிப்பதற்கு
ஊரில் எவருமில்லையெனும்
போது
ஓர விழியோரம் உப்பு நீர்
பிரவாகம்..
வெள்ளை மனிதராய்
வேடங்கள் தாங்கும் பல
பெரிய மனிதர்களை
பார்க்கின்ற போது
என் மனதில் வலிக்கிறது
உண்மையற்ற அவர் நிலையை
எண்ணி...
கற்பனைகள் தாண்டிப்
பல கதைகள் புனையும் போது
நாடகமாடும் கயவர்களாய்
'நா' வசைப்பாய் போலிகள் பலர்
பொல்லாங்கு செய்து கொண்டே
புளுகுகின்ற அவர் நிலையை
என்னவென்று சொல்ல...?
மனிதனென்றால்
நேயங்கொண்டு உறவு கொள்ளும்
நேர்மையிருக்கும்...
பாசமென்ற நீர் சொரியும்
பரிவு இருக்கும்..
எதுமற்ற எருதுகளாய்
பொய் முகங்கள் போர்த்தி
பூமியிலே உயர்ந்தவராய்
போக்கிழந்த கதைகளை
புளுகியபடி வாழ்வதிலும்
பாரினிலே சுமை குறைய
பாவிகளே....!
எங்காவது போய்விடுங்கள்
வானந்தாண்டிப் புளுகும் உங்கள்
வார்த்தைகளைச் சுமந்தபடி...



பா.பொன்நிலவன்,
மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மபாலாவின் கார்

## - சுரண்டல் அதிர்ஷ்டமும் சில பதிவுகளும்-

ஔவிஷ்



"ஓடிவாங்கோ! ஓடிவாங்கோ! ஒரு ஐம்பது ரூபாவில புத்தம் புதிய காரை வீட்டை கொண்டு போங்கோ. கனக்கச் செலவழிச்சாத்தான் வீட்டில கேப்பாங்கள். இது போனா வெறும் ஐம்பது ரூபா. வந்தால் கார். இப்பிடித்தான் மதவாச்சியில சைக்கிள்ல வந்தார் தர்மபாலா. இதேவாகனத்திலதான் ஒரு நீலக்கார் நிண்டுது. சைக்கிள நிப்பாட்டிப்போட்டு சாரத்தை தூக்கிக் கட்டிக்கொண்டு வந்து தர்மபாலா ஐயா எடுத்தார் ஒரு ரிக்கட். உரஞ்சிப்பாத்தா ரிக்கட்டில மூண்டு கார். பிறகென்ன சைக்கிள்ல வந்த தர்மபாலா ஐயா வீட்டுக்கு காரிலதான் போனார். அப்பிடி உங்களுக்கும் போக ஆசையில்லையோ. ஐம்பது ரூபா ரிக்கட்டை எடுத்து வீட்டுக்கு காரில போங்கோ" உச்சி பிளக்கும் வெயிலுக்கிடையிலும் ஒலிபெருக்கியின் உதவியோடு காற்றில் கலந்த இந்த வார்த்தைகள் ஆசையற்ற மனத்திலும் ஆசையைத் தூண்டவல்லவை.

கிட்டத்தட்ட 2 மணித்தியாலங்களுக்கு மேலாக பஸ் வரும் என்ற கனவோடு காத்திருந்து கடைசியில் எரிச்சல் மட்டுமே மிஞ்சிப்போன பொழுதில் "பேசாம ஐம்பது ரூபாவைக் கொடுத்து ரிக்கட் வாங்கி கார் விழுந்தால் அதில போகலாம்தானே" என்ற எண்ணமும் சிலரிடம் எழுந்தது. ஒலிபெருக்கியோடு வந்த வார்த்தைகள் வீதியால் சென்றோர் எல்லோரையும் ஈர்க்கத் தவறவில்லை. ஐம்பது ரூபாவுக்கு விளையாட்டுக் கார்கூட வாங்க முடியாத சூழல் இலங்கையில். அப்படியான நிலையில் வெறும் ஐம்பது ரூபாவில் புத்தம் புதிய உயர் ரக சொகுசுக் கார் கிடைக்கும் என்றால் யார்தான் சும்மா இருப்பார்கள். போதாக்குறைக்கு ஒலிபெருக்கியில் வந்த வார்த்தைகள் இன்னமும் மனதை உசுப்பேற்றின.

"அதிர்ஷ்டம் சொல்லிக்கொண்டு வருவதில்லை. தர்மபாலா ஐயாவுக்கும் திடீரென்று அதிர்ஷ்டம் அடிச்சமாதிரி உங்களுக்கும் ஏன் அதிர்ஷ்டம் அடிக்கக்கூடாது. நீங்கள் என்ன அதிர்ஷ்டம் இல்லாதவர்களா? போனாப் போகுது ஒரு ஐம்பது ரூபாவில் வீட்டுக்கு காரைக் கொண்டு போனால் எவ்வளவு நல்லாயிருக்கும்" என்று எங்களின் அதிர்ஷ்டத்தை ஒருவர் மறைமுகமாக கேள்விக்கு உட்படுத்தும் போது எப்படி சும்மாயிருக்க முடியும்?

ஏதேதோ தேவைக்கு வந்தர்களெல்லாம் வாகனத்தில் ஒரு மஞ்சள் நிறக்காரைச் சுமந்திருக்கும் இடத்துக்குச் சென்று ஐம்பது ரூபா கொடுத்து ஒவ்வொரு ரிக்கெட்டை வாங்கினார்கள். ஒரு அவாவில் சுரண்டிவிட்டு கார் கிடைக்காத ஏமாற்றத்தோடு நிமிர்ந்தார்கள். அப்படி நிமிர்ந்தவர்களையும் ஒலி வாங்கியைக் கையில் பிடித்திருந்த விற்பனைப் பிரதிநிதி அப்பால் நகரவிடவில்லை.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். எப்பவும் ஒருக்கா முயற்சி செய்து போட்டு விடக்கூடாது. நம்பிக்கைதான் வாழ்க்கை. எங்கட நிறுவனம் இந்த வருசம் ஐம்பது கார்களை குடுக்க முடிவு பண்ணியிருக்கு. இதுவரைக்கும் ஏழு கார் அதிர்ஷ்டத்தில ஆக்களுக்குப் போட்டுது. இது மஞ்சள் கார். எட்டாவது கார். ஏழாவது நீலக்கார் தர்மபாலா ஐயாவுக்குப் போன மாதிரி ஏன் எட்டாவது கார் உங்களுக்கு கிடைக்கக்கூடாது" என்று தொடர் முயற்சி பற்றியும் அவன் சொன்ன சொற்கள் ரிக்கெட் எடுத்து சோர்ந்தவர்கள் இடையே ஒரு நம்பிக்கை ஒளியை உருவாக்கியது. தங்களுடைய பொக்கற்றுகளுக்குள் மீண்டும் கைவிட்டு எஞ்சிக் கிடந்த தாள்களைச் சேர்த்து, ஐம்பது ரூபாவாக்கி இன்னொரு ரிக்கெற்றை எடுத்து முழுமூச்சோடு மீண்டும் சுரண்டினார்கள். ம்கூம்! ஒரு கார்கூட வரவில்லை. போர்க்களத்துக்கு செல்வது போல வீரநடையோடு ரிக்கெற் வாங்கப் போனவர்கள் சுரண்டிவிட்டு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒவ்வொருவராய்த் தம்மைத் தாமே கேலி செய்து கொண்டு அகன்றுகொண்டிருந்தனர். வாகனத்தில் ஒரு காரை வைத்து படம் காட்டி ரிக்கெற்றுகளை அமோகமாக விற்றுக்கொண்டிருந்தவர்களின் பெட்டியில் நீலவர்ண ஐம்பது ரூபாய்த் தாள்கள் குவிந்துகொண்டிருந்தன.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் இத்தகைய கார் ஏந்திய அதிர்ஷ்ட லாப வாகனங்களை நீங்கள் கண்டுகொள்ள முடியும். அந்த வாகனத்தில் இருப்பவர் சொன்னதுபோன்று ஏழையான தர்மபால லட்சக்கணக்கான பெறுமதிகொண்ட நீலக்காரை வென்றார் என்பது உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால் இன்னொருவரால் வெல்லப்பட்ட அதிர்ஷ்டத்தை நாமும் வெல்ல முடியும் என்ற நினைப்போடு செல்வது தான் மடமைத்தனமானது. சில வேளைகளில் அதிர்ஷ்டம் உங்களுக்கும் அடிக்கலாம். ஆனால் கிட்டத்தட்ட நூறைந்து மணித்தியால அவதானத்தின்போது என்னுடைய அருகில் நின்றவர்களுக்கெல்லாம் ஐம்பது ரூபா கூட அந்த ரிக்கெற்றுக்களில் எவருக்கும் கிடைக்கவில்லை. சுரண்டியவுடனேயே அதனை வீசி எறிந்துவிட்டு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு எல்லோரும் திரும்பினர்.

தமிழர்கள் எப்போதுமே தங்களுடைய கைகளை மட்டுமே நம்புபவர்கள். அதனால்தான் போர்வாழ்வில் தமது இத்தனை வருட சேமிப்பு, சொத்து என்பவற்றையெல்லாம் இழந்தாலும் கூட நம்பிக்கையோடு மீள உழைத்து அவற்றை மீண்டும் அடையக்கூடிய வல்லமை கொண்டவர்கள். ஆனால் இப்போது புதிய புதிய கலாசாரங்களும் நுகர்வுப் பழக்கவழக்கங்களும் திட்டமிட்டே எம்மீது திணிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் அதிர்ஷ்டச் சீட்டு பழக்கவழக்கம்.

மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களை இனங்கண்டுகொள்ளும் அதிர்ஷ்டச் சீட்டு நிறுவனங்கள் தமது முகவர்களை ஒலிபெருக்கி சகிதம் அங்கு நிறுத்திவைத்து விற்பனை வேட்டையில் ஈடுபடுகின்றன. "போனால் மயிர் வந்தால் மலை" என்ற வாசகத்தை மனதுக்குள் ஆழமாகப் பதித்து 'இதுவொன்றும் பெரிய இழப்பைத் தருகின்றன விடயமல்ல. மாறாக லாபத்தைத் தரும் விடயமே' என்ற நினைப்பை உற்பத்தி செய்கிறார்கள். "எங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்காவிட்டாலும் பரவாயில்லை. என்னதான் கிடைக்கிறது எண்டு பார்ப்போமே" என பத்து ரூபா, இருபது ரூபா பெறுமதியான ரிக்கெற்றுக்களை பலரும் வாங்குகிறார்கள். ஆயிரக்கணக்கில் அதிர்ஷ்டம் அடிக்காவிட்டாலும் நூறு ரூபா, ஐந்நூறு ரூபா என்று சிறியளவிலான அதிர்ஷ்டங்கள் எங்களை தொடர்ந்தும் அதிர்ஷ்ட சீட்டின் பக்கம் இழுக்கச் செய்யும். நாளடைவில் இந்த ஈர்ப்பே ஒரு போதையாக மாறிவிடுகிறது. ஆரம்பத்தில் பத்து ரூபா, இருபது ரூபா என்று சிறிய தொகைகளில் ஆரம்பிக்கும் இந்தப் பழக்கம் ஆயிரக்கணக்கில் அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்யும் அளவுக்கு முற்றிவிடுகிறது. "என்றோ ஒருநாள் அதிஷ்டம் எங்கள் பக்கம் வீசத்தானே வேண்டும்" என்ற நம்பிக்கையே இந்த கண்மூடித்தனமான முதலீட்டுக்குக் காரணம். இத்தனைக்கும் அதிர்ஷ்டச் சீட்டெடுக்கும் எல்லோருக்கும் என்றோ ஒருநாள் அதிர்ஷ்டம் விழுந்தே தீரும் என்ற நியதி இருப்பதில்லை. இல்லாவிட்டால் "பாவம் அவர்! இருபது வருசத்துக்கும் மேலாக எங்கள் ரிக்கெற்றைத் தவறாமல் வாங்குகிறார். ஆனால் ஒரு பத்து ரூபா கூட அவருக்கு விழுந்ததில்லை. இப்படியே அவரைத் தொடர்ந்தும் ஏமாற்றக்கூடாது. இந்தமுறை ஜக்பொட் பரிசை அவருக்கு வழங்கி கோடீஸ்வரனாக்கிவிட வேண்டும்" என்று எந்த அதிர்ஷ்ட சீட்டு நிறுவனமும் பரிதாபப்படுவதில்லை. உண்மையில் நீங்கள் அவர்களின் நிரந்தர வாடிக்கையாளர் என்பது அவர்களுக்குத் தெரிந்தேயிருக்காது. [illegible] இருந்தாலும் கூட அவர்[illegible]களுக்கு எந்தச் சலுகையும் காட்டப்போவதில்லை. அவர்களின் நோக்கம் எல்லாம் சுரண்டலும் அதன்மூலம்

> ஆயிரக்கணக்கில் அதிர்ஷ்டம் அடிக்கா விட்டாலும் நூறு ரூபா, ஐந்நூறு ரூபா என்று சிறியளவிலான அதிர்ஷ்டங்கள் எங்களை தொடர்ந்தும் அதிர்ஷ்ட சீட்டின் பக்கம் இழுக்கச் செய்யும். நாளடைவில் இந்த ஈர்ப்பே ஒரு போதையாக மாறிவிடுகிறது.

உங்கள் பணத்தை தமது இருப்பிடம் நோக்கி இழுப்பதுதான். அதற்காக விதவிதமான கனவுகளை விதைப்பதும், நீங்கள் ஆசைப்படக் கூடிய பொருள்களைக் காட்டி மயக்குவதும் அவர்களின் பிரதான உத்தியாக இருக்கிறது.

பெரும்பாலும் சராசரியான வருவாயைக் கொண்ட மத்தியதர வர்க்கத்தினரே அடுத்த கட்டத்தை குறுக்குவழியில் எட்டிப்பிடிப்பதாக நினைத்துக்கொண்டு இத்தகைய அதிர்ஷ்ட லாப வலைகளில் கண்ணைத் திறந்துகொண்டே வீழ்ந்துவிடுகிறார்கள். அதிர்ஷ்ட லாப சீட்டு இழுப்பை நடத்தும் நிறுவனங்களும் மத்தியதர வர்க்கத்தினர் வாழும் இடங்களை மையப்படுத்தியதாகவே தமது விளம்பரப்படுத்தலை மேற்கொள்கின்றனர். கண்ணுக்கு முன்னாலேயே எங்கள் பணம் பிடுங்கப்படுவதை பார்த்துக் கொண்டு தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆயிரத்தில் அல்லது லட்சத்தில் ஒருவருக்கு மாத்திரமே அதிர்ஷ்டம் அடிக்கும். அதற்காக அந்த "ஆயிரத்தில் ஒருவன் நான் தான்" என்று வீராப்போடு போய் இருக்கும் பணத்தையும் இழந்து மீளமுடியா வறுமைக்குப் போனோர் பலர். நம்மிடம் என்ன குறை உண்டு. கை இல்லையா? கால் இல்லையா? உழைக்கும் வல்லமையும் ஆற்றலும் நம்பிக்கையும் உடையவர்கள் ஒருபோதும் அதிர்ஷ்டத்தின் கொல்லைப் பக்கம் கூட எட்டிப்பார்க்க மாட்டார்கள். வேண்டுமானால் அதிர்ஷ்டம் எங்கள் வீட்டுக் கதவை வலிய வந்து தட்டட்டும். அப்போது திறக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

26.05.2013 முதல் 01.06.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேஷர்**- உங்களின் நடை, உடை, பேச்சு, செயலில் வசீகரத் தன்மை மிகுந்திருக்கும். நண்பர், உறவினர் கூடுதல் அன்பு பாராட்டி உபசரிப்பர். சமூகத்திலும், நற்செயலால் புகழ் பெறுவீர்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழிலில், சில மாற்றங்களைப் பின்பற்றி, உற்பத்தி விற்பனையில் முன்னேற்றம் காண்பீர்கள். மாணவர்கள், எதிர்காலப் படிப்புத் தொடர்பாகச் சிந்தனையில் தெளிவு பெறுவர்.

**இடபர்**- நண்பரிடம் ஒப்படைத்த செயல், தாமதம் ஆவதால் நீங்களே முயற்சி செய்து நிறைவேற்றுவீர்கள். அளவான பணவரவு கிடைப்பதால், செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். சுய கௌரவ சிந்தனை குறைந்து, பெருந்தன்மைக் குணம் வளரும். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். இல்லறத்துணை, உங்களின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற அதிகம் பணிபுரிவீர்கள். மாணவர்கள், படிப்பு தொடர்பாக, குழப்ப சிந்தனையைத் தவிர்க்க அனுபவம் மிக்கோரின் ஆலோசனை பெறுவர்.

**மிதுனர்**- சிலரது நிர்ப்பந்தத்தால், திட்டமிட்ட செயல் ஒன்றை, தாமதமாக ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். குடும்ப நலனுக்கு உதவுகிற பணிகளில், ஆர்வம் கொள்வீர்கள். எதிரியிடமிருந்து விலகுவதால், மன அமைதியைப் பாதுகாக்கலாம். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணங்களை மனமுவந்து பாராட்டுவார். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடந்து நற்பெயரும், சலுகைப் பயனும் பெறுவர். மாணவர்கள், நண்பர்களின் வற்புறுத்தலுக்காக, படிப்பைத் தேர்வு செய்வதில் குழப்பம் அடைவர்.

**கடகர்**- உங்கள் வாழ்வில், வியத்தகு அளவிலான நன்மை பலவும் உருவாகும். பணவரவு அதிகரிக்கும். உறவினர், நண்பர் கூடுதல் மதிப்பு, மரியாதை தருவர். நிலுவை பணக்கடனில், ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை, குடும்ப வளம் சிறக்க உறுதுணையாக நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். மாணவர்கள், குடும்பத்தின் பணவசதிக்கேற்ப புதிய படிப்பைத் தெரிவு செய்வர்.

**சிங்கர்**- புதிய முயற்சிகளை சமயோசிதமான செயல்களால் நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள் சந்திக்க நினைத்த நண்பர் உங்களைத் தேடி வருகிற இனிய சூழ்நிலை உருவாகும். எதிரி, சொந்தச் சிரமங்களால் விலகி போகிற சூழ்நிலை உருவாகும். இல்லறத்துணையின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான அரசு உதவி, எளிதாகப் பெறுவீர்கள். குடும்பப் பெண்கள், கணவரிடம் தேவையற்ற விவாதம் பேசவேண்டாம். மாணவர்கள், சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது.

**கன்னி**-பேச்சு, செயல்களில் நிதானத்தைப் பின்பற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களின் தேவை நிறைவேற சிறியளவில் பணம் கொடுத்து உதவுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் பலம், வாழ்வியல் நடைமுறை சிறக்க துணை நிற்கும். வழக்கு விவகாரத்தில் தீர்வு பெறத் தாமதமாகும். இல்லறத்துணை உங்களின் நற்பெயரும், புகழும் அதிகரிக்க ஆலோசனை சொல்வார். மாணவர்கள், எதிர்கால படிப்பு பற்றிய விடயங்களை, ஆர்வமுடன் அறிந்து கொள்வர்.

**துலாமர்**- கடந்த தினங்களில் தாமதமான செயல்களை நிறைவேற்ற புதிய யுக்தியுடன் செயற்படுவீர்கள். பேசுவதில் நிதானம் இருக்கும். பணவரவுக்கேற்ப, செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். முக்கிய செலவுக்காக பணக்கடன் பெறுவீர்கள். இல்லறத்துணை, கருத்து ஒற்றுமையுடன் நடந்து, குடும்ப வாழ்வு வளம்பெற உதவுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்களுக்கு, சலுகைப்பயன் ஓரளவு கிடைக்கும்.


**விருச்சிகர்**-குடும்பப் பெரியவர்களின், ஆலோசனையைக் கேட்டு நடந்து, வாழ்வியல் நடைமுறையை, சிறப்புடையதாக உருவாக்குவீர்கள். சமூக நிகழ்வுகளை அறிந்து கொள்வதில் இருக்கிற ஆர்வம் குறையும். இல்லறத்துணையிடம் பயனற்ற பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் இருக்கிற அனுகூலத் தன்மையைப் பாதுகாக்க அக்கறையுடன் செயற்படுவீர்கள். குடும்பப் பெண்கள், கணவர் வழி உறவினர்களை விமர்சித்துப் பேச வேண்டாம். மாணவர்கள் புதிய பயிற்சிக்காக அதிக பணம் செலவு செய்வர்.

**தனுசு** - செயல்களில் உற்சாகம் நிறைந்து இருக்கும். நீண்ட நாள் எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். எதிரி செய்த கெடுசெயல், நன்மை தருவதாக மாறும். இல்லறத்துணை, நல் அன்பு பாராட்டுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, தாராள பணவரவு கிடைக்கும். உத்தியோகத்தர், நிறுவன வளர்ச்சிக்கு சிறந்த ஆலோசனை சொல்வர். பாராட்டு, வெகுமதி கிடைக்கும். குடும்பப் பெண்கள், கணவரின் எண்ணங்களை மதித்து நடந்து கொள்வர்.

**மகரர்** - இடம், சூழ்நிலை உணர்ந்து பேசி, நற்பெயரைப் பாதுகாத்திடுவீர்கள். உடன்பிறந்தவர்கள், உதவிகரமாகச் செயற்படுவர். வீடு வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது அவசியம். எதிர்மறை எண்ணத்துடன் பேசுபவரிடமிருந்து விலகி சுய கௌரவத்தைப் பாதுகாத்திடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, கூடுதல் வேலை வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால், உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**கும்பர்**- ஆர்வம் மிகுதியால் நடத்துகிற செயல்கள், சிலரிடம் அதிருப்தி உருவாக காரணமாகும். முன்யோசனையுடன் பணி மேற்கொள்வது நல்லது. இளைய சகோதரர், ஆதரவாகச் செயற்படுவார். இல்லறத்துணையின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதால், குடும்ப ஒற்றுமை சீராகும். தொழில்,வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் கௌரவமான பதவி பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள், நல்லோரின் ஆலோசனை கிடைத்து தகுதிக்கேற்ற கல்வியைத் தேர்வு செய்வர்.

**மீனர்**- சிரமங்களை அனுபவித்த உங்களுக்கு, கனி தரும் சோலைக்கு நிகரான சுபீட்சம் நிறைந்த வாழ்வு உருவாகும். பொது விவகாரங்களில், கருத்துச் சொல்வதைத் தவிர்ப்பீர்கள். மனதில், புதிய உத்வேகம் பிறக்கும். இல்லறத்துணை, உங்களின் கௌரவத்தை வளர்க்கும் வகையில் செயற்படுவர். தொழில், வியாபார நடைமுறையில் சிறு மாற்றம் செய்து அதிக பணவரவு பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர்கள், நண்பர்களின் உதவியால் சில நன்மை பெறுவர்.



# அப்புவும் நானும்

அப்புவும் நானும்
காடு வெட்டி
கட்டை பிடுங்கி
காலம் முழுதும்
மாடாய் உழைத்து
மங்காத வளங் கொண்ட
மண்ணாய் மாற்றி
சந்ததி சந்ததியாய்
வாழ்விடத்தில்
கூடிக் குலாவி
குறைகள் தீர்த்து
சொந்தம் கொண்டாடி
உறவுகள் கூடி
உண்டு களித்து
உறங்கி எழுந்து
பொய்க்காத மண்ணாய்
பூத்த வயற் காடாய்
சோம்பல் அறியா
வாழ்ந்த மண்....
வாசனை
இழந்து
அகலக்கால் வைத்து
எம் கைவிட்டுப்
போகிறது
மனம் மட்டும்
தவியாய் தவித்து
அதனைச் சுற்றி
சுற்றி அகல
மறுக்கிறது
எப்போதும்....

# மரண வேர்களை தழுவியபடி..

காலக் கண்ணாடிகள்
மாயத் தோற்றம் பெற்றன
அகலக் கால்களை விரித்து
கோர முகங்காட்டி
பாவப் பிசாசுகள்
மனித மனங்களை மயக்க மகுடி
வாசிக்க கற்றுக் கொண்டன
பேதைப் பெண்ணினம்
மயங்கிக் கொண்ட போது
ஆட்ட அரங்கம்
அனைத்தும்
குருதிக் காடானது
வெற்றிக் களிப்பில்
காமப் பசி தீர்த்த
பிசாசுகள் ஓங்காரமாய்
கொக்கரித்து
கொண்ட போது
உயிர் மூச்சுகளின்
ஒலி மட்டும் வாழ்வின்
மரணவேர்களை தழுவியபடி



- முல்லை ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊ வரிசைப் பழமொழிகள்

1. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே
2. ஊனற்ற போதே உடலற்றுப்போகும்
3. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்
4. ஊரோடின் ஒத்து ஓடு ஒருவன் ஓடின் கேட்டோடு
5. ஊசி பொன்னானால் என்ன விலை பெறும்?
6. ஊசியின் காதில் ஒட்டகம் நுழையுமா?
7. ஊசியை காந்தமிழுக்கும் உத்தமனை நட்பு இழுக்கும்
8. ஊதுகிற சங்கை ஊதினாலும் விடிகிறபோதுதான் விடியும்
9. ஊரார் பண்டம் உமிபோல் தன் பண்டம் தங்கம் போல்

க.ஆகீசன், தரம் 5டி,
யாழ்ப்பாணக் கல்லூரி.

# சிங்கம்



சிங்கம் காட்டில் வசிக்கும்.
சிங்கம் காட்டின் ராஜா ஆகும்.
சிங்கம் கர்ச்சிக்கும்.
சிங்கத்தின் பற்களும் நகங்களும் வலியவை.
சிங்கம் விலங்குகளை பிடித்து உண்ணும்.

த.ஆபிநயா, தரம் 2சி,
யாழ்.இந்து ஆரம்பபா.

# கல்வி



★கல்வி எனும் பயிருக்கு கண்ணீர் எனும் மழை வேண்டும்.
★கல்வி என்பது மூன்றெழுத்து. அதில் கற்க வேண்டியது பல எழுத்து.
★சீன தேசம் சென்றாயினும் சிறப்பு கல்வி கற்றிடு.
★கல்விதான் இன்ப ஊற்று.
★கற்றது கையளவு. கற்காதது உலகளவு.
★கல்வியே எதிர் காலத்தை நிர்ணயிக்கும்.
★விழித்திருந்து தனித்திருந்து பசித்திருந்து கல்வியைக் கற்றிடு.
★எதை வேண்டுமானாலும் காத்திருந்து பெற்றுக்கொள். கல்வியைத் தவிர.
★கல்வியில்லாத வாழ்க்கை உயிரில்லாத உடலுக்கு சமனாகும்.
★பொய்க் கல்வி பெருமை பேசும். மெய்க் கல்வி சாட்சி சொல்லும்.
★வாழ்க்கைக்கு பயிற்சி பெறுவதுதான் கல்வி.
★கல்வியின் நோக்கம் மன வளர்ச்சி.
★கல்வி என்பது தெரியாததை தெரியச் செய்வதன்று. ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதே ஆகும்.
★இளமையில் கல்வியை புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன், எதிர்கால விடயத்தில் இறந்தவன்.

க.ரபிதா
யா/இணுவில் இந்துக் கல்லூரி.


# ஏமாந்துவார்கள் கவனம்

ஒருவன் சந்தைக்குச் சென்று ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கிக்கொண்டு வந்தான். அது சின்னதாக இருந்த காரணத்தால் இரக்கப்பட்டு தோளில் தூக்கிச் சுமந்துகொண்டே வந்தான். அவனுடைய கிராமத்துக்குச் செல்ல நிறையத் தூரம் இருந்தது. அந்த ஆள் ஓர் அப்பாவிபோல் இருந்ததால் வழியில் பார்த்த நான்கு குடிகாரர்களுக்கு அந்த ஆட்டுக்குட்டியை ஏமாற்றிப் பறித்து விருந்துண்ண ஆசை ஏற்பட்டது.

அவன் போன பாதையிலேயே வேறு வழியில் முன்னால்போய் நால்வரும் தனித்தனியே கொஞ்சதூரம் இடைவெளி விட்டு வழியில் காத்திருந்தனர். அவன் பக்கம் வந்தவுடன் முதலாவது நபர் ''ஏய்! எதற்காக ஒரு கழுதைக்குட்டியைச் சுமந்து செல்கிறாய்?'' என்று கேட்டான். இவன் ஏமாறவில்லை. அவன் ஏதோ கேலி செய்கிறான் என நினைத்து எதுவும் பேசாமல் போனான். கொஞ்ச தூரம் போனவுடன் இரண்டாவது நபர் எதிரில் வந்து, ''என்னப்பா? எதற்கு ஒரு பன்றியைச் சுமந்து கொண்டு போகிறாய்?'' என்று சொல்லிச் சிரித்தான். இவனுக்கு என்னமோ போல் ஆகிவிட்டது.

மேலும் கொஞ்சதூரம் போனவுடன் மூன்றாவது நபர் எதிரில் வந்து. ''அட! என்னப்பா செத்த பாம்பை இப்படியா கழுத்திலே சுற்றிக் கொண்டு போவாய்?'' என்றான். இவனுக்கு உண்மையாலுமே சந்தேகம் வந்துவிட்டது. என்ன இப்படி ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு மாதிரியாகச் சொல்லிட்டுப் போறான். நான் வாங்கினது ஆட்டுக்குட்டிதானா அல்லது வேறு ஏதாவது மிருகமா நாய்க் குட்டியை தூக்கிட்டுபோறாய் என்று மிரண்டவனாய் நடந்தான்.

நான்காவது நபரும் எதிரில் வந்து ''ஏனப்பா! தனியாக ஒரு பிணத்தைத் தூக்கிக் கொண்டு போகிறாய்?'' எனக் கேட்டான். அவ்வளவு தான் இவனுக்கு சந்தேகம் உறுதியாகிவிட்டது. நான் ஏதோ ஒரு குட்டிச் சாத்தனை ஆட்டுக்குட்டின்னு நினைக்க ஏமாந்து வாங்கிட்டு வந்துட்டோம்! தூ கிரகம்! என்று செல்லி அந்த ஆட்டுக்குட்டியைத் தூக்கிப் புதரில் எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தான்.



சிறிது நேரத்தில் ஆட்டுக்குட்டி அந்தக் குடிகாரர் நால்வருக்கும் உணவாயிற்று!





சு.ஆர்த்திகா, தரம்-9டி
யா/ வேம்படி மகளிர் உ.த.பா.




வ.விதுசன், தரம்-8ஏ
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி



மு.தரங்கினி, தரம்-7ஏ
யா/ வேம்படி மகளிர் உ.த.பா.



பா.சரண், தரம்-9பி
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி



சு.அக்ஷயா, தரம்-2
யா/ அச்சுவேலி ஆரம்ப பா.

## விடை தெரியுமா? 212

### உங்களுக்கும் பரிசுகள்

1. அன்னையர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
2. இஸ்ரேலின் தலைநகரம் எது?
3. பூமிக்கு கவசமாக உள்ள படை மண்டலம் எது?
4. தொலமி தான் வரைந்த தேசப் படத்தில் இலங்கைக்கு என்ன பெயர் சூட்டினார்?
5. இறப்பரின் பிறந்த இடம் எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 01.06.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடைகள் 210**

1. பிரான்ஸ்
2. சவுதி அரேபியா
3. தேன்சிட்டு, [illegible]கொத்தி
4. [illegible]
5. யானை

## வெற்றி பெற்றவர் விவரம் (210)

*நா. ஸ்ரீவித்தியாதர், தரம் 7பி, யாழ்ப்பாணக் கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களின் கண்ணீர் அவர்களைப் பாதுகாக்கிறது





"எவ்வளவு கல் நெஞ்சு படைத்தவராக இருந்தாலும் எல்லோரையும் கரையச்செய்து விடும் பெண்களின் அழுகை. இதற்கு அறிவியல் ஆய்வின் அடிப்படையில் விளக்கம் பெறும்போது, பெண்களின் கண்ணீரில் ஒருவித வேதிபொருள் காணப் படுகிறது.

சுபீகா

பெண்கள் தங்களது அழுகையினால் காரியம் சாதிக்க கூடியவர்கள் என்று கூறப்படுவதுண்டு. ஒருவரின் காதலியோ அல்லது மனைவியோ அழும்போது அதனை அவரால் தாங்கி கொள்ள முடிவதில்லை.

எவ்வளவு கல் நெஞ்சு படைத்தவராக இருந்தாலும் எல்லோரையும் கரையச்செய்து விடும் பெண்களின் அழுகை. இதற்கு அறிவியல் ஆய்வின் அடிப்படையில் விளக்கம் பெறும்போது, பெண்களின் கண்ணீரில் ஒரு வித வேதிபொருள் காணப்படுகிறது.

அது அவர்களை பார்க்கும்போது களையிழந்து காணப்படுவது போல் தோன்றச் செய்கிறது. அழும் பெண்ணின் முகம் இந்த வேதிபொருளால் பொலிவு இழப்பதால் அவரது துணையோ அதனை பார்ப்பதற்கு விரும்புவதில்லை.

மேலும் கண்ணீரில் காணப்படும் வேதிபொருள் அவர்களை மறைமுகமாக பாதுகாக்கிறது. எவ்வாறென்றால் அழுவதைப் பார்க்கும் ஆண்களில் வன்முறையை தூண்டும் டெஸ்டோஸ்டீரோன் அளவை அது வெகுவாக குறைக்கிறது எனவும் ஆய்வு தெரிவிக்கிறது.

# பிரச்சினையை எளிதாகக் கையாள வழிமுறைகள்

பொதுவாக பெண்களுக்கு நிறைய விஷயங்கள் பிரச்சினையாகவோ, சிக்கலாகவோ இருக்கலாம். ஆனால் அவற்றை சில முறைகளைக் கையாண்டால் நிச்சயம் நீங்கள்தான் வெற்றியாளராக இருப்பீர்கள்.

1. சாதனையாளர்களை பின்பற்றுவோம்...

சாதனையாளர்கள் எல்லாருமே சாதனையாளர்களாகவே பிறப்பதில்லை. அவர்களும் எத்தனையோ தோல்விகளையும், அவமானங்களையும் சந்தித்துத்தான் சாதனையாளர்களாக உருமாறுகிறார்கள். எனவே, நீங்கள் அடையும் ஒவ்வொரு தோல்விகளையும், சறுக்கல்களையும் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

2. தவறை ஒப்புக் கொள்வோம்..

நண்பர்களுக்குள்ளோ, உறவினர்களுக்குள்ளோ, தம்பதிகளுக்குள்ளோ எந்த விதமான சண்டையோ கருத்து வேறுபாடோ ஏற்பட்டால், அது பெரிய பிளவை ஏற்படுத்தி விடாமல் தடுக்க வேண்டியது அவசியம். பல நேரங்களில் நாம் அதனை தடுக்காமல் விட்டுவிடுகிறோம். தவறு என் பக்கம் இருந்தால் மன்னித்துவிடு என்று பிரச்சினையை அதோடு நிறுத்திவிடுங்கள். மன்னிப்புக் கேட்பது மட்டும் நீங்களாக இருக்க மாட்டீர் கள், உறவிலும், அன்பிலும் வெற்றி பெறுவதும் நீங்களாகவே இருப்பீர்கள்.



சு.சாரங்கி

3. வடிகாலை ஏற்படுத்திக் கொள்வோம்...

பெண்கள் ஏதேனும் பிரச்சினையில் இருக்கும் போது அதனை மற்றவரிடம் கூறுவதால் அவர் கள் மன நிம்மதி அடைகின்றனர். இதற்கு அவர்களின் ஹார்மோன்களே காரணம். இது பெண்களின் பலவீனமல்ல. பலம்தான். இதனால், அவர்கள் ஒரு பிரச்சினையை சரியாக அணுக வழி வகை செய்கிறது. எனவே, நமக்கே நமக்கு என்று ஒரு வடிகாலை, சரியான தோழியை, நண்பரை பெற்றுக் கொள்வோம். எதையும் மனம் திறந்து ஒருவரிடம் பேசும் போது நமது குற்றம் குறைகளை நாமே உணர வழி ஏற்படும்.

4. மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்போம்..

பொதுவாக ஒருவரை நாம் புரிந்து கொள்ளாமல் போவதற்கு, அவர்கள் மீதான வெறுப்புத் தான் காரணமாக இருக்கும், அவர்களை வெறுக்கக் காரணமே அவர்களை நாம் புரிந்து கொள்ளாமல் போவதுதான். எனவே, நம்மைச் சுற்றியுள்ளவர்களின் கருத்துக் களுக்கு மதிப்பளிப்போம். அவர்கள் நிலையில் இருந்து ஒரு பிரச்சினையை ஆராய்ந்து பார்க்க முயற்சிக்க வேண்டும். இதுவே ஒரு பிரச்சினையை எளிதாகக் கையாள சரியான வழியாக இருக்கும்.

5. பிரச்சினையில் இருந்து வெளியே வந்து சிந்திப்போம்...


ஒரு பிரச்சினைக்கு அதன் உள்ளேயே தீர்வு இருக் கிறது. ஆனால், பிரச்சினைக்கு உள்ளேயே இருந்து கொண்டு நாம் தீர்வை தேடக் கூடாது. அதை விட்டு வெளியே வந்து அதற்கான தீர்வை தேடினால் விரை வில் அதனை தீர்த்து விடலாம். எனவே, ஏதேனும் ஒரு மன குழப்பம் ஏற்பட்டால், உடனடியாக அதைப் பற்றியே சிந்தித்து மூளை குழம்பிப் போகாமல், அதில் இருந்து விடுபட்டு, சிறிது ஓய்வு எடுத்து [illegible] அமைதியாக சிந்தியுங்கள். [illegible] ஐடியா தோன்றும். அதனை செயல்படுத்தினால் வெற்றி நிச்சயம்.

# கல்வியும் பெண்களும்

பி.விபிஷனா

சென்ற வாரத் தொடர்.......


இன்றைய உலகில் பெண்களின் படிப்பும் சமத்துவத்துக்கான போராட்டங்களாலும் பல நல்ல மாற்றங்களும் நடந்திருக்கின்றன. இன்று பல நாடுகளில் பெண்கள் பல பொறுப்பான பதவிகளில் இருக்கிறார்கள். ஜேர்மனியில் ஆங்கெலா மேக்கலும், அவுஸ்திரேலியாவில் யூலியா கிலாட்டும் தலைமைப்பதவியிலிருக்கிறார்கள். ஸ்பானிய நாட்டின் பாதுகாப்பு மந்திரியாக கார்மேஷொகான் என்ற பெண்மணி யிருக்கிறார். ஐக்கியநாடுகளின் சபையில் மனித உரிமை பற்றிய விடயங்களுக்கு நவநீதம்பிள்ளை தலைமை வகிக்கிறார். இதே நேரம், அரசியலில் ஆண்களின் ஆளுமைக்கு எதிராகப்போராடிய பர்மாநாட்டின் தலைவி ஆன்சான்சுகி பலவருடங்களாகச் சிறையிலிருந்ததும், முன்னாள் பாகிஸ்தானியப் பிரதமர் பெனாசிர்பூட்டோ கொலை செய்யப்பட்டதும் எங்களுக்கு முன் நடக்கும் வன்முறைகளின் பிரதிபலிப்புக்களாகும்..




இன்றைய உலகின் சனத்தொகையில் [ஏறத்தாள 6.6 பில்லியன்] கிட்டத்தட்ட ஒரு பில்லியன் தொகை மக்களுக்குப் படிப்பறிவு கிடையாது. இதில் மூன்றில் இருபங்கினர் பெண்கள். 100 மில்லியன் குழந்தைகளுக்குப் படிப்பு வசதி கிடையாது. இதில் 70 வீத மானோர் பெண்கள்.

வறுமைப்பட்ட மக்களிலும் மிகவும் துன்பப் படுபவர்கள் பெண்களும், குழந்தைகளுமாவர். முன் குறிப்பிட்டது போல இன்று பல நாடுகளில் நடக்கும் பல தரப்பட்ட போர்கள், இடமாற்றங்கள், கலாசாரக் கோட்பாடுகள், சாதியமைப்பு முறை, மாற்றமடையும் சுற்றாடல் சூழ்நிலைகள் அத்துடன் குடும்ப வன்முறைகள் என்பன பெண்களைத்தான் அதிகம் பாதிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உலகின் மிகப் பயங்கரமான சுறாவுக்கு ஆழ் கடலில் உணவூட்டி மெய்சிலிர்க்க வைக்கும் இந்த மனிதர் கார்லோஸ் எஸ்ட்ராபியா, மெக்ஸிக்கோ நாட்டைச் சேர்ந்தவர். கடலடி நீச்சல் வீரனான இவர், கடந்த பல வருடங்களாகவே அபாயகரமான சுறாக்களுடன் நட்புப் பாராட்டி வருகின்றார். ஆபத்தைப் பொருட்படுத்தாமல் அவற்றுடன் ஒன்றாக நீந்தி விளையாடி வருகிறார். கார்லோஸ் சுறாக்களுக்கு உணவளிக்கும் போது இந்த ஒளிப்படங்களை எடுத்திருப்பவர். கடலடி நீச்சல் ஒளிப்படப்பிடிப்பாளர், அமெரிக்காவைச் சேர்ந்த அமென்டா கொட்டன். இந்தப் பயங்கரச் சுறாக்கள் அப்பாவிகள்,வெட்க சுபாவம் கொண்டவை என்கிறார் கார்லோஸ்.



காந்தியை தாங்கிய பாதணி, தன்னை ஏந்தப் போகும் கைகளுக்காகக் காத்துக் கிடக்கிறது.

# காந்தியின் இரத்தத்தை வாங்குவது யார்?

மகாத்மா என்று வர்ணிக்கப்படும் இந்தியத் தேசத் தந்தை மோகன்லால் கரம்சந் காந்தியின் குருதி இப்போது ஏலத்துக்கு வந்திருக்கின்றது.

வன்முறையற்ற போராட்டக்காரரின் குருதி பல கோடி ரூபாவுக்கு விலைபோகக் காத்திருக்கின்றது.

லண்டனில் உள்ள ஏல விற்பனை நிலையம் ஒன்றே காந்தியின் குருதியை ஏலத்தில் விட்டுள்ளது.

1924 ஆம் ஆண்டு காந்தி, குடலிறக்க நோய்க்கு சிகிச்சை பெற்றுக்கொண்டார். அப்போது அவரது குருதி சோதனைக்காக எடுக்கப்பட்டது. அந்தக் குருதி மாதிரி தேய்க்கப்பட்ட கண்ணாடித் துண்டே இப்போது ஏலத்துக்கு வந்துள்ளது. முல்லொக்ஸ் என்பவரின் ஏல விற்பனை நிலையத் தில் காந்தியின் குருதி இப்போது வாங்குவோருக் காகக் காத்துக் கிடக்கிறது.

**எல்லாமும் ஏலத்துக்கு**

காந்தி பயன்படுத்திய தோலால் ஆன பாதணி, காந்தியே தனது கைத்தறியில் நெய்த முகந்துடைக்கும் துணி, அவரது ஒளிப்படங்கள், ஓவியங்கள், அவரது பேச்சு பதியப்பட்ட ஒலி நாடாக்கள், காந்தியின் தனிப் பயன்பாட்டில் இருந்த பொருள்கள், ஆவணங்கள் என்பனவும் ஏலத்துக்கு வந்திருக்கின்றன.

1917 முதல் 1934 வரை இந் தியாவின் மகாராஷ்டிரா மாநி லத்தின் ஜுகு கடற் கரையோர இல்லம் ஒன்றில் வசித்தார். அங்கு அவர் பயன்படுத்திய பொருள்களே இப்போது ஏலம் விடப்பட உள்ளன.

காந்தியின் பாதணிக்கு 10,000 முதல் 15,000 வரையான பிரிட்டிஷ் பவுண்ஸ் கிடைக் கும் என்று ஏல விற்பனை நிலையம் எதிர்பார்க்கிறது.

காந்தி தனது கைப்பட குஜராத்தி மொழியில் எழுதிய இரண்டு பக்க ஆவணம் ஒன்றும் ஏலத்தில் ஏற்றப்பட் டுள்ளது. இதற்கு 30,000 முதல் 40,000 பவுண்ஸ் வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1869 ஆம் ஆண்டு குஜராத்தில் பிறந்த மோகன்லால் கரம்சந் காந்தி என்ற மனிதர் பின்னாளில் இந்திய சுதந்திரப் போராட்டத்தைத் தலைமை தாங்கி அற வழியில் நடத்தினார். மக்களுக்குப் போதித்தவற்றை இறுதிவரை தானே கடைப்பிடித்து நடந்துகொண்டமைக்காக மகாத்மாவாகப் போற்றப்படுகின்றார்.

**நோபல் பரிசு இல்லை**

அமைதிக்கான நோபல் பரிசு வழங்குவதற்காக காந்தியின் பெயர் 5 தடவைகள் முன்மொழியப்பட்டன. 1937, 1938, 1939, 1947 இறுதியாக அவர் சுட்டுக் கொல்லப்படுவதற்குச் சில நாள்களுக்கு முன்னதாக 1948 ஜனவரி மாதத்திலும் காந்திக்கு நோபல் பரிசு கொடுக்கக் கோரினார்கள். ஆனால் இறுதி வரை அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்படவேயில்லை.

அதேசமயம், காந்தியின் அறவழிப் போராட்டத்தை மதித்த பிரிட்டிஷார் காந்தியின் உயிரைக் காத்தார்கள். ஆனால், தியாகி திலீபனின் பட்டினிப் போராட்டத்தின்போது அவனைச் சாகவிட்டது இதே காந்தி தேசம்.

ரேணுபிரேம்




விடுதலையை வென்றெடுக்கும் ஆலோசனையில் காந்தியுடன் நேரு.

# நீங்களும் கேளுங்க

? வடக்கு அபிவிருத்தி காண்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் போருக்குப் பின்னர் இதுவரை இங்கு வேலை வாய்ப்பு பெருகியதாகத் தெரியவில்லையே! பின்னர் அபிவிருத்தி என்று எதைத்தான் சொல்கிறார்கள்?

*பிரசன்னா, திருநெல்வேலி*

வீதிகளுக்கு கார்பெற் போடுவதைத்தான் எங்கள் அமைச்சர்கள் அபிவிருத்தி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை விட்டுத் தள்ளுங்கள். வேலை வாய்ப்பு என்று நீங்கள் கேட்டதால் ஒரு தகவல். இந்த ஆண்டில் எந்த வேலை நல்லது அல்லது அதிகம் பேர் எந்த வேலையை நாடுகிறார்கள் என்பது பற்றி அமெரிக்கா வில் ஓர் ஆய்வு நடத்தினார்கள். முடிவு என்ன தெரியுமா? உடல்நலத் துறை சார்ந்த வேலைகளைத்தான் அதிகம் நாடுகிறார்களாம். அதில்தான் வருமானம் அதிகம் என்று நினைக்கிறார்கள் அமெரிக்கர்கள். கணினித் துறைசார் வேலைகளுக்குக் கிடைத்ததோ 10ஆவது இடம் தான். மிக மோசமாகத் தேடப்படும் வேலை என்று ஊடகங் களுக்குச் செய்தியாளர்களாவதைத்தான் வகைப்படுத்தியிருக்கிறார்கள்.

? தயா மாஸ்டர், கேபி, தமிழினி எல்லோரும் தேர்தலில் போட்டியிடப் போகிறார்களாமே?

*யாழினி, கோப்பாய்*

1987 இந்திய – இலங்கை ஒப்பந்தத்துக்கு முன்னர் ஆயுதம் தூக்கியிருந்த டக்ளஸ் தேவானந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அடைக்கலநாதன், விநோகராதலிங்கம் ஏன் அதன் பின்னர் கனரக ஆயுதங்களுடன் திரிந்த கருணா அம்மான்கூட அரசியலுக்கு வரலாம் என்றால் இவர்கள் வருவதிலும் எந்தத்தவறும் இல்லை. ஆனால், இவர்கள் எல்லோருமே, ஒரு காலத்தில் இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது; நிம்மதியாக வாழ முடியாது என்று கூறித்தான் ஆயுதம் தூக்கினார்கள், தங்கள் பின்னால் வந்த பல ஆயிரம் இளைஞர்களைச் சண்டைக் களங்களில் முன்னால் நிறுத்தினார்கள் என்பதைத்தான் இப்போது நம்ப முடியவில்லை.



இப்போது இவர்கள் அரசியல் களங்களில் முன்னால் நிற்கிறார்கள், இவர்களின் பின்னால் சென்ற இளைஞர்களைத்தான் ஆயிரம் ஆயிரமாய் காணக்கிடைக்கவில்லை. தாய்மாரும் மனைவிமாரும் பிள்ளைகளும் இன்றும் அவர்களைத் தேடித் திரிகிறார்கள். இனிவரும் காலங்களில் அவர்களைத் தேடித் தருவோம் என்று இவர்கள் சொல்லும் வாக்குறுதிகளுக்காக வாக்குப் போடவேண்டும் என்ற அவர்களின் விதியை என்னவென்பது?

? யாழ்பாணத்தில் இப்போதெல்லாம் கலாசாரம் மிக மோச மாகச் சீரழிந்து போய்விட்டதாமே! அடிக்கடி விபச்சார விடுதிகளையும் பிடிக்கிறார்கள்!

*சுகந்தன், வண்ணார்பண்ணை*

எந்தக் கலாசாரம் சீரழிந்து போய்விட்டது என்கிறீர்கள்? 2009க்கு முன்னர் இருந்த கலாசாரமா? 19ஆம் நூற்றாண்டில் நிலவிய கலாசாரமா? 18ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரர்கள் வருவ தற்கு முன்னர் நிலவிய கலாசாரமா? இல்லை, சோழர் காலத்தில் நிலவிய தமிழர் கலாசாரமா? அதற்கும் முன்னால் சங்க காலத்தில் நிலவிய கலாசாரமா? எந்தக் கலாசாரம்தான் சீரழிந்து போனது என்கிறீர்கள்?



18ஆம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் இலங்கையில் நிலவிய கலாசாரத்தின் ஒரு பகுதியைப் பிரதிபலிக்கிறது இந்தப் படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தின் முதலாவது பொங்கோஸ் கலைஞர்

# நவரச லயவாரிதி மு.தனபாலசிங்கம்



■ பொ.யாவிலான் தவமைந்தன்

உலகின் தாளவாத்தியங்கள் பல வகைப்படும். இவற்றுள் எல்லா விதமான கருவிகளும் தென்னிந்தியத் திரையிசையில் இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் பொங்கோஸ் எனப்படும் கருவியானது 1970களின் பின்னரே தென்னக இசையமைப்பாளர்களால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.

இந்தக் காலப்பகுதியில் வந்த தமிழ்த் திரையிசைப் பாடல்கள் அனைத்தினதும் தாளக் கருவியாக இந்தக் கருவியே விளங்கியது. ஈழத்தில் மெல்லிசைக் குழுக்கள் தோன்றி வளர்ச்சியடைந்த காலத்தில் முதன் முதலாக பொங்கோஸ் என்னும் கருவியைத் தமிழர் பகுதியில் அறிமுகம் செய்த சாதனைக் கலைஞராகவும் நாடக, திரைப்பட நடிகராகவும் எண்ணற்ற நவீன நாடகங்களுக்கான பின்னணி இசையமைப்பில் தோல் வாத்தியக் கலைஞராக இன்று வரை ஈடுபட்டு வருகின்ற ஒருவராகவும் ஓய்வின்றிச் செயற்பட்டு வருபவர் இசைஞானச் செல்வன் மு.தனபாலசிங்கம்.

மறைந்த முத்தையா - நல்லம்மா தம்பதியரின் மகனாக 19.08.1950இல் நீராவியடில் இவர் பிறந்தார். யாழ்.இந்துக் கல்லூரியில் கற்ற காலத்திலேயே இசையார்வம் மிக்கவராக, கிடைக்கும் பொருள்கள் அனைத்தையும் இசைக்கருவியாகப் பயன்படுத்தி இசைமீட்டும் திறன் கொண்டவராக விளங்கி வந்தார். 1967இல் பாடசாலையின் கலை நிகழ்வொன்றில் சிறுவர்களின் விளையாட்டு மேளம், பேணிகள் போன்ற பொருள்களை வைத்து நண்பர்களுடன் இணைந்து இசைக்குழு ஒன்றை நடத்தி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். 1972 இல் தொடக்கப்பட்ட கலா லயா என்னும் இசைக்குழுவில் இணைந்து கொண்ட இவர், அதனைத் தொடர்ந்து கண்ணன், ரங்கன், கோணேஸ், மண்டலேஸ்வரன், ராஜன்ஸ் போன்ற அனைத்து இசைக்குழுக்களிலும் வாசிக்கும் திறன்கொண்ட ஒரேயொரு பொங்கோஸ் கலைஞராகப் பணியாற்றி வந்தார். அந்தக் காலத்தின் திரைப்படப் பாடல்களில் பெரும்பாலானவை இந்தக் கருவியுடன் பாடப்பட்டிருந்தமையாலும் யாழ்ப்பாணத்தில் வேறு எவராலும் இந்தக் கருவியை இசைக்க முடியாமல் இருந்தமையாலும் இவர் ஓய்வின்றி, உறக்கமின்றி, சலிப்பின்றி உற்சாகத்துடன் அனைத்து இசைக்குழுக்களின் நிகழ்வுகளிலும் விருப்புடன் பங்கு கொண்டார்.

அந்தக் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அனைத்துத் திரைப்படப் பாடகர்களின் மெல்லிசை நிகழ்வுகளிலும் பங்கு பற்றிய ஒரேயொரு ஈழத்துக் கலைஞரும் இவரே என்பது போற்றுதற்குரியதாகும். இந்த வகையில் ரி.எம்.சௌந்தரராஜன், ஏ.எல்.இராகவன், எல்.ஆர்.ஈஸ்வரி, யமுனாராணி, ரி.எம்.எஸ்.செல்வக்குமார், ரி.எல்.மகாராஜன் போன்றோரின் இசை நிகழ்வுகளை அலங்கரித்த பெருமைக்குரிய இவர், ஈழத்தின் புகழ் பூத்த மெல்லிசைக் கலைஞர்களான ஏ.ஈ.மனோகரன், நித்தி.கனகரட்ணம், முத்தழகு, கலாவதி சின்னச்சாமி போன்றவர்களின் இசை அரங்குகளையும் சிறப்பித்தவர்.

யாழ். மாநகர சபையில் சந்தை மேற்பார்வையாளராக 1971ஆம் ஆண்டிலிருந்து 23 ஆண்டுகள் செயற்பட்ட இவர் மாநகர சபையின் பணியாளர்களை வைத்து இசைக்குழு ஒன்றை உருவாக்கிப் பல நிகழ்வுகளை அரங்கேற்றியதுடன் இன்று வரை அக்குழுவின் கலைஞராகவும் திகழ்ந்து வருபவர்.

அத்துடன் 1974இல் இருந்து யாழ். திருமறைக் கலாமன்றத்தின் இசைக்குழுவிலும் நாடக ஆற்றுகைகளிலும் தனது பங்களிப்புக்களை வழங்கி வருகின்ற இவர் யாழ்.நாடக அரங்கக் கல்லூரியால் மேடையேற்றப்பட்ட 'பொறுத்தது போதும்', எனும் நாடகத்திலும் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் மேடையேற்றப்பட்ட 'அக்கினிப் பெருமூச்சு', 'நெஞ்சுறுத்தும் கானல்', முடக்கம், 'தீனக் குழந்தைகள்', 'கிணத்துப் பூதம்', 'அடிசுடும் அனல் வெளி' போன்ற நாடகங்களிலும் சர்வோதயத்தால் அளிக்கை செய்யப்பட்ட 'மண்டையோடு', 'இயமன்' போன்ற எண்ணற்ற நாடக மேடையேற்றங்களிலும் தனது லய வாத்தியத்தை இசைத்து நாடகத் துறையிலும் ஆழக் கால் பதித்தவர்.

## சாதனைக் கலைஞரைச்
### சந்திப்போம் சிந்திப்போம்

அத்துடன் சில மாதங்களுக்கு முன்னர் தே.தேவானந்தின் நெறியாள்கையில் சங்கிலியன் பூங்காவில் மாபெரும் படைப்பாக அரங்கேற்றப்பட்ட நூறு நடிகர்களின் பங்களிப்புடன் இரண்டு நாள் நாடகத்திருவிழாவில் மேடையேற்றப்பட்ட பத்து நாடகங்களிலும் பின்னணி இசைக் கலைஞராகச் சிறப்புடன் பங்காற்றியவர்.

ஒரேயொரு பொங்கோஸ் கலைஞராக யாழ்ப்பாணத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப்பணியாற்றி வருகின்ற இவர், இந்தக் கருவியைச் சுயமாகக் கற்றுத் தனது கடின உழைப்பால் உயர்ந்தவர் என்பதும் எத்தனையோ நவீன இசைக்கருவிகள் தற்காலத்தில் அறிமுகமாகிக் கொண்டிருந்தாலும் அன்று போல் இன்றும் பொங்கோஸ், கொங்கோ ட்ரம்ஸ் போன்ற கருவிகளை இசைப்பதில் ஈடு இணையற்ற ஒருவராகவும் பழகுவதற்கினிய பண்பாளனாகவும் இருக்கிறார்.

> "தென்னிந்தியச் சினிமா இசையில் முழுநேரமும் ஈடுபட்டு வருகின்ற தற்கால இளையோர் எமது மண்ணின் கலைஞர்களாகத் திகழ்ந்து புதிய சாதனைகளைப் படைக்க முன்வர வேண்டும்

கர்நாடக இசை, பண்ணிசை, நடனம், கிராமிய இசை போன்ற அளிக்கை முறைகளின் தனித்துவங்களை உணராமல் தமது வாத்தியத்தின் சத்தம் இடி முழங்குவதுபோல் கேட்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கும் கலைஞர்கள் பலரை நாம் கலையரங்குகளில் அன்றாடம் காண்கிறோம். ஆனால் நிகழ்வுகளின் தன்மைகளைத் தன்னுள் உணர்ந்து தன்னை மறந்து இனிமையுடன் இசைமீட்டும் இக்கலைஞர் தனது உள்ளக் கிடக்கைகளை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்.

சினிமாக் கலையில் ஈடுபடுகின்ற எமது கலைஞர்கள் ஓரளவேனும் கர்நாடக இசையைக் கற்க வேண்டும். எவரோ இசையமைத்த பாடலை மேடைமேடையாக இசைப்பதில் என்ன நன்மை இருக்கிறது? எமது மெல்லிசைக் கலைஞர்கள் தமது இசைஞானத்தை வளர்த்துக் கொள்வதுடன் புதிய ஆக்கங்களை வெளியிடவும் முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறான ஆக்கங்கள் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டதாக இருப்பதையே நான் விரும்புவேன். எமது நாட்டின் சொத்தான இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணனின் இசைக்குழுவானது பல தடவைகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டபோது அதில் நானும் ஒருவனாகப் பணியாற்றியமை என்றும் மறக்க முடியாதது.

தென்னிந்தியச் சினிமா இசையில் முழுநேரமும் ஈடுபட்டு வருகின்ற தற்கால இளையோர் எமது மண்ணின் கலைஞர்களாகத் திகழ்ந்து புதிய சாதனைகளைப் படைக்க முன்வர வேண்டும்" எனத் தனது கருத்துக்களை நிலை நிறுத்துகின்றார் மு.தனபாலன்.

87

ஜம்புவின் தடாலடி 6

## மேலே யாரும் இல்லை



ஜம்புலிங்கமும் அவரது நண்பரும் லண்டன் நகருக்கு சென்றனர். அங்கு ஊரை சுற்றி பார்க்க வேண்டி பஸ்ஸுக்காக நின்றனர். அப்பொழுது இரண்டு தட்டு 'டபிள்டெக்கர்' பஸ் ஒன்று வந்தது. நண்பர் பஸ்ஸின் கீழ்த்தளத்திலும், ஜம்புலிங்கம் பஸ்ஸின் மேல்புறத்திலும் தனித்தனியாக பயணம் செய்தனர். ஜம்புலிங்கம் பயந்து கொண்டே கம்பியை கெட்டியாக பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். கீழே இருந்த நண்பரோ, "ஜம்பு! ஏன் பயந்த படி நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு ஜம்புலிங்கம், "உனக்காவது பரவாயில்லை கீழே டிரைவர் இருக்கிறார். மேலே யாருமே இல்லை. தானாக வண்டி ஓடுகிறது. அதுதான் பயமாக இருக்கிறது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச இலக்கியங்களும் 'பிரதேச வாரி'யான இலக்கியங்களும்

பிரதேச இலக்கியங்கள் காட்டும் மண் வாசனையும் மக்கள் தம் இயல்பு வாழ்க்கையும் நாம் இழந்தவற்றின் வரலாற்றைச் சொல்லுகின்ற போர் மட்டுமல்ல உலக மயமாக்கலின் வலிய கரங்களும் எங்கள் குரல் வளையை நசுக்கி எங்களைப் பண்பாட்டு வேரிலிருந்து அறுத்து இயல்பற்ற ஒற்றைப் பண்பாட்டுக்குரியவர்களாய் மாற்றிவரும் அவலத்தையும் , அபத்தத்தையும் எமக்கு உணர்த்துகின்றன.

■ ந.அஜந்தகுமார்

**ஒரு சோம்பேறியின் பக்கம்**



கொழும்புத் தமிழ்ச் சங்கம் சென்ற 18 ஆம் ,19 ஆம் திகதிகளில் 'ஈழத்து இலக்கியச் செல்நெறிகளும் பிரதேச இலக்கியங்களும்' என்ற தொனிப் பொருளில் பிரதேச இலக்கிய ஆய்வரங்கை நடத்தியிருந்தது. அந்த ஆய்வரங்கில் கலந்து கொண்டதன் பேறான பல சிந்தனைகள் கிளர்ந்தன.

பிரதேச இலக்கியம் என்பது ஒரு பிரதேசத்தின் மண்வாசனையை அதன் இயல்புகளை அந்த நிலத்தின் மக்களை அவர்கள் தம் சித்திரங்களை உருவாக்கிக் காட்டும், பிரதிபலித்துக் காட்டும் இலக்கியத்தைக் குறித்து நிற்கின்றது.

போர் எங்கள் நிலங்களின் எழிலை மக்களின் இயல்பைத் தின்று தீர்த்திருக்கிறது. இயல்பற்ற, இலக்கற்ற மனித கூட்டங்களாய் நாம் மாறி வரும் சூழலில் எமது நிலங்களின் எழிலை மக்களின் இயல்பைக் கண்டு கொண்டு கொள்ளும் 'ஆவணங்களாக் பிரதேச இலக்கியங்கள்தான் விளங்குகின்றன.

கவிதைகள் எங்களின் உணர்வுகளை உரக்கப் பேசின. சிறுகதைகள் சில விசாரணைகளையும் சம்பவங்களையும் பேசின என்றால் ஒரு பிரதேசத்தை இலக்கியத்திற் கொண்டு வரும் ஆற்றல் நாவல்களுக்குத்தான் இருக்கின்றது என்பதை நாம் கவனிக்கின்றோம். இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாவல்கள் ஈழத்து மண்ணைக் களமாகக் கூட கொள்ளவில்லை. 20 ஆம் நூற்றாண்டில் வீரசிங்கன் கதை தான் ஈழத்து மண்ணைக் களமாகக் கொண்ட முதல் நாவல். களமாகக் கொண்டு அதைத் தொடர்ந்து நாவல்கள் வந்தாலும் பிரதேசத்தின் உயிரையும், உயிர்ப்பையும் அவை கொண்டிருக்கவில்லை. 'விதியின் கை' நாவலில் கனக. செந்திநாதன் இதில் ஓரளவு வெற்றி பெற்றாலும் அ.பால மனோகரன் 1973 இல் எழுதிய 'நிலக்கிளி' நாவலுடன் தான் பிரதேச நாவல் என்ற பகுப்பு தோன்றுவதாக பேராசிரியர் ம.இரகுநாதன் வன்னிப்பிரதேச நாவல்கள் என்ற நூலில் கூறியுள்ளார்.

வன்னிப் பிரதேசத்திலே தோன்றிய நாவல்கள் இப்போது எமக்கு மிகவும் தேவையாக இருக்கின்றன. போர் முடிந்த பூமி, ரணகளமாய் மாறிய பூமி இயற்கை எழில் உடுத்திருந்த தன்மையை, கள்ளமற்ற அந்த மனிதர்களின் வாழ்க்கையை நாம் தொலைத்துவரும் துயர வரலாற்றை எமக்கு அவை நினைவூட்டுகின்றன. தாமரைச் செல்வியின் நாவல்கள் மிகவும் முக்கியமானவை. கிளிநொச்சி உருவாகிய வரலாற்றை 'பச்சை வயல் கனவு' நாவலில் காட்டுகின்றார். உருவாகியது எவ்வாறு போரால் அழிந்தது என்பதையும் சொல்கின்றார்.

எனவே பிரதேச இலக்கியங்கள் காட்டும் மண் வாசனையும் மக்கள் தம் இயல்பு வாழ்க்கையும் நாம் இழந்தவற்றின் வரலாற்றைச் சொல்லுகின்ற போர் மட்டுமல்ல உலக மயமாக்கலின் வலிய கரங்களும் எங்கள் குரல் வளையை நசுக்கி எங்களைப் பண்பாட்டு வேரிலிருந்து அறுத்து இயல்பற்ற ஒற்றைப் பண்பாட்டுக்குரியவர்களாய் மாற்றிவரும் அவலத்தையும் , அபத்தத்தையும் எமக்கு உணர்த்துகின்றன.

நாம் இயற்கையின் எழிலை உதாசீனம் செய்தபடி தொழில்நுட்ப உலகத்தின் சேவகர்களாக அடிமைகளாக மாறுகின்ற குற்றவுணர்வை கொஞ்சமேனும் பிரதேச இலக்கியங்கள் ஏற்படுத்தவே செய்கின்றன. வீரகேசரி 1970 களில் பிரதேச நாவல் போட்டியை நடத்தியது. பல்வேறு அறியப்படாத பிரதேசங்களையும் காட்டுகின்ற நாவல்கள் தோன்றின. போரின் பின்னான வாழ்வில் இருக்கும் எமக்கும் முன்னைப் பழைமையையும் பின்னைய நிலைமையையும் சேர்த்து எடுத்தியம்பும் இலக்கியங்கள் அவசியமாக இருக்கின்றன. சாட்சியங்கள் மௌனமாகி இலக்கியங்களில் அபூரணமாகவே வெளிப்பட்டு வருகின்றன. நல்லதொரு நாவலே மௌனங்களை உடைக்கும் வலிய ஆயுதம் என்பதை நம் இலக்கியக்காரர்கள் உணர்ந்தும் இந்த மௌனம் நீளப் போகிறதா?

பிரதேச இலக்கியங்கள் பற்றி கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே நடந்த ஆய்வரங்கு பிரதேசவாரியான இலக்கியத் தோற்றம் பற்றியே பெரும்பாலும் திசைமாறி இருந்தது. அப்போதுதான் பிரதேச வாரியான இலக்கியங்களின் அறிக்கையும் தேவையானது, ஆவணப்படுத்த வேண்டியது என்பது மனதுக்குள் இன்னும் ஆழமாகப் பதிந்து கொண்டது. அருகில் இருக்கின்ற எழுத்தாளரையே அறியாத மக்கள் மத்தியில் தான் இலக்கியக்காரர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அந்த மக்கள் தான் அவர்களின் கருப்பொருளாக இருந்தார்கள், இருக்கிறார்கள். சுந்தரராமசாமி, சினிமாக்காரர்களைப் போலவோ விளையாட்டு வீரர்களைப் போலவோ அந்தஸ்தோ செல்வாக்கோ இலக்கியங்களுக்கு கிடைத்து விடுவதில்லை என்று கூறியது உண்மைதான். ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ள எழுத்தாளர்களையும் , அவர்களின் இலக்கியங்களையும் ஆவணப்படுத்தும் போதுதான் நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் பற்றிய விவரங்களும், இலக்கியங்களும் முழுமை பெறும். தரம், தரமின்மைக்கு அப்பால் இந்தத் தகவல்கள் எமக்குத் தேவையானவை. தரம், தரமின்மை என்பதை யாரும் கூறியதைக் கொண்டே இரண்டாம், மூன்றாம் நிலையாகக் கொண்டே பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறி வருகின்றார்கள்.

வெளிச்சத்துக்கு வராமலே நல்ல சில படைப்புகளும் தூங்கிவிடக் கூடும். ஒவ்வொரு பிரதேச செயலகமும் தனது இடத்தில் ஒவ்வொரு வருடமும் வருகின்ற நூல்கள் பற்றிய விவரத்தைச் சேகரிக்க வேண்டும். எழுத்தாளர்களும் அதற்குப் பங்களிக்க வேண்டும். 'விக்கிபீடியா' போன்ற இணையத் தளங்களில் உள்ளவற்றையே முழுமையாக நம்பிவிடக்கூடாது. பிரதேச செயலக ரீதியான தகவல்கள் நாடு முழுவதும் தோன்றும் வருட ரீதியான நூலாக விவரமாக வெளியிடப்படுமாக இருந்தால் எதிர்கால ஆய்வாளர்களுக்கு மிகப்பெரும் சொத்தாகவும் தேடலுக்கான கருவியாகவும் அமையும்.

# பொறுப்பு



■ குந்தவி

பொங்கும் கடல் அலைகளின் நிரைகளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் வசந்தி, வெள்ளை வெளீரென்ற கடலின் நுரை தோன்றுவதும் மறைவதும் மிக அழகாக இருந்தது. தன்னை மறந்து இயற்கையின் அழகில் மனதைப் பறிகொடுத்தவள்."அம்மா!" என்ற மகளின் அழைப்பில் நிஜ உலகிற்கு வந்தாள். மகள் அபர்ணா அருகில் வந்து, "வாங்கோ வீட்டை போவோம்" என்றாள். வசந்தியின் மனசில் நீண்ட பெருமூச்சொன்று கிளம்பியது." இவ்வாறு இருந்துவிட முடியுமா? வீட்டை போயே ஆக வேண்டும்."

வீடு! வீடு என்று நினைக்கும் போதே அங்கு இருக்கும் "இல்லாமைகள்" தான் முதலில் நினைவுக்கு வருகின்றன. தண்ணி இல்லை, மின்சாரம் இல்லை, வீட்டுத் தலைவன் இல்லை என்று பட்டியல் நீளுகின்றது. மகன் ஆதவன் [illegible] வந்து இருப்பான் என நினைத்துக் கொண்டு எழுந்தாள் வசந்தி. அபர்ணாவுடன் கூட நடந்தபடி இரவுச் சாப்பாட்டிற்கு என்ன செய்யலாம் என எண்ணமிட்டாள்.

வீடு கன தூரம் இல்லை. நடந்து செல்லும் தூரம்தான். வீட்டில் தண்ணீர் இல்லாத நிலை சாப்பாடு செய்வதைப் பின்தள்ளியது. பக்கத்துக் கடையில் இடியப்பம் வாங்குவதை முடிவு செய்தது. வழமை போலவே கடனுக்கு 20 இடியப்பம் வாங்கிக் கொண்டு வீட்டை அடைந்தார்கள். ஆதவன் அருகிலுள்ள சக நண்பர்களுடன் விளையாடப் போய்விட்டான். அபர்ணா வீட்டைக் கூட்டினாள். வசந்தி லாம்பைத் துடைத்து எண்ணெய் ஊற்றிக் கொளுத்திவிட்டாள். தெருக் குழாயில் குடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இரு வாளிகள் எடுத்து வீட்டுத் தண்ணீர் பரலில் விடுவதற்குள் மூச்சு வாங்கியது. குடிப்பதற்குப் போத்தலில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வீட்டு முற்றத்துக் [illegible] இன்பமாக இருப்பது போலவும் தானே உலகில் வஞ்சிக்கப்பட்ட ஒரே ஜீவனாக உள்ளது போலவும் தோன்றியது.

வசந்திக்கு திருமணமாகி பதினெட்டு வருடங்கள். இதில் கணவனுடன் இருந்த காலங்களை விரல் விட்டு எண்ணலாம். அதற்குச் சாட்சியாக அபர்ணா, ஆதவன் என இரு குழந்தைகள்.

கணவன் கந்தசாமி. மேசன் வேலை செய்பவன். கூடவே குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி வசந்தியைவிட வேறு பல பெண்களுடனும் தொடர்பு உடையவன். இதனால் வசந்திக்கும் கந்தசாமிக்கு இடையே நெடுகலும் வாக்குவாதங்களும், பூசல்களும் தான். இதனையே பார்த்து வளர்ந்த குழந்தைகள் படிப்பில் ஆர்வமின்றி கிடைத்த நேரத்தில் சாப்பிட்டு, இல்லாத நேரம் விளையாடி வாழ்க்கை என்று வரைமுறையின்றி வாழ்க்கையை ஓட்டுகின்றனர். அபர்ணா சாதாரணதரப் பரீட்சையில் சித்தி எய்தவில்லை. ஆதவன் தற்போது தரம் 6 இல் கல்வி கற்கின்றான். தற்காலக் கல்வி முறையில் வகுப்பேற்றம் வரையறுக்கப்படாது இருப்பதால் அவனால் இலகுவாக வகுப்பேற்றம் அடையக் கூடியதாக உள்ளது. அவன் பொதுப் பரீட்சையை எதிர்நோக்கும் போது எதிர்காலம் என்னாகுமோ தெரியாதுள்ளது.

உலகில் எத்தனையோ பெண்கள் ஆண் துணையின்றி பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் கொண்டு தமது பிள்ளைகளை கண் போன்று காத்து அதற்காக தம்மை செருப்பாக உழைத்துக் கொண்டுள்ளார்கள். அவர்களது பிள்ளைகளும் கஷ்டம் உணர்ந்து படித்து, ஆளாகி பல உயர் பதவிகளிலும் இருப்பதை எமது வாழ்வில் காண்கின்றோம்.

வசந்திக்கு என்ன காரணத்தினாலோ சமுதாயத்தில் எதிர் நீச்சல் போட்டு தனது குழந்தைகளை முன்னுக்கு கொண்டு வரமுடியவில்லை. படிப்பறிவு குறைவாக உள்ளதும் உலக ஞானம் குறைவாக இருப்பதும் இவற்றுக்கு ஒரு காரணமாக அமையலாம். இவைகளே கந்தசாமி வசந்தியை ஏமாற்றுவதற்கும் ஏதுவாக அமைந்தது. இவைகளால் பாதிக்கப்பட்டது ஏது மறியாத அப்பாவி ஜீவன்களான அபர்ணாவும் ஆதவனும்தான். அவர்களே வழிகாட்டி அற்ற ஆட்டு மந்தைகள் ஆக இவ்வுலகில் விடப்பட்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூப்பின் மர்மம் என்ன?

■ ரஜி

உலகில் பிறப்பவர்கள் எல்லாம் ஒரு நாள் இறப்பை சந்திக்கத்தான் வேண்டும்' என்பது எமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அது ஏன் என்பதற்கான பதில் மட்டும் இதுவரை யாருக்குமே தெரியாது.

அதே சமயம் இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் எப்படி இறந்து போகிறார்கள் என்று கேட்டால் அதற்கு எம்மால் ஓரளவுக்கு பதில் சொல்ல முடியும். அதாவது, ஒரு குழந்தை பிறந்த பின்பு நாள்கள், வருடங்கள் செல்லச் செல்ல அதற்கு வயதாகிறது. வயதாக வயதாக உடல் மெலிந்து, நோய்கள் ஏற்பட்டு இறுதியில் இறந்து போகிறது. பிறந்த ஒவ்வொரு வரும் இறந்து போவதற்கு காரணம் எமக்கு வயதாகிப்போவது அல்லது மூப்படைவதுதான்!

**எமக்கு ஏன் வயதாகிறது?**


இந்தக் கேள்விக்கு உலக அறிவியலாளர்கள் யாரும் இதுவரை விடை கண்டுபிடிக்கவில்லை. ஆனால், 'நான் கண்டுபிடித்துவிட்டேன்' என்கிறார் அமெரிக்காவின் சால்க் ஆய்வு மைய விஞ்ஞானி மார்ட்டின் ஹெட்சர். நியூரோன்கள் என்னும் நரம்பு உயிரணுக்களின் மையக்கருவான நியூக்ளியசின் மேற்புறத்தில் ELLP என்னும் ஒரு வகை புரதங்கள் இருக்கிறது. 'ELLP' என்றால் மிக மிக நீண்ட ஆயுளை உடைய புரதங்கள் என்று பொருள். நியூக்ளியசிற்கு உள்ளேயும் அதற்கு வெளியேயும் என்னென்ன பொருள்கள் செல்ல வேண்டும் என்பதை தீர்மானிப்பதே இந்த புரதங்கள்தான். இதனால் இவற்றுக்கு 'போக்குவரத்து வழித்தட புரதங்கள்' என்று மற்றொரு பெயரும் உண்டு.

முக்கியமாக, நச்சுப்பொருள்கள் நியூக்ளியசிற்கு உள்ளே செல்லாமல் தடுப்பது இந்த புரதங்களே. உடலின் பிற புரதங்கள் சேதமடைந்தால் உடனே அவை புதிய புரதங்களால் நிரப்பப்படும். ஆனால், வேதியியல் மாற்றங்கள் மற்றும் பிற பாதிப்புகளால் ELLP புரதங்கள் சேதமடையும்போது அவற்றுக்கு மாற்றாக, புதிய புரதங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக, பல நச்சுப்பொருள்கள் நியூக்ளியசிற்கு உள்ளே சென்று நியூரோன்களின் உள்ளே இருக்கும் மரபுப்பொருளான DNAவை பாதிக்கின்றன. இதனால் மரபணுக்களின் செயற்பாடுகள் மாற்றப்பட்டு உயிரணுக்கள் மூப்படைகின்றன என்று கண்டறிந்துள்ளனர் மார்ட்டின் ஹெட்சர் தலைமையிலான ஆய்வாளர்கள்.

பொதுவாக, உடலிலுள்ள புரதங்களின் வயது 2 அல்லது 3 தினங்கள் மட்டுமே. அதாவது மூன்று நாள்களுக்கு பின்னர் அவை செயலிழந்து போகும். ஆனால் ELLP புரதங்களின் வயதோ மிக மிக அதிகம். உதாரணமாக, எலிகளின் உடலிலுள்ள ELLP புரதங்களின் வயதும் எலியின் வயதும் ஒன்று என்கிறார் மார்ட்டின் ஹெட்சர். இத்தகைய விசேட பண்புடைய ELLP புரதங்களையும், இவற்றுக்கும் மூப்படைதலுக்கும் தொடர்பு உண்டு என்பதையும் உலகில் முதன்முதலில் கண்டறிந்த பெருமை ஆய்வாளர் மார்டின் ஹெட்சரையே சேரும்.

மூப்படைதல் தொடர்பான இதற்கு முந்தைய ஆய்வுகளில், இயல்பான மரபணு செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களே மூப்படைதலுக்குக் காரணம் என்று கூறப்பட்டது. ஆனால், உயிரணுக்களின் நியூக்ளியசில் இருக்கும் ELLP புரதங்கள் பாதிப்படைவதால், நியூக்ளியசிற்கு உள்ளே நச்சுப்பொருள்கள் சென்று உள்ளிருக்கும் DNAவை சேதப்படுத்துவதாலேயே மரபணு செயற்பாடுகள் மாற்றமடைகின்றன என்று ஆய்வாளர் மார்ட்டின் ஹெட்சர் கண்டறியும் வரை, மரபணு செயற்பாட்டு மாற்றங்களுக்கான காரணம் என்னவென்று உலகின் பிற ஆய்வாளர்களுக்கு தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது.

(வளரும்)



# உளவியலும் ஆன்மிகமும்

■ இராம ஜெயபாலன்

மனித வாழ்க்கை மனம் சம்பந்தமானது. மனமே இயற்கையின் படைப்புக்களுக்குள் பெறுமானமுடையது. காரணம் விரிந்து கிடக்கும். இந்தப் பிரபஞ்சத்தையும் படைப்புக்களையும் ஆராய்ந்து பார்க்கவல்லது. மனம் உதாரணமாக நாம் ஒரு செயலைச் செய்தால் அதை மற்றவர்கள் பார்த்து ஆச்சரியப்படுவதையும கருத்துக் கூறுவதையும் விரும்புவோம். அதுபோல் இந்த இயற்கையும் தான் செய்த படைப்பாற்றல்களையும் பயன்களையும் அனுபவித்து அறிந்து பேசக்கூடியதாக மனிதரையே படைத்துள்ளது. மேலும் இயற்கைதான் வைத்த விதிகளை உணர்ந்து மனிதன் தானும் படைப்புக்களைச் செய்யக் கூடியதாகவே படைத்துள்ளது. எவ்வாறாயினும் இந்த இயற்கை எம்மைப் படைத்து இன்ப துன்பம் இரண்டையும் கொடுக்கிறது என்ற குற்றச்சாட்டுக்களும் இல்லாமலில்லை. மேலும் உளவியல் சம்பந்தமான பிரச்சினை களையும் கொடுத்து தீர்வையும் தருகிறது. எனவே படைப்பின் பரிணாமத்தில் மூளையையும், செயற்பாடு பரிணாமத்தில் மூளையையும் செயற்பாடுகளையும் உளவியல் பிரச்சினைகளையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

உயிரின பரிணாமத்தில தாவரங்களுக்கு மூளை இல்லை. உணர்வு மட்டுமே இருக்கிறது. இதனால் அவைக்கு மனம் இல்லை தவிர தமது உணவை ஒளித்தொகுப்பால் தாமே தயாரிப்பதால் அவைக்குப் பசியுமில்லை சுவையுமிலை. மேலும் இயற்கையே பல்வேறு தாவரங்களின் இனப்பரம்பலைச் செய்வதால் அவைக்குக் காமமுமில்லை. புணர்வு இன்பமுமில்லை. எனவே அவைக்கு இன்ப துன்பம் இரண்டுமேயில்லை. அவை தியாக அடிப்படையில் படைக்கப்பட்டன என்றாலும் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியின் கதை அனைத்து உயிர்கள் மீதான கருணையேயாகும்.

மற்ற உயிர்களையும் மனத்தின் தோற்றத்துடன் மனிதனையும் உளவியல் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு முன்னோடியாக மூளைபற்றி ஆராய்ந்தால் மூளை தனது செயற்பாட்டை மூன்று பிரிவுகளாக கூறலாம்.

(வள்ரும்)

# பெற்றோர்களே! பிள்ளைகளே!
# சற்று நில்லுங்கள்...சிந்தியுங்கள்..

உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். சிறு விதை தானே என்று அலட்சியம் செய்தால் நாளை மரமானதும் எப்படி இருக்கும். எந்த விதையினுள் என்ன எப்படி இருக்கும் என்று யாருக்குத்தான் தெரியும். ஆனால் ஒவ்வொரு சிறு விதைக்குள்ளும் இலைகளும், கனிகளும், கிளைகளும், காய்களும் இருக்கத்தான் செய்கின்றன. அதே போல் தான் பெற்றோர்களே உங்களுடைய பிள்ளைகளுக்குள்ளும் அநேக திறமைகள் இருக்கின்றன. ஆனால் பெற்றோர்களே! நீங்கள் அதனை உணர்வதில்லை.

பெற்றோர்கள் தங்களுடைய எண்ணங்களை பிள்ளைகளுக்கு விதைத்தால் பரவாயில்லை. ஆனால் பெற்றோர்களே தங்களுடைய எண்ணங்களை திணிக்கின்றார்கள். ஒரு விதைக்கு என்ன வேண்டுமோ அதை கொடுத்தால் போதுமானது. அந்த விதை நன்றாக வளர்ந்து பெரிய மரம் ஆகும். அழுத்தங்களை அதிகமாகக் கொடுப்பதால் [illegible] மட்டுமல்ல [illegible] தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இன்றில் இருந்தாவது புரிந்து கொள்ளுங்கள் பெற்றோர்களே சின்ன விதையும் பிள்ளைகளும் ஒன்றுதான் என்று.

எனினும் பெற்றோர்களின் நல்ல வழிகாட்டல்களை உதறிவிட்டு கெட்ட வழிகளில் சென்று தம்முடைய வாழ்க்கையை அழிக்கும் பிள்ளைகளே! பெற்றோர் சொல்லி புரியாதது எல்லாம் ஒருநாள் வாழ்க்கை புரிய வைக்கும். அப்பொழுது புரிந்து கொண்டால் காலம் கடந்தது மட்டுமல்லாமல் வலிக்கவும் செய்யும். அந்தத் தருணத்தில் உன்னை தாங்கிப் பிடிக்கப்போவது உன் முதல் நலன் விரும்பி பெற்றோர்கள்தான். இதனை சற்று நின்று சிந்தனை செய்யுங்கள்.. [illegible] இனியதாக அமைய உங்களில் ஒருவனின் வாழ்த்து.



சோ.துஷ்யந்தன்
கொக்குவில்.



பெற்றோர்கள் தங்களுடைய எண்ணங்களை பிள்ளைகளுக்கு விதைத்தால் பரவாயில்லை. ஆனால் பெற்றோர்களே தங்களுடைய எண்ணங்களை திணிக்கின்றார்கள். ஒரு விதைக்கு என்ன வேண்டுமோ அதை கொடுத்தால் போதுமானது. அந்த விதை நன்றாக வளர்ந்து பெரிய மரம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நடப்புகள் ஒரு பார்வை

# எல்லையில் அமைதி திரும்பியது

## சீன- இந்திய உறவு வலுப்பெறும் அறிகுறி

■ ரெங்கன்

சீனாவுடன் உறவுகளை பலப்படுத்திக் கொள்ள இலங்கை முற்படுவதானது சுயநலத்தின் அடிப்படையிலானது என்பது விமரிசகர்கள் கருத்து.

சீர்குலைவுக்குள்ளாகியுள்ள பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள சீனாவின் உதவி தேவை. ஆஸியாவில் பெரிய அளவிலான அரசியல் பொருளாதார பிரச்சினைகள் தோன்றும்போது இலங்கையிடமிருந்து பெரிதாக எதனையும் சீனா எதிர்பார்க்கமாட்டாது.

சீனாவிடமிருந்து இலங்கை பொருளாதார மற்றும் சர்வதேச மட்டத்திலான ஆதரவுகளை நாடி நிற்பதன் தாற்பரியம் சீன தலைமைக்கு நன்கு தெரிந்த விடயமே. இலங்கையில் தலைதூக்கியுள்ள சிறுபான்மையோர் பிரச்சினையில் இந்திய தலையீட்டின் சிக்கல் சீன தலைமைக்கு புரியாமலும் இருக்க முடியாது. சீன- இந்திய எல்லை விவகாரத்தில் எழுந்துள்ள முறுகலை இலங்கை பயன்படுத்திக் கொண்டு சீனாவை தன்வசப்படுத்தி இந்தியாவை நெருக்க முனைவதாயின் அதன் அடிப்படையிலான சுயநலத்தையும் சீனா புரிந்து கொள்வது கடினமான விடயமல்ல. எனவே இலங்கையின் இனப்பிரச்சினை மீது இந்தியாவை சீனாவின் மூலம் நெருக்க முயல்வதானது சீரிய ராஜதந்திரமாக கருதப்படமாட்டாது.

இலங்கையுடனான உறவை விட இந்தியாவுடனான உறவை மேம்படுத்திக் கொள்வதையே சீனா அதிகமாக விரும்பக் கூடும். அதுவே ஆஸியாவின் எதிர்காலத்துக்கு தூரநோக்கில் பயனுள்ளதாக இருக்கும். அந்த வகையில் இந்தியாவுடனான உறவை மேம்படுத்திக் கொள்வது குறித்து சீனா அதிகமாக சிந்திப்பதாகத் தெரிகின்றது.

இலங்கையில் எந்த ஒரு கட்சியும் தொடர்ச்சியாக பதவியில் இருந்ததில்லை. மாறி மாறி பதவிக்கு வரும் கட்சிகள் தம் அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளையும் மாற்றிக் கொள்கின்றன.

சீனப் பிரதமர் லி கெசியாங் பதவி ஏற்றதன் பின்னர் முதல் பிரயாணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டதும் இந்தியாவில் அவர் வெளியிட்ட கருத்துகளும் இந்திய உறவை அவர்கள் எவ்வளவு தூரம் மதிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளன. அந்த வகையிலேயே இந்தியாவின் நிலைப்பாடும் இருப்பதாகக் கருத இடமுண்டு.

சீன பிரதம மந்திரி லி கெகியாங் தமது நாட்டின் பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் முதலாவது வெளிநாட்டு பிரயாணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டதன் முக்கியத்துவம் இப்போது இந்த இரண்டு அணு சக்தி நாடுகளிலுமே பெரிதாக உணரப்படுகின்றது.

இரண்டு நாடுகளுக்குமிடையில் எல்லைப் பிரச்சினையொன்று பூதாகரமாகி இரு பக்கத்தில் மட்டுமன்றி அண்டை நாடுகளிலும் பதற்றத்தை உருவாக்கியிருந்த நிலையில் அந்தப் பதற்றம் இப்போது தணிந்திருக்கிறது. கையோடு லீயின் இந்தியப் பயணம் நடைபெற்றுள்ளது.

புதுடில்லியில் வந்திறங்கியதுடன் லீ வெளியிட்ட கருத்து பி.பி.சியில் ஒலிபரப்பப்பட்டது.

புதிய பதவி ஏற்றவுடனேயே தமது முதல் பயணத்துக்காக இந்தியாவை தேர்ந்தெடுத்ததிலிருந்து இந்தியாவுடனான உறவுக்கு பெய்ஜிங் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பது புலனாகும் என்று லீ கூறியிருந்தார்.

இந்திய பயணத்தையடுத்து லீ பாகிஸ்தானுக்குத்தான் போயிருக்கிறார். இலங்கையைப் பற்றி அவர் அக்கறைப்பட்டதாக தெரியவில்லை. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் இருந்துவரும் எல்லைப் பிரச்சினை அண்மையில் சீனத் துருப்புகள் திடீரென ஊடுருவி இந்தியப் பகுதியில் முகாம்கள் அமைத்ததைத் தொடர்ந்து விரிவடையக் கூடிய அபாயம் தோன்றியது.

இந்திய எல்லைக்குள் சுமார் 20 கிலோமீற்றர் தூரம் (12 மைல்) சீன துருப்புகள் ஊடுருவி கூடாரங்கள் அமைத்துக்கொண்டிருப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்த ஊடுருவலையடுத்து சுமார் மூன்று வார காலம் இரு தரப்புக்குமிடையில் அதிகார தரப்பில் பேச்சுக்கள் இடம்பெற்றன. சீன படைகளை அப்புறப்படுத்த இந்திய தரப்பில் படை நடவடிக்கை எடுப்பது குறித்தும் உயர் மட்டத்தில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்டது போல் பெரும் போர் ஒன்று எல்லையில் வெடித்துவிடுமோ என்று அஞ்சப்பட்டது. இறுதியில் இரு தரப்பு படைகளும் குறிப்பிட்ட இடங்களில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன. அதனால் பெரும்போர் தவிர்க்கப்பட்டு பதற்றம் நீங்கியது.

ஆஸியாவின் மிகப் பெரிய நாடுகளான சீனாவும் இந்தியாவும் அமைதியைப் பாதுகாத்துப் பேணுவது முழு ஆஸியாவுக்குமே நல்ல என்பது நிபுணர்களின் கருத்து.

நில அமைப்பில் மனித வளத்தில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டு நாடுகளும் ஒன்றை ஒன்று மீறும் வகையில் முன்னேறி வருகின்றன. அரசியல் அமைப்பில் வெவ்வேறு முறைகளைக் கொண்டிருந்தாலும் இரு நாடுகளுமே அணு ஆயுத வல்லரசுகளாக விளங்குகின்றன. இந்த நிலையில் தமக்கிடையில் இருக்கும் தகராறுகளை பேச்சுக்கள் மூலம் விரைவாக தீர்த்துக் கொள்ள இருநாட்டுத் தலைவர்களுமே முன்வந்திருப்பது வரவேற்க வேண்டிய விடயம் ஆகும்.

சீன பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுக்களின்போது அமைதி, சமாதானம் நிலைத்திட வேண்டும் என்ற தனது அர்ப்பணிப்பான சிந்தனைக்கு ஏற்ப இரு நாடுகளுக்குமிடையில் பலகாலம் தீர்க்கப்படாமல் இருந்து வரும் பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கைகளில் இறங்குவது என்று இருவரும் இணங்கியிருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார்.

### சிறப்பு பிரதிநிதிகள் விரைவில் சந்திப்பர்

எமது சிறப்பு பிரதிநிதிகள் விரைவில் சந்திப்பார்கள். எல்லைகள் தொடர்பாக நியாயமான இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான ஒரு தீர்வை எட்டுவதற்காக ஒரு முன்வடிவை அவர்கள் உருவாக்குவார்கள். இது குறித்து நாங்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளோம் என்றார் மன்மோகன்சிங்.

1962 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு யுத்தத்தையடுத்து எல்லைப் பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதற்கென இரு தரப்பும் ஒப்பந்தங்களைசெய்துகொண்டுள்ளன. ஆனால் எல்லைகளை குறிப்பதற்கான எல்லைக்கோடு எதுவும் முறையாக நிர்ணயிக்கப்படவில்லை.

இரு தலைவர்களும் நடத்தியுள்ள பேச்சுக்கள் மிக சுமுகமாக நடைபெற்றுள்ள அதேசமயம் இருதரப்பு வர்த்தகங்களை விஸ்தரிப்பது மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பாகவும் இரு தலைவர்களும் ஆலோசித்துள்ளனர்.

இரு தரப்பு பிரதிநிதிகளும் விரைவில் சந்தித்து எல்லை நிர்ணயம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்று தெரிவித்த இந்தியப் பிரதமர் சீனாவுக்கு வரும்படி தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை தாம் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம் என்று கடந்த திங்களன்று புதுடில்லியில் கூறிய சீன பிரதமர் அவைகளை முறையாக அணுகி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

சீன பிரதமர் தமது முதல் பிரயாணத்தை இந்தியாவுக்கு வைத்துக் கொண்டது பற்றி இந்திய உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்ட போது இந்த சமிக்ஞை குறித்து இந்தியா மிக உயர்வான கருத்து கொண்டிருக்கிறது என்றார்.

உலக மக்கள் தொகையில் 3 பங்கினரின் தாயகமாக விளங்கும் இந்த இரு நாடுகளும் 2015 ஆம் ஆண்டளவில் தங்களுக்கிடையிலான வர்த்தக பெறுமதியை 100 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு உயர்த்திக் கொள்வதற்கு முடிவு செய்துள்ளன.

சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்வதின் மூலம் உலக பொருளாதாரத்துக்கு ஒரு புதிய இயந்திரமாக இரு நாடுகளும் விளங்க முடியும் என்று கூறியுள்ளார் சீனப்பிரதமர் லீ.

### இந்திய வர்த்தகர்களுக்கு சீனாவில் சந்தை வசதி

புதுடில்லியில் இந்திய வர்த்தக பிரமுகர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் இரண்டு நாடுகளுக்குமிடையில் காணப்படும் வர்த்தக பற்றாக்குறையை நிவர்த்திக்க முயல்வதாகவும் சீனாவில் இந்திய வர்த்தகர்களுக்கு புதிய சந்தை வசதிகள் செய்து தருவதாகவும் லீ உறுதியளித்தார்.

வர்த்தக பற்றாக்குறை தொடர்பாக இந்திய கவலைகளை பொறுத்தவரை சீன சந்தைகளில் அதிக இந்திய பொருள்கள் கிடைப்பதற்கான வழிகள் செய்து கொடுக்க சீன தரப்பு ஆயத்தமாக இருக்கிறது என்றார்.


உலகின் மிகக் கூடிய மக்கள் தொகைகளைக் கொண்ட இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவுகள் நிலவுவதற்கு வர்த்தக சமத்துவம் இருப்பது அவசியம் என்பதை சீனா உணர்கிறது என்றார். வர்த்தக மேலாதிக்கத்தை முன்னெடுக்கும் எண்ணம் சீனாவுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. வேகம் மிகுந்த வர்த்தக சமநிலைதான் நிலையான வர்த்தக உறவுகளுக்கு அவசியம் என்றார் சீனப்பிரதமர் லீ கெகியாங்.

### சீன உறவை பலப்படுத்த வட கொரியா முயற்சி

வடகொரியா மிக மிடுக்கோடு அணுகுண்டு மற்றும் தொலைதூர ஏவுகணை சோதனைகளை நடத்தி அமெரிக்காவையும் தென்கொரியாவையும் அச்சுறுத்த முயன்றுள்ள போதிலும் அதன் நெடுங்கால நட்பு நாடான சீனாவை பகைத்துக் கொள்வது தன்னை மேலும் தனிமைப்படுத்திக் கொள்வதாக அமைந்துவிடும் என்பதை இப்போது உணரத் தலைப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கடந்த பல காலமாக உலகின் பல நாடுகளால் ஒதுக்கப்பட்டு பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்டு வந்துள்ள வடகொரியாவுக்கு சீனாவே பிரதான நட்பு நாடாகவும் பொருளாதார உதவியாளராகவும் இருந்து வந்துள்ளது. ஆனால் கடந்த வருடம் நீண்ட தூர ஏவுகணை சோதனைகளையும் கடந்த பெப்ரவரியில் அணு குண்டுச் சோதனைகளையும் வடகொரியா நடத்தியதைத் தொடர்ந்து அதன் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் திட்டத்தை சீனா ஐ.நாவில் ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்தது.

ஐ.நா. பொருளாதாரத் தடையானது கொரிய தீபகற்பத்தில் இராணுவ மட்டத்திலான பதற்றம் விரிவடைவதற்கு ஏதுவாயிற்று. அதனால் தனது நெருங்கிய நட்பு நாட்டின் மீது சீனா நெருக்குதல்களை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்பட்டன. அந்த வகையில் ஐ.நா. தீர்மானத்துக்கு அமைவாக வடகொரியா சீனாவில் மேற்கொண்டு வரும் நிதி ரீதியிலான நடவடிக்கைகளை சீனா கட்டுப்படுத்த வேண்டியும் ஏற்பட்டது. சீனாவில் வடகொரியா மேற்கொண்டு வரும் நிதி நடவடிக்கைகள் மூலமே அதன் அணு ஆயுதத் திட்டத்துக்கான பிரதான வருவாயை வடகொரியா தேடிக் கொள்கிறது என்பது சர்வதேச சமூகத்தின் கருத்தாகும். இந்த நிலைமையில் தான் சீனாவுடனான உறவினை மீளவும் சீர் செய்து கொள்வதற்காக வடகொரியா அதன் தலைவர் கிம் ஜொங்- அன் அவர்களின் சிறப்புப் பிரதிநிதியாக உயர்மட்ட ராணுவ பிரதிநிதி ஒருவரை இப்போது சீனாவுக்கு அனுப்பியுள்ளது. வடகொரிய மக்கள் ராணுவத்தின் உயர் பீடப் பணிப்பாளரான சோறியவோங்- ஹே என்பவர் அவசரமாக பேஜிங்கிற்கு பறந்து சென்றுள்ளார். 2011 ஆம் ஆண்டு ஒகஸ்டில் அதிபர் கிம் ஜொங் இல் சீனாவுக்குச் சென்றதன் பின்னர் செல்லும் மிக உயர் மட்ட இராணுவத் தலைவர் இவர் என்று கருதப்படுகின்றது.



“ ஆஸியாவின் மிகப் பெரிய நாடுகளான சீனாவும் இந்தியாவும் அமைதியைப் பாதுகாத்துப் பேணுவது முழு ஆஸியாவுக்குமே நல்ல என்பது நிபுணர்களின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிரன்

# உடைந்தது குட்டு

மனித உரிமை விடயங்களிலும் பொது மக்களின் பாதுகாப்பிலும் பெரும் அக்கறை செலுத்துவதாக அரசு அடிக்கடி கூறிக் கொண்டாலும் சர்வதேச ரீதியில் அதற்கு ஏற்பட்டுள்ள அவப்பெயரை நீக்க முடியாத நிலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வெறும் வாய்ச் சொல்லில் அரசு இவற்றை எடுத்துரைத்தாலும் செயலில் அவை பூச்சியம் என்ற நிலையிலேயே தொடர்ந்தும் உள்ளன. இந்த விடயங்களில் ஏற்ற இறக்கம் எதுவுமில்லை.

லண்டனைத்தளமாகக்கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை இலங்கை அரசின் தற்போதைய செயற்பாடுகளையும் போக்குகளையும் அதன் முன்னேற்றங்களையும் தெளிவாக எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை உலகளாவிய மனித உரிமை விடயங்களில் கவனம் செலுத்திவரும் நிறுவனம். உலக நாடுகளில் நடக்கும் அநீதிகளையும் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் தீர விசாரித்து ஆதாரங்களைத் திரட்டி அதன்படி அவற்றில் ஈடுபடும் அரசுகளைக் கண்டித்து வருகிறது அது. அத்துடன் சர்வதேச ரீதியில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அரசுகளை இனங்காட்டி அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளையும் முடுக்கிவிடும் ஓர் அச்சாணியாக உள்ளது. உலக நாடுகளில் நடைபெறும் உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கும் பிராந்திய ரீதியாகக் கண்காணிப்பாளர்களை நியமித்து அவர்கள் ஊடாக அந்த நாடுகளில் நடக்கும் அநீதிகள், குற்றமிழைப்புகள் போன்ற தகவல்களைத் திரட்டுவதுடன் அவை மேலும் தொடராமல் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளையும் இந்த சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொண்டு வருகிறது. இந்த அமைப்பு இப்போது இலங்கை விடயத்தில் அதிக அக்கறையும் சிரத்தையும் எடுத்து செயற்பட்டுவருகின்றமையை அண்மைக்காலமாக நாம் ஊடகங்கள் மூலம் அறிந்திருக்கிறோம். இலங்கை அரசின் அராஜகப் போக்கு, அத்துமீறல், போர்க் குற்றம், மனித உரிமை மீறல் ஆகியவற்றைக் கண்டித்து அண்மைக்காலமாக மன்னிப்புச் சபை பல்வேறு அறிக்கைகளையும் வெளியிட்டிருக்கிறது.

இந்த அமைப்பின் ஆகப் பிந்திய அறிக்கை நேற்று வெளியானது. உலக நாடுகளில் நடக்கும் மோசமான உரிமை மீறல்கள் குறித்து நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மன்னிப்புச் சபை பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. நேற்று வெளியான அறிக்கை இலங்கை தொடர்பாகவே அதிகளவான குற்றச்சாட்டுக்களை அடுக்கியுள்ளது. அதிலும் குறிப்பாக இலங்கை அரசின் மீதே இந்த அமைப்புக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியில் இலங்கையின் முகத்திரையை மீண்டும் ஒரு முறை கிழிக்கும் வகையில் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது. அந்தளவுக்கு அரசு மீது மோசமான - பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை.

இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

இந்தக் குற்றங்களைப் புரிந்தவர்கள் மிகச் சுதந்திரமாக நாட்டுக்குள் உலா வருகிறார்கள் என்று இலங்கை தொடர்பான பகுதியின் ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை. கட்டாயமாக காணாமற் போகச் செய்தல் இலங்கையில் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கடந்த ஆண்டும் 20 இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அரசியல்வாதிகள், வர்த்தகப் பிரமுகர்கள், சந்தேகத்துக்கிடமான குற்றவாளிகள் ஆகியோர் அடங்கியிருக்கின்றனர். அரசின் ஆசீர்வாதத்துடனேயே இந்தச் செயல்கள் இடம்பெறுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டத் தவறவில்லை. [illegible] பான பொறுப்புக் கூறும் கடப்பாடுகளை இலங்கை அரசு தொடர்ச்சியாக நிராகரித்து வருவதாகவும் இவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் மனித உரிமை பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள், நீதித்துறை சார்ந்தோர் ஆகியோர் அரசினாலும் அரச அதிகாரிகளாலும் மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் சிலர் உயிர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் இந்த நிலைமைகளை களைவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அரசு ஒரு சிறு துளி கூட நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மன்னிப்புச் சபையின் அறிக்கை மிகக் கடுமையாகச் சாடியுள்ளது. சித்திரவதைகளும் சட்டத்துக்கு முரணான தடுப்புகளும் பெருமளவில் இடம்பெறும் அதே நேரம் சந்தேகநபர்களைக் கைது செய்து எத்தகைய குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் நீண்ட காலத்துக்குத் தடுத்து வைப்பதற்குப் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தை அரசு ஆயுதமாகக் கையாள்கிறது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கை அரசினாலும், அரச படைகளாலும், அரச ஆதரவுக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து அடாவடித்தனங்களையும் அப்பட்டமாகப் புட்டு வைத்திருக்கிறது மன்னிப்புச் சபை. இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து கொண்டே போனால் சர்வதேச சமூகத்திலிருந்து இலங்கை புறம் ஒதுக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அது எச்சரிக்கை விடுத்திருக்கிறது. மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கையை இலங்கை அரசு கவனத்தில் எடுக்குமா என்பது கேள்விக்குரிய ஒன்றாக இருந்தாலும் சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்களால் இலங்கைக்கு நெருக்கடி மேலும் வலுக்கும் என்பது திண்ணம். ஆகவே அரசு இந்த விடயத்தை எப்படிக் கையாளப் போகிறது என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.

> இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டபோதும் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை விசாரணைக்கு உட்படுத்தப் படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org